Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.




புத்தகம் 10 துர்முகி ஹூ பங்குனி மாதம் 4 திகதி 17-3-57 ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் பிறை 14 இதழ் 41

# தேர்தல் கமிஷனராக பிரதமரின் உறவினர்?

## அதிகாரிகளிடையேயும் மற்றும் அரசியல்வாதிகளிடையும் அதிருப்தி

### பாராளுமன்றத் தேர்தல்களில் சூழ்ச்சிகள் இடம் பெறுமா?

(சுதந்திரன் நிருபர்)

**பிரதமர் திரு பண்டாரநாயகாவின் நெருங்கிய உறவினர் ஒருவர் பாராளுமன்றத் தேர்தல் கமிஷனராக நியமிக்கப்படவிருக்கிறார் என்ற செய்தி அரசியல் வட்டாரங்களிடையே அதிருப்தியையும் கவலையையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.**

யு. என். பி. ஆட்சியிலிருந்த காலத்தில் திரு. ஏ. அருள்பிரகாசம் என்ற ஒரு தமிழர் பாராளுமன்றத் தேர்தல் கமிஷனராகக் கடமையாற்றினார். இவர் சேர் ஜோன் கொத்தலாவலையின் கையாளாகவிருந்து பொதுத் தேர்தல் தேதிகளை ஆளுங்கட்சிக்கு அனுசரணையாக அமைத்தார் என்று அப்போது பலமான புகார் அடிபட்டது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். எம். ஈ. பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் இவர் அப்பதவியிலிருந்து இளைப்பாறி விட்டார்.

திரு அருள்பிரகாசம் தாமாகவே இளைப்பாறினர் என்று சிலரும், இளைப்பாறும்படி எம். இ. பி. ஆட்சியினரால் நிர்ப்பந்திக்கப்பட்டார் என்று வேறு சிலரும் பேசிக் கொள்ளுகிறார்கள். திரு அருள்பிரகாசம் இப்போது 'லேக் ஹவுஸ்' ஸ்தாபனத்தில் வேலை பார்க்கிறார் என்று தெரிகிறது. தினகரன் ஆசிரியர் குழுவை மேற்பார்வை செய்வது இவருடைய வேலையாம். இந்த 'லேக் ஹவுஸ்' வேலையை சேர் ஜோன் கொத்தலாவலை, திரு ஜே. ஆர். ஜயவர்த்தன ஆகியோரின் சிபார்சின் பேரில்தான் திரு அருள்பிரகாசம் பெறமுடிந்தது என்றும் சொல்லப்படுகிறது.

திரு அருள்பிரகாசத்தின் இடத்தில் திரு டயஸ் அபயசிங்க என்ற ஒருவர் பாராளுமன்றத் தேர்தல் கமிஷனராக நியமனம் பெறப் போகிறாராம். இவருக்கு மேலாக பல சிரேஷ்ட அதிகாரிகளும், நீண்டகால சேவையுடையவர்களும் இருக்க திரு டயஸ் அபயசிங்காவிற்குப் பதவியேற்றம் அளிப்பது நியாயமற்றதாகும் என்று அரசாங்க சிவில் சேவையில் உள்ள பல உயர்தர அதிகாரிகள் அதிருப்தியடைந்திருக்கிறார்களாம்!

திரு டயஸ் அபயசிங்க, பிரதமர் திரு பண்டாரநாயகாவின் நெருங்கிய உறவினராய் இருப்பதால் அடுத்து வரக்கூடிய பொதுத் தேர்தலில் ஏதாவது சூழ்ச்சிகளைச் செய்வதற்குச் சாதகமாகவே திரு பண்டாரநாயகா இந்த நியமனத்தைச் செய்கிறாரோ என்ற கவலை அரசியல் எதிர்க்கட்சிகளிடையே ஏற்பட்டிருக்கிறது. இந்த நியமனம்பற்றிய பிரச்னை விரைவில் பாராளுமன்றத்தில் கிளறப்படலாம் என்று நமது நிருபர் தெரிவிக்கிறார்,

### சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி இல 36.

இதுவே எமது கடைசிப் போட்டி, இதில் எல்லோரும் பங்குபற்ற உற்சாகமளிக்குமுகமாக இதன் பரிசுத் தொகையை ரூ 1500 ஆக உயர்த்தியுள்ளோம். இப்போட்டிக்குரிய இலவச கூப்பன்கள் தேவைப்படுவோர் 10 சத முத்திரை அனுப்பி எமது காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். முடிவு திகதிவரை காத்திராமல் அதற்கு முன்னதாகவே விடைகளை அனுப்புமாறு நேயர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

—போட்டி ஆசிரியர்

## தபால் மந்திரியாரின் கிழக்குமாகாண விஜயம்

### பொலீஸ் எச்சரிக்கையினல் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது

### "தமிழ்ப் பிரதேசங்களில் தலை காட்டாதீர்" பிரதம மந்திரியின் பயமுறுத்தல் கட்டளை

(சுதந்திரன் நிருபர்)

**இவ்வார இறுதியில் தபால் ஒலிபரப்பு மந்திரி ஜனுப் வி. ஏ. எஸ். மரிக்கார் கிழக்கு மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்வதெனத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனல் அங்கிருந்து கிடைத்த பொலிஸ் எச்சரிக்கையின்படி இப் பிரயாணம் கடைசி நேரத்தில் கைவிடப் பட்டதாக சுதந்திரனுக்கு செய்தி கிடைத்திருக்கிறது.**

தபால் ஒலிபரப்பு மந்திரி இவ்வார இறுதியில் அதாவது 14-ந் திகதி முதல் 17ந் திகதி வரை கிழக்கு மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யத் திட்டமிட்டிருந்தார் என்று தெரிகிறது. ஏறூர், மட்டக்களப்பு, கல்முனை, இக்கினியாக்கலை, அம்பாறை ஆகிய இடங்களை அவர் தரிசிப்பதாக நிகழ்ச்சி நிரல் அமைத்திருந்தார்; அங்கு அவர் சில முஸ்லிம் ஸ்தாபனங்களின் விழாக்களிலும் பங்குபற்றுவதாக விருந்தார். ஆனல் மட்டக்களப்பிலிருந்து கிடைத்த பொலீஸ் எச்சரிக்கையின் பிரகாரம் இப்பிரயாணத்தை உடனடியாக ரத்து செய்யும்படி பிரதமர் பண்டாரநாயகா கட்டளை பிறப்பித்து விட்டார்.

அரசாங்கத்தைச் சேர்ந்த எந்தப் பிரமுகரும் தமது அனுமதியை ஏற்கனவே பெருமல் தமிழ்ப் பிரதேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடாதெனவும் மந்திரிசபை உறுப்பினரும் இதற்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டுமெனவும் பிரதமர் தமது கட்டளையில் குறிப்பிட்டுள்ளாராம்.

இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்வது பல எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும், வகுப்புக் கலவரங்களுக்கும் தூண்டுகோலாய் இருக்கும் என சம்பந்தப்பட்ட பகுதிகளிலுள்ள பொலிஸார் பிரதமருக்கு அச்சுறுத்தியிருக்கிறார்கள்.

இவ்வார இறுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற் குழுக் கூட்டமும் பல பொதுக் கூட்டங்களும் மட்டக்களப்புப் பகுதிகளில் நடைபெற விருப்பதால் தமிழரசுத் தலைவர்கள் அங்கு முகாமிடுவார்கள் என்றும் அப்போது தபால் மந்திரியார் அங்கு விஜயம் செய்வது பல அனர்த்தனங்களுக்குக்காலாய் அமையலாம் என்றும் மட்டக்களப்புப் பொலீஸார் சுட்டிக் காட்டியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

## லளித கலைக் கல்லூரியில் தமிழுக்கிடமில்லை

### போது விளம்பரப் பலகையில் சிங்களத்தில் மட்டும் பெயர்கள்

(நமது நிருபர்)

**எம். ஈ. பி அரசாங்கத்தின் மொழி வெறி அரசாங்க காரியாலயங்களைத் தாண்டி பன் மொழி பேசும் மாணவர்கள் பயிலும் கல்லூரிகளுக்கும் சென்றுவிட்டதாகச் சுதந்திரனுக்கு கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது. கொழும்பு லளித கலைக் கல்லூரியில் தனிச் சிங்களத்தின் அபரிமிதமான உபயோகம் அங்கு பயிலும் தமிழ் பேசும் மாணவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுக்குமளவுக்குப் போய்விட்டதாகவும் அதனல் அவர்கள் படும் அவஸ்தை கொஞ்ச நஞ்ச மல்லவென்றும் தெரிகிறது.**

மேற்படி கல்லூரியில் கடைசி வருடப் படிப்பை முடித்துக் கொள்ளவிருக்கும் மாணவர்களுக்கான இறுதித் தேர்வுப் பரீட்சை சமீபத்தில் நடக்கவிருக்கிறது. அதற்குத் தோற்றும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் சிங்களத்தில் மட்டுமே எழுதப் பட்டு விளம்பரப் பலகையில் மாட்டப்பட்டிருக்கிறதாம். இவற்றைப் படித்தறிந்து கொள்ள முடியாது தமிழ் பேசும் மாணவர்கள் திணறுவதாகவும் சிங்கள மாணவர்களின் உதவியை இது விஷயத்தில் நாடும் போது அவர்கள் தமிழ்ப் பேசும் மாணவர்களை இழித்துப் பழித்துவிட்டு, "சிங்களம் வாசிக்கத் தெரியாவிட்டால் நடையைக் கட்ட வேண்டியதுதானே" என்று நையாண்டி பண்ணுவதாகவும் கூறப்படுகிறது.

கல்லூரியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கூட இது சம்பந்தமாக எவ்வித கவலையும் கொள்ளாதிருப்பதாகவும் இதனல் அவர்களும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை நூற்றுக்கு நூறு வீதம் ஏற்றுத் தமிழையும் தமிழ் பேசும் மாணவர்களையும் லளித கலைக் கல்லூரியிலிருந்து படிப்படியாகத் துரத்தியடிக்க முற்பட்டிருப்பதாகக் கொள்ளவேண்டியிருக்கிறதென்றும் அங்கு பயிலும் தமிழ் பேசும் மாணவர்கள் அஞ்சுகின்றனர்.

இதனல் தமிழ் பேசும்மக்களுக்கெனத் தனியாக ஒரு லளித கலைக் கல்லூரியையும் தமிழ்ப் பிரதேசத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தலைவர்களை அவர்கள் வற்புறுத்த விருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

## காரைக்குடியில் கம்பன் விழா

காரைக்குடி கம்பன் கழகத்தார் பிரதி வருடமும் நடத்தி வரும் கம்பன் திருநாட் கொண்டாட்டங்கள் இம்மாதம் 14, 15, 16, 17ந் திகதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

காரைக்குடியில் நடக்கும் நான்கு நாள் விழா நிகழ்ச்சிகளிலும் இயல் இசை நாடக அம்சங்கள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன.

திருவாளர்கள்: அ. ச. ஞானசம்பந்தன், ம. பொ. சிவஞானம், ப. ஜீவானந்தம், தெ. பொ. மீனுட்சிசுந்தரனர் முதலான பல தமிழறிஞர்கள்... தமிழ்த்துப் பெரியார்கள் விழாவில் பங்குபற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

விழா நிகழ்ச்சிகளை சென்னை, திருச்சி ரேடியோ நிலையங்கள் ஒலிபரப்புகின்றன.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரளட்டும் ஈழத்து வீரத் தமிழ் மாதர் கூட்டம்!

## பைந்தமிழ்-நந்தமிழ் நாடு காக்க விடுதலைப் போருக்கு விரையட்டும்

## பண்டைத் தமிழ்ப் பாவையரின் வீரமும் மீன் பாடும் மட்டுநகர் மங்கையரின் தீரமும்

### திக்கெட்டு முள்ள தையலர்க்கு தெம்பளிக்கட்டும்

சங்ககாலம் — அது பண்பட்ட தமிழர் வாழ்ந்த பொற்காலம்! கல்வி—வீரம்-கற்பு—அறம் இன்ன பிறவற்றின் திறன் பாடும் திவ்விய நூல்கள் எழுந்த நற்காலம். சங்ககாலத்தில் ஆடவரும் பெண்டிரும் பைந்தமிழைப் பழுதறக் கற்றனர். கற்றபடி ஒழுகிப் பண்பும் அன்பும் அறமும் சிறக்கச் சீரிய வாழ்க்கை நடத்தினர்.

### கல்வியும் வீரமும் செறிந்த மாதர்

அக்காலத்தில் அரசமாதேவியர் முதல் குறத்தியர் ஈறுகப் பெண்பாலார் யாவரும் கல்வி கற்று அரசரோடு அரியாசனத்தில் அமரும் தகுதி பெற்றிருந்தனர் என்பதைப் பல பாடல்கள் தமக்கு எடுத்துக் காட்டுகின்றன. "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்த மென்னிலும் வேண்டேன்" என்று ஒரு பெண்பாற் புலவர் பாடியிருக்கின்றார். அவர்கள் தமது தாய்மொழியில் மிகுந்த பற்றுடையவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். மொழியை உயிராக எண்ணியும், நாட்டைப் பகைவர் தாக்கும் போது அதைக் காக்கும் வீராங்கனைகளாக மாறியும் பண்டைக்காலப் பெண்மணிகள் வாழ்ந்த வரலாறு இந்தஉலகத்திலுள்ள ஏனைய இனத்தவர்களுக்கு ஒரு முன்னேடியாக அமைந்திருக்கின்றது.

### கடமை

ஒரு தாயின் கடமை எத்தகையது? தந்தையின் கடமை என்ன? மன்னனின் கடமையும், மைந்தனின் கடமையும் எவை யெவை? இவற்றைச் சங்ககாலப் பாடல்களில் காணலாம்.

"ஈன்று புறந்தருதல் என்
தலைக் கடனே
சான்றோ னாக்குதல்
தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
ஒளிறு வாளருஞ்சமமுருக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே"

என்ற பாட்டு ஒரு பெண்மணியின் வாயிலிருந்து பிறந்தது.

மகனைப் பெற்று உலகுக்குத் தருதல் எனது கடமை. கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகிய மூன்றிலும் அவனைச் சிறக்கச் செய்வது தந்தையின் கடமை. அவனை நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்றவனுகச் செய்வது அரசனது கடமை. போரில் யானையைக் கொன்று வீரனுக விளங்குவது மகனின் கடமை. தமிழ்ப் பெண்மணி இந்தக் கடமைகளைக் கூறினுளென்றால் அவளின் — அவள் வழிவந்த தமிழ் மகளிர் வீரத்தை என்னென்பது! போர்க்களஞ் சென்று பகைவர்களது யானைகளை வெட்டி வீழ்த்தி வெற்றியோடு திரும்புவதே தம் மகன் கடமையெனப் பண்டைய தமிழ்த் தாய்மார்கள் கொண்டார்கள்.

**ந. சிவபாதம்**

### தமிழ்த் தாயின் தன்மான வீரம்

இளமையிலிருந்தே தாய்மார் தம் பிள்ளைகளுக்கு வீர உணர்ச்சியை ஊட்டி வந்தனர். தம் வயிற்றிற் பிறந்த மக்கள் வீரமும் ஆண்மையும் செறிந்தவர்களாய் இருக்கவேண்டுமென்பது அவர்களது குறிக்கோளாக விளங்கியது.

'உன் மகன் எங்கே?' என்று ஒருவர் ஒரு தமிழணங்கைக் கேட்டார். அதற்கு அவள் சொன்ன பதிலில் மான வீரம் மிளிர்கிறது. 'என் மகனையா தேடுகின்றாய்? புலியிருந்துசென்ற குகைபோல அவனைப் பத்து மாதமும் சுமந்து பெற்ற வயிறு இதுதான். அம்மைந்தன் இப்பொழுது போர்க்களம் போயிருக்கிறான். அங்கு சென்று காண்' என்றாள். இந்தப் பெண்ணின் தன்மான வீரமும், புலமையும், அறிவு மேம்பாடும் இன்று எங்கேசென்று அடங்கியதோ......?

### பெற்ற பொழுதினிற் பெரிதுவந்தாள்

வீரத் தமிழ்த் தாய்மார்கள் தம் மக்கள் பகைவருடன் நேர்நின்று போர் செய்து இறந்தபோதிலும் அதனுற் சிறிதும் உள்ளம் கலங்கிஞரல்லர். பகைவருக்கஞ்சி புறங்காட்டி ஓடாது எதிர்நின்று போர் புரிந்து வீரமரணம் எய்திய மகனின் மாண்பு கண்டபொழுது அவனைப் பெற்றவளது வாடிய முலைகளில் பால் ஊறிச் சுரந்தன என்றவாறு புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகின்றது. போரின் கண் என் மகன் புறமுதுகிட்டு ஓடியிருப்பின் அவனுக்குப் பாலூட்டிய இம் முலையை அறுத்திடுவேன் என்று வஞ்சினங்கூறிப் போர்க்களம் புகுந்து அங்குள்ள பிணக்குவியல்களைப் புரட்டிப் பார்த்தாள் ஒரு தமிழ்த் தாய். அப்போது தன் மகன் பிணமாகக் கிடந்தது கண்டு ஈன்ற பொழுது பெற்ற மகிழ்ச்சியிலும் பார்க்கப் பெரு மகிழ்ச்சி கொண்டாள் அவள் என்ற சம்பவத்தையும் புறநானூறு கூறுகின்றது.

### போருக்கு போய்வா மகனே

முதல் நாள் நடந்த போரில் தன்தந்தையும் மறுநாட் போரில் தன் கணவனும் போர்க்களம் சென்று போர்புரிந்து இறந்து போனுர்கள். அதனைக் கண்டும் சோர்வடையாத நெஞ்சோடு தன் குலத்தைக் காப்பதற்கு இருந்த ஒரு மகனையேனும் போர்க்களம் அனுப்பிப் பகைவர் கொட்டத்தை அடக்கத் துணிந்தாள் ஒரு தமிழ்த்தாய். தன் மகனை அன்போடு அணைத்து வெள்ளாடை உடுத்தி, வெண் பூச்சூடி, வேலைக் கையிற் கொடுத்து "நீ போய்வா மகனே போருக்கு" என்று கூறி அனுப்பிவைத்தாள். இத்தகைய பெண்களின் மானவீரத்தைப் புறநானூற்றுப் பாடல்கள் நமக்குப் படம் பிடித்துக்காட்டுகின்றன.

நம்தமிழ் நாட்டில் மொழி விடுதலை—இனவிடுதலை என்று பல திக்கிலிருந்தும் தமிழர் கூட்டம் திரண்டு முழங்கும் கோஷம் சுதந்திர உணர்ச்சிக்கீதம் வானை முட்டுகின்றது. சிங்களச் சிறீ சட்டமறுப்பில் மீன் பாடும் தேன் நாடாம் மட்டு நகர்ப் பெண்கள் காட்டிய அந்த மங்கையர் மான வீரம் பண்டைத் தமிழ்ப் பெண்களின் மான வீரத்தையும் மிஞ்சவதாய்த் தோன்றுகிறது. இந்த வீர உணர்ச்சி ஈழத் தமிழ் மாதர் அனைவருக்கும் உண்டாக வேண்டும்.

"ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும் என்று சூளுரைத்த கண்ணகி வழிவந்த கன்னியர் கூட்டம் தமிழ்—தமிழ்நாடு விடுதலையடைவதே தமது தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். வாழ்ந்தால் தமிழ்மக்கள் இருபத்தைந்து இலட்சமும் வாழ்வோம்; வீழ்ந்தால் ஆண்களுடன் பெண்கள் முழுமையும் வீழ்வோம்" என்று உறுதியோடு திரளட்டும் தமிழ் மாதர் கூட்டம்.


★ G. C. E. பரீட்சை
(ஆங்கிலமும், தமிழும்)

★ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பிரவேசப் பரீட்சை

ஆகிய வகுப்புகளுக்கு தபால் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ மேல் வகுப்புகளுக்கு ஆங்கில, தமிழ்க் கட்டுரைப் புத்தகம் ஒவ்வொன்றின் விலை ரூ. 3-00.

★ ஆங்கிலம்
★ ஹிந்தி

பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.


விபரங்களுக்கு,
சாந்தி கல்லூரி,
தபால் பெட்டி 1398.
கொழும்பு.



எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

இலங்கையின் மிக மிகப் பெரிய நகை வியாபாரிகள்

போன்: 161.



தந்தி: "ஜுவல்லர்ஸ்"

சிறந்த அழகு ★ சரிய வேலைப்பாடு

உயரிய கலைத்திறன் ★ உத்தரவாதம்

யாவும் அமைந்த தங்க நகைகளுக்கு யாழ்ப்பாணம்

தங்க மாளிகை


## தலைவர்களைப் பிரதேச வாரியாகத் திட்டி ஒற்றுமையைக் குலைக்கத் திட்டம்

### அரசியலாரின் ஏமாற்று வித்தையின் இரண்டாவது அங்கம் ஆரம்பம்

### ஏரிக்கரை பத்திரிகை வெளியிட்ட பட்டிருப்புப் பிரதிநிதியின் கட்டுரை

(நமது நிருபர்)

பொலிஸ் படை பட்டாளம் எதுவும் உதவாது போகவே, காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர்களின் உதவிகொண்டு தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கலாமென்று மனக்கோட்டை கட்டிய கையாலாகாத எம். ஈ. பி. அரசாங்கம் அதுவும் நடைபெறுதென்பதை நன்கு தெரிந்து கொண்டதால் இப்பொழுது ஒரு புது வழியைக் கண்டுபிடித்திருப்பதாகச் சுதந்திரனுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

தமிழர்களை யாழ்ப்பாணத்துத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், திருகோணமலைத் தமிழர், மன்னூர்த் தமிழர், கொழும்புத் தமிழர், மலைநாட்டுத் தமிழர் என்று போலிப் பிரசாரங்களாற் பிரித்து வைத்து அவர்கள் பலத்தைக் குறைக்கலாமென்று எண்ணியது அரசாங்கம். ஆனுல் அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை. எங்கிருந்தாலும் தமிழர் தமிழரே என்ற உணர்ச்சி எல்லோர் மனதிலும் கொழுந்து விட்டெரிகிறது.

எனவே தமிழ் தலைவர்களைப் பிரதேசவாரியாகப் பிரித்தெடுத்து அவர்களைப் பிற பிரதேசங்களில் திட்டித் திரிய திட்டமிட்டிருக்கிறார்களாம். அதாவது யாழ்ப்பாணத் தலைவர்களை மட்டக்களப்பிலும் மட்டக்களப்புத் தலைவர்களை திருகோணமலையிலும், திருகோணமலைத் தலைவர்களை மட்டக்களப்பிலும் இப்படியே எல்லாத் தலைவர்களையும் அவரவர் பிரதேசந் தவிர்ந்த ஏனையவற்றிலெல்லாம் திட்டி அவர்கள்பால் பொதுமக்கள் வெறுப்புக்கொள்ளும்படி செய்யப்போகிறார்களாம்.

இத்திட்டத்தில் இன்னுமொரு விஷயம் இடம்பெறும் என்று தெரிகிறது. அதாவது திட்டப்படப்போவது தலைவர்கள் மட்டுமல்லாமல் ஒரு பாபமுமறியாத அவர்கள் பிரதேசங்களுமாகும்.

முக்கியமாக யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத் தலைவர்களுமே முதலில் வசைபுராணம் பாடப்படும் என்று தெரிகிறது. தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட எந்தப் போராட்டத்திலும் யாழ்ப்பாணத் தலைவர்கள் சுயநலத்தோடு நடந்து கொள்கிறார்கள் என்றும் அசம்பாவிதங்கள் எதுவும் யாழ்ப்பாணத்தில் நடவாமல் மற்ற இடங்களில் மட்டும் நடப்பதானுல் 'நடக்கட்டும்' என்ற மனப்பான்மையோடு அவர்கள் செயலாற்றுகிறார்கள் என்றும் அவர்கள்மீது பழிசுமத்தி பிரசாரம் செய்யப்படுமாம். இப்படிச் செய்வதனுல் இன்று தமிழ் பேசும் மக்கள் தமிழுக்காகவோ அல்லது தமிழ் பேசும் இனத்துக்காகவோ போராட்டம் நடத்தாமல் யாழ்ப்பாணத்தவரின்சேமாபிவிருத்திக்கே உழைக்கிறார்கள் என்று நம்ப வைக்கலாம் என்று அரசியலார் கருதுகிறார்களாம்.

அரசியலாரின் மேற்படி சதித் திட்டத்தின் முதல் நடவடிக்கையாகவே பட்டிருப்புப் பிரதிநிதி திரு எதிர்மன்னசிங்கம் சமீபத்தில் பத்திரிகைகளுக்கு இனத் துரோகக் கட்டுரைகள் எழுதத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை மக்களின் நலவுரிமைகளைப் பாதுகாக்கவல்ல அரசியல் அமைப்பே உண்மை ஜனநாயகமாகும்

## இன்று ஈழத்தில் நடைபெறுவது பெரும்பான்மையினரின் சர்வாதிகாரம்

## இந்தக் கொடுங்கோன்மையை எதிர்த்துப் போராடுவது நீதியும் கடமையுமாகும்

(வண. எம். ஏ. இரத்தினராஜா, பி. ஏ., பி. டி.)

சுதந்திர காலந்தொட்டே சமுதாயங்கள் பல தம் விடுதலைக்காகப் போராடி வந்திருக்கின்றன. விடுதலை என்பது மனிதனுடைய பிறப்புரிமையாகையால், அவ்வுரிமையைப் பறிக்க முயலும் எவ்வித அதிகாரத்தையும் அவன் ஆதிமுதல் எதிர்த்தே வந்திருக்கிறான்.

### கொடுங்கோல் ஆட்சி

சமுதாயத்திலே மனிதனை எதிர்க்கும் சக்தி பயங்கரமான ஆட்சி வடிவாகவந்திருக்கிறது. ஆரம்பத்திலே அது ஓர் கொடுங்கோல் ஆட்சியாக இருந்துவந்தது. சுயநலம் கொண்ட மன்னன் ஒருவன்சூழ்ச்சிகளாலும்வஞ்சனையாலும் அடக்குமுறை செய்யும் ஆட்சியைப் பெறுகிறான், தனக்கு வேண்டியோரைச் சேர்த்து வேண்டாதாரை ஒடுக்கி வருத்துகிறான். வேண்டாதார் சிறுபான்மையினராய் ஒதுக்கப்பட அவர்களது பிறப்புரிமைகள் யாவும் பறிமுதலாகின்றன. இச் சர்வாதிகாரத்தில் மன்னனுக்குப் பந்தம் பிடிக்காத வீர சந்ததியார் அவனது ஆட்சியை எதிர்த்துத் தம் உரிமைக்காகப் போராடுகின்றனர். "கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில், கடும் புலி வாழுங் காடு நன்றே" என நாடு விட்டுக் காடு போனோரும் சிலர்.

இக் கட்டம் இன்றைய சரித்திரத்திலேயே கடந்துவிட்டது. நாடுகள் பல தம்மை ஒடுக்கியாண்ட மன்னர்களை ஒழித்துக் கட்டி, அவர்கள் கையினின்றும் தமது பிறப்புரிமையானவிடுதலையைப் பெற்றுவிட்டது.

இவ்வகையிலே 18-ம் 19-ம் நூற்றாண்டுகள் மனித சரித்திரத்திலே மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. "பிரெஞ்சுப் புரட்சி" (French Revolution) யோடு தொடங்கிய மனித உரிமைப் போராட்டங்கள்நாடுகள் பலவற்றிலும் பரவி, மன்னன் ஆட்சியை ஒழித்து, மக்களாட்சியை அமைத்திருக்கின்றன. இலங்கை மக்களாகிய நமக்கும் "காலை ஓர் மன்னன் மாலை ஓர் மன்னன்" என்ற கட்டம் போய் பாராளுமன்ற ஆட்சி பலித்திருக்கிறது.

ஒரு தீமை ஒழிய, அதனை ஒழித்துக் கட்டிய சக்திகளே வேறு தீமைக்குக் காரணமாய் மாறுகின்றன என்பது மனித அநுபவ உண்மை. ஆகவே, மனிதனது விடுதலைப் போராட்டமும் புதுப் புதுத் தீமைகளுக்கு எதிராகத் தீவிரமாய் நடந்துகொண்டே போக வேண்டியிருக்கிறது. இன்றைய "நன்மை" நாளைய 'தீமை' யாக மாறுவதால், மனித போராட்டமும் ஓர் முடிவில்லாப் போராட்டமாகவே இருக்கிறது. இப்பெரும் உண்மையை அரசியல் உலகிலே நாம் நன்கு காணமுடியும். கொடுங்கோல் மன்னனின் கொடிய ஆட்சியை ஒழித்துக்கட்டி, மக்களாட்சியை அமைக்க உதவிய சக்திகளான மார்க்கம் ஜனநாயகம் என்பன மறுபடியும் மக்களை ஒடுக்கும் சர்வாதிகார சக்திகளாய் மாறிவிட்டன. இவற்றால் இன்னல் விளைவிக்கப்படும் மக்கள், அதாவது கூடியமார்க்கம், கூடிய கட்சி என்பவற்றில்சேராதமக்கள் சிறுபான்மையினராய் ஒடுக்கப்பட்டு, பெரும்பான்மையினரால் தம் சுய நலனுக்காக ஆளப்படுகின்றனர்.

இவ் விசித்திர நிலையையே இன்று நமது நாட்டில் நாம் காண்கிறோம். சொந்த மன்னர்களை விட்டு போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய ஆட்சிகளையும் அகற்றிவிட்டு "சுதந்திரம்" என்னும் போர்வை போர்த்த ஓர் புதிய சகாப்தத்துள் நாம் வந்திருக்கிறோம். கொடுங்கோல் ஆட்சி ஒழிந்துபோனாலும், பொறுப்பற்ற மார்க்கம், கூடிய கட்சி என்னும் இரு பெரும் சர்வாதிகாரத் திட்டங்களுள் நாம் இன்று அகப்பட்டிருக்கிறோம். இவ்விரு திட்டங்களுமே இலங்கை வாழ் சிறுபான்மையினரை இன்று அடக்கி ஒடுக்கும் கருவிகளாயிருக்கின்றன.

### பொறுப்பற்ற மார்க்கம்

முதலாவதாக பொறுப்பற்ற மார்க்கம் எவ்வகையிலே இன்று சிறுபான்மையினரை அடக்க முயல்கிறது என்பதை ஆராய்வோம்: மார்க்கம் மனிதனுக்கு இன்றியமையாதது. மனிதன் மனிதனாக வாழவேண்டுமேயானால், அவன் தான் கடைப்பிடிக்கும் மார்க்கம் சத்தியத்தை உண்மையோடும் உள்ளான கருத்தோடும் கடைப்பிடிக்க வேண்டியவனாயிருக்கிறான். அவ்வாறு மார்க்கம் அநுசரிக்கப்படும்போது, அது மனிதஜாதிக்கே விமோசனம் அளிக்கும் ஓர் உன்னத சக்தியாக மாறுகிறது. ஆனால் ஒருவன் தன் மார்க்கத்தை, தன் சுயநன்மைக்கும், புகழுக்கும் அந்தஸ்துக்கும் உபயோகிக்கும் போது, அவனது மார்க்கம் எவ்வித அருளுமற்ற, மிலேச்சத்தனமான ஓர் அதிகாரமாய் மாறுகிறது. அவ்வித மார்க்கத்தால் ஏற்படும் இன்னல்களும் அநேகம், அதனையே, பொறுப்பற்ற கொடூர மார்க்கம் என இங்கு குறிப்பிடுகிறோம்.

இலங்கையிலே இன்று இவ்வித நிலைமை வந்துவிட்டது. கண்ணியத்தையும் காருண்ணியத்தையும் போதித்து, நீதி நியாயம் என்பவற்றுக்காகப் போராட வேண்டிய மார்க்க தலைவர்களும் மார்க்க குருமாரும் தங்கள் மார்க்கம் என்னும் தோரணையிலே ஜாதி மதத்துவேஷ பிரச்சாரங்களை அள்ளி வீசுவதை நாம் இன்று காண்கிறோம். அவற்றை நம்பும் பாமர மக்கள் உணர்ச்சி வேகத்தினால் உந்தப்பட்டவர்களாய்ப் பலவித அட்டூழியங்களில் ஈடுபடுவதையும் நாம் காண்கிறோம். கடந்த சில மாதங்களுள் நம் நாடு அநுபவித்த எத்தனையோ தீமைகளுக்கு இவ்வித மார்க்க தலைவர்கள் எவ்வகையிலே காரணராயிருந்தனர் என்பது நாம் இங்கு கூறாமலே விளங்கும். இன்று தோன்றியுள்ள பிக்குகள் ஐக்கிய முன்னணி போன்ற இயக்கங்களின் நடவடிக்கைகளும், அவை எவ்வாறு இன்றைய அரசாங்கத்தை ஆட்டிவைக்கின்றன என்பதுவும் ஈண்டு குறிப்பிடத் தக்கவையாகும்.

எனவே, பொறுப்பற்ற ஓர் கொடூர மார்க்கம் சிறுபான்மையினரை ஒழித்துக் கட்ட முயலும் வேறோர் போர்வை போர்த்த சர்வாதிகாரச் சக்தியாக இருக்கிறது. நமது போராட்டமும் இவ்வித பயங்கர சக்தியை எதிர்த்துப் போராடும் போராட்டமாயிருக்கிறது.

### கூடிய கட்சி

இரண்டாவதாக, மன்னனாட்சி ஒழிய, மக்களாட்சி வந்ததோடு உலகிலே "ஜனநாயகம்" என்னும் ஓர் புதிய ஆட்சி முறை ஆரம்பமானது. அது "மக்களுக்கென, மக்களால் நடத்தப்படும்மக்களாட்சி" (Government of the people, by the people for the people) எனப் பெருமையாக மதித்துப் பேசவும்பட்டது. கொடுங்கோல் மன்னனின் சர்வாதிகார ஆட்சி முறையில் அகப்பட்டுத் தவித்த மக்கள், தம் சொந்த ஆட்சியான ஜனநாயகத்தை ஆசையோடு தழுவினர். இவ்வித ஆட்சியே இன்று நமக்கிருப்பது. அதிலும் இப்போது ஆளுகை செய்யும் கட்சி முற்றிலுமே "மக்கள் கட்சி" என்னும் பெயரையும் பெற்றிருக்கிறது.

ஆனால் இவ்வித மக்கள் ஆட்சியிலே, ஒரு சில மக்கள் எப்போதும் ஒடுக்கப்படுவதேன்? "சிறுபான்மையினர் உரிமைகளை இழந்து போவதும் ஏன்? இலங்கையில் மட்டுமல்ல, உலகின் பல பாகங்களிலேயும் சிறுபான்மை மக்களாயிருப்போர் இவ்வித மக்கள் ஆட்சியின் கீழ் ஒடுக்கப்பட்டே வருகின்றனர். எனவே மக்கள் ஆட்சி எனநாம் விரும்பி ஏற்ற ஆட்சியிலும் அமைந்துள்ள அடிப்படையான

(4-ம் பக்கம் பார்க்க)

# மொழிவாரி அரசியலமைப்புக்கு காந்தியடிகள் காட்டிய ஆதரவு

மொழிப் பிரச்னையால் இலங்கை மக்கள் சிறப்பாகத் தமிழர்கள் அவதியுறும் இக்காலத்தில், உலகம் போற்றும் உத்தமரும் இந்திய தேசப் பிதாவுமாகிய மகாத்மா காந்தியடிகள் இந்தியாவில் மொழிப் பிரச்னை எழுந்தபோது கூறிய அறிவுரைகளையும், தேச ஐக்கியத்திற்கு அவர் காட்டிய வழியென்ன என்பதையும் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

### பன் மொழிப் பிரதேசத்தில் சமஷ்டி ஆட்சி

ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகள் வழங்கும் நாட்டிலே சமஷ்டி அரசியல்தான் சிறந்ததென்பது காந்தியடிகள் கடைசியாகக்கொண்டிருந்த கருத்து. காந்தியடிகளும் ஒருசமயம் இந்தியா முழுமைக்கு ஒரே மொழி—அது இந்தியாக இருக்க வேண்டுமென்றுதான் எண்ணியிருந்தார். ஆனால் படிப்படியாக அவ்வெண்ணத்தை அவர் நழுவ விட்டுவிட்டார் என்றே கூறவேண்டும். இதைக் காந்திமகான் கூற்றுகவே பார்ப்போம்.

"பிற மாகாணங்களிலுள்ளவர்கள் அனைவருமே இந்தி கற்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் இப்படி ஒருகாரியம் நிகழ்வது சாத்தியமல்ல. சரியாகச் சொன்னால் எல்லோரும் இந்தியைக் கற்றுக்கொள்ள மாட்டார்கள்......"

### மொழி வழி மாகாணப் பிரிவினை

இதை இலங்கை ஆட்சியாளர்கள் சற்று கருத்தில் கொண்டால் இலங்கைப் பொது மொழிபற்றிய பிரச்னை தீர்ந்து போய்விடும். மகாத்மா இந்தியா முழுவதையும் ஒரே நாடாக ஒரே இனமாகக் கருதினாலும் மொழிவாரி இனங்களும், அவ்வினங்களுக்குரிய பிரதேசங்களும் தனித்தியங்கக்கூடியன என்பதை அவர் மறந்துவிடவில்லை. "மொழிவாரி மாகாணங்களைப் பிரிப்பதற்கு நானே பொறுப்பாளி" என்று மகாத்மா கூறியதை இங்கே நாங்கள் நினைவுகொள்ள வேண்டும். மொழிவாரி மாகாணங்கள் ஏன் சிறந்ததென்பதற்கு விடையாக "மொழிவாரி மாகாணப் பிரிவினை நாட்டின் கலை வளர்ச்சிக்கேற்றது. மொழி வளர்ச்சிக்கும் அது தேவையே. கல்வி வாணிபம் முதலியவற்றின் வளர்ச்சிக்கும் அது உதவி செய்யும்" என்று காந்தியடிகள் கூறியிருக்கிறார்கள்.

### சுய நிர்ணய உரிமை

மொழிவாரிப் பிரிவினையால் இந்திய ஒருமைப்பாடு சிதைந்துபோய்விடும் என்பதை மகாத்மா உணராதவரல்ல. இதைப்பற்றி காந்திஜீ குறிப்பிடும்போது "மாகாண சுயாட்சி என்பதற்குத் தனித்தனியாகப் பிரிந்து செல்வது என்பது பொருளல்ல. அப்படியென்றால் பெற்ற சுதந்திரத்திற்கு அர்த்தமில்லாமற் போய்விடும்" என்று கூறுகிறார்.

இங்கேதான் காந்தியடிகள் சமஷ்டி அரசியலுக்கு வித்திடுகிறார். காந்திஜியின் அரிய சிந்தனையின் பயனாகத் தோன்றிய இவ்வழியை இலங்கை ஆட்சியாளர் சிந்தித்துப் பார்க்கக்கூட விருப்பின்றி இருப்பதுவிந்தையே.

பிரிக்கப்படும் மாகாணங்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ உரிமையுடையவை என்பது காந்தியின் கருத்து. இதை அவர் தகுந்த வழியில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"எந்த மாகாணமாயினும் பிறருக்குக் கட்டுப்படாமல் தனித்திருக்க விரும்பினால் அதை உறுதியுடன் கடைப்பிடித்து நிற்க வேண்டும். அப்படியானால் நாம் சுதந்திரமடைவது திண்ணம்"

இப்படிச் சுயநிர்ணயம் பெறும் மாகாணங்கள் எத்தகைய அரசியலை வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு விடையாக: "இந்தியா முழுவதற்கும் எந்தவிதமான பரிபூரண சுயேச்சை அரசியல் வகுக்கப்படுமோ அது போன்ற அரசியலைத்தான் மாகாணங்களும் வகுத்துக்கொள்ள வேண்டும்" என்று மகாத்மா கூறுகிறார்.

### காந்தி வழி நலன் தரும்

காந்திமகானின் மேற்கூறிய அரிய வாசகங்களைக் கொண்டு ஒன்றுக்குமதிகமான மொழிகள் வழங்கும் நாட்டிலே இன ஐக்கியமும் முன்னேற்றமும் காணப்பட வேண்டுமாயின் சுயநிர்ணய மொழிவாரி மாகாணங்களும், அந்த அரசுகளுக்கு விட்டுக்கொடுக்கும் அரசியலமைப்புக்கொண்ட சமஷ்டி அரசாங்கமுமே சிறந்ததென்பது புலனாகின்றது. காந்தியடிகளுக்கு எந்த இனத்தின் மீதாவது விசேட பக்தியோ அனுதாபமோ கிடையாது. உலகம் உய்ய உண்மையான மார்க்கத்தைக் காட்டும் மகாத்மாவின் இவ்வரிய சிந்தனைச் செல்வத்தை நமது இலங்கை ஆட்சிபீடம் கைக்கொள்ளுமாயின் சமூக ஐக்கியம் மீண்டும் நிலவி, தேசமும் துரிதமாக முன்னேறும்.

குறிப்பு: "தமிழர் கண்ட ... [illegible] ... கள் எடுக்கப்பட்டன.

—செ. நடராசா


முள்ளுக்கம்பி முள்ளுக்கம்பி



ஏராளமாக வந்திருக்கிறது

உங்கள் பயிர்களை மிருகங்கள் மேய்கின்றனவென்று இனிமேற் துக்கம் வேண்டாம்

பயிர்களைமிருகங்கள்மேயாவண்ணம்பாதுகாப்பதற்கு வேண்டிய முள்ளுக் கம்பி எங்களிடம் ஏராளமாக இருக்கின்றன

12 1/2 கேஜ் 450 யார்
14 ,, 750 ,,

**சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிட்டெட்,**

371, பழைய சோனக தெரு,
தபாற் பெட்டி நிர். 46, கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வயதானவர்களோடு பழகுவது எப்படி?

## தப்பெண்ணத்தைத் தவிர்த்து போக்கறிந்து அன்போடு பேணி நடக்க வேண்டும்

### குடும்பத்தின் அவசியமானவர்களாக பாவித்து 'சரிக்கட்டி' நடப்பது சிறந்த பயன் தரும்

"சும்மா சாப்பிட்டுவிட்டு ஒரு மூலையில் இருக்க முடியாதா? வேலை விட்டு வந்தால், அப்பப்பா......தாங்க முடியவில்லையே......"

"......................"

"நான் தெரியாமற்றான் கேட்கிறேன். வேளா வேளையில் சாப்பாடு போடவில்லையா? வெற்றிலை பாக்கு வாங்கித் தரவில்லையா? சுருட்டுக்குத்தான் குறை வைத்திருக்கிறேனா? இதைவிட வேறென்னதான் வேண்டும்?"

"......................"

"இந்தத் தள்ளாத வயதில் எனக்குத் தொல்லை தர வேண்டுமென்றுதான் வந்தாயோ, அப்பப்பா......இது என் தலைவிதி......எப்போதான் தீருமோ......"

"ஏன் உனக்கு இந்தக் கஷ்டம்? காடு வா வா என்கிறது. வீடு போ போ என்கிறது. இந்த நிலையில் நான் இன்றோ நாளையோ......அவ்வளவுக்கும் பொறுக்க முடியாவிட்டால் இரவுச் சாப்பாட்டில் கொஞ்சம் அதைக் கலந்து தரச் சொல்லு......"

"அடசட், நான் அதையா சொன்னேன்?"

இப்படியே பேச்சு வளர்கிறது. இதன் விளைவு, குடும்பத்தில் குழந்தைகள் தவிர வயது வந்தவர்கள் யாவரும் இரவு பட்டினி கிடப்பது தான். அப்பா சாப்பிட்டால் தான் நான் சாப்பிடுவேன் என்பான் கிழவனாரின் மகன். கணவனும் மகனும் சாப்பிட்டால்தான் தான் சாப்பிடுவேன் என்பாள் கிழவனாரின் மனைவி. தன் கணவன் சாப்பிட்டாலொழியத் தான் சாப்பிடுவதில்லையென்று பிடிவாதம் செய்வாள் மனைவி. எனவே அனைவருக்கும் சின்னக் குடலைப் பெரிய குடல் தின்றாற்போன்று வயிறு பிராண்டிக்கொண்டிருக்கும். பசிக் கொடுமையால் இரவு பூராவும் தூக்கமிராது. இதனால் மனதில் நிம்மதியும் இராது. வீடு அபார்க்களமாக, உள்ளங்கள் படைத்தளங்களாக மாறி அல்லோல கல்லோலப்படும்.

★

#### பிடிக்காத போக்கு

மேற்காட்டியதுபோன்ற நிகழ்ச்சி சாதாரணமாக நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது விதமான நம் குடும்பங்களில் வருஷத்து முன்நூற்றறுபத்தைந்து நாட்களில் குறைந்தது முன்னூறு நாட்களாவது நடவாமலில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? பெற்றவர்கள் வயதில் முதிர்ந்ததும் அவர்களுக்கும் அவர்கள் உதிரத்தில் உருப்பெற்ற இளம் மக்கட்கும் மனக்கசப்பும் வெட்டுப்பகையும் ஏற்படக் காரணம் என்ன?

அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான். பெரியவர்களின் போக்குச் சிறியவர்களுக்கும் சிறியவர்களின் போக்கு பெரியவர்களுக்கும் பிடிப்பதில்லை.

#### புரியாத தன்மை

இந்தக் காரணத்துக்குக் காரணம் வேறு இருக்கிறது. அதாவது அவர்களின் போக்கு இவர்களுக்கும் இவர்களின் போக்கு அவர்களுக்கும் பிடிக்காமல் இருப்பதற்கான காரணம் ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொண்டு அதற்கேற்ப இருசாராரும் சரிக்கட்டி நடவாமல் இருப்பதுதான். இந்த விஷயத்தில் அதிகம் பொறுப்புவாய்ந்தவர்கள் சிறியவர்களே. என்றோ ஒரு நாள் வயதேறி அவர்களும் பெரியவர்களாக வேண்டியவர்களல்லவா! இதை உத்தேசித்தாவது அவர்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நடக்கக் கடமைப்பட்டவர்கள்.

#### தப்புக்கணக்குப் போடலாகாது

வயதில் குறைந்தவர்கள் வயதில் முதிர்ந்தவர்களை அநேகமாக எப்பொழுதும் தப்பெண்ணத்தோடுதான் பார்க்கிறார்கள். பனைமரத்தடியில் இருந்து ஒருவன் பசும்பாலைக் குடித்தாலும் அழகான இளநங்கையைக் கூடப் பிறந்தவன் கூட்டிச் சென்றாலும் அவற்றைப் பார்ப்பவர்கள் தப்பெண்ணம் கொள்வதில்லையா? முதியோர் தம் மத்தியில் தம்மிலொருவராக வாழ்ந்து தமது இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள அருகதையற்றவர்கள்—அடங்கி ஒடுங்கி ஒதுங்கிஇருக்கவேண்டியவர்கள் என்று இளையவர்கள் தப்பாக எண்ணுகிறார்கள். முதியோருக்கும் தமது நிலைக்கேற்ப ஆசைகளும், அபிலாசைகளும் அவற்றின் பூர்த்திக்கான திட்டங்களும் இருக்குமென்பதை இளையோர் எண்ணுவதில்லை. வயதில் முதிர்ந்ததோடு அவர்களின் பந்த பாசங்கள் அனைத்தும் அறுந்து விட்டன என்று தப்புக் கணக்குப் போட்டுக் கொள்கிறார்கள் இளையவர்கள்.

#### முதியோரின் மும்முனை ஆசை

முதியோரின் ஆசங்கைகளை அதாவது மூலாதார ஆசைகளைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் அவர்கள் சும்மா எங்கோ இருக்கவும், சும்மா எதையோ செய்யவும், சும்மா யாரையோ பராமரிக்கவும் எப்பொழும் விழைகிறார்கள் இந்த மும்முனை ஆசை முழுமையாக நிறைவேற வேண்டிச் செயல்படுகிறார்கள்.

இந்த விஷயத்தில் இளையவர்கள் முதியவர்களுக்கு எந்த வகையில் உதவலாமென்பதை அறிந்து ஆனமுறையில் நடக்க வேண்டியது அவசியம். அதற்கு முதலில் இளையவர்கள் செய்ய வேண்டியது தாங்கள் முதியவர்கள் பால் கொண்டுள்ள தப்பெண்ணத்தைத் தவிர்த்துக்கொள்ள வேண்டியதாகும்.

#### அனுசரித்து நடக்க வேண்டும்

வயதில் முதிர்ந்தவர்கள் தமது முதிர்ச்சியின் விளைவாகத் தமது பால்ய பழக்க வழக்கங்கள், விருப்பு வெறுப்புகளை விட்டொழித்துப் புது மனிதராக மாறி விட்டார்கள் என்று தப்பாக எண்ணிக்கொள்வதைத் தவிர்த்து அதற்குப் பதிலாக வயதின் முதிர்ச்சியோடு அவர்களின் இயல்புகளும் வளர்ச்சியடைந்து உதிரத்தோடு ஒட்டிப் பிரிக்கமுடியாத அளவுக்கு நிலை பெற்று விடுகின்றன என்ற பேருண்மையை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். பால்யத்தில் பழங்கதை சொல்லிப் பழகிய பெண் கிழப்பருவத்தில் முன்னையைக் காட்டிலும் அதில் அதிகப் பிரியமுடையவளாயிருப்பாள். சின்ன வயதிலோ வாலிபத்திலோ உண்ணப் பிகு பண்ணுபவன் வயதானதும் முன்னைக்காட்டிலும் பண்மடங்கு பிகுபண்ணுவான். இதை அறிந்தால் இளைஞருக்கு முதியோர் மேல் இரக்கம் ஏற்பட்டுவிட்டுக் கொடுக்கும் மனப் மான்மையும் அனுசரித்து நடக்கும் பெருந்தன்மையும் தாமாக வரும்; இதனால் எத்தனையோ விபரீதங்களும் தாமாகவே தவிர்க்கப்படும்.

#### குடும்பத்தில் ஒருவராக மதிக்க வேண்டும்

வயதானவர்கள் எப்பொழுதும் தங்களைத் தாங்கள் நடத்திச் செல்ல விரும்புகிறார்களேதவிரப் பிறர் தம்து வாழ்க்கைக்கு வழி காட்டுவதை விரும்புவதில்லை. அது மட்டுமல்லாமல் அவர்கள் எந்த விதமான குறையும் இல்லாதிருந்த போதும் தனித்திருக்க அதாவது ஒதுங்கியிருக்க விரும்புவதில்லை. குடும்பத்தோடு ஒட்டிவாழ்ந்து தம்மையும் குடும்பக் குழுவில் தவிர்க்க முடியாத ஒருவராக்கிக்கொள்வதிலேயே அவர்களுக்கு விருப்பம் அதிகம். இதை அநேக இளைஞர்கள் அறிவதில்லை. அநேக அநர்த்தனங்கள் குடும்பங்களில் நிகழ்வதற்கு இது ஓர் முக்கிய காரணமாகும். எடுத்ததற்கெல்லாம் ஏன் இந்தக் கிழடுகள் தலையிட்டு விஷயத்தைக் குட்டிச் சுவராக்க வேண்டுமென்று வினயமாகக் கேட்கும் இளைஞர்கள் நம் மத்தியில் பலர் உண்டு. அவர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் இதுதான்: நமது குடும்ப விஷயத்தில் எதுவானாலும் முதியோரையும் முறைமைக்காவது கலந்துகொள்வதில் தவறு ஒன்றுமில்லை. அவர்களின் ஆலோசனை நமக்கு நல்லதாகப்பட்டால் அதைக் கொள்ளலாம்; இல்லாவிட்டால் தள்ளலாம். இதனால் நாம் அவர்களைப் பெரிதும் திருப்திப்படுத்த முடியும். அதுமட்டுமல்லாமல் முதியோர் தாமும் குடும்பத்துக்குமாக வேண்டியவர்களாயிருக்கிறோமே என்ற உணர்வில் தம்மைப்பற்றித் தாம் கொள்ளக்கூடிய தாழ்வு மனப்பான்மையைத் தவிர்த்து மிக உறுதியோடும், பொறுப்புணர்ச்சியோடும் பூரித்து இருப்பார்கள்!

#### நல்லெண்ணத்தோடு தீங்கு

வயதானவர்களுக்குக் கஷ்டம் கொடுக்காமல் அவர்களை எப்பொழுதும் சந்தோஷமாக வைத்துக்காப்பாற்ற வேண்டுமென்ற மேலான எண்ணத்தில் சில இளைஞர்கள் அவர்களுக்குத் தங்களை அறியாமலே தீங்கு செய்துவிடுகிறார்கள். அவர்கள் செய்யும் தீங்கு வேறெதுவுமில்லை; இங்கும் அவர்களின் உடல் வலிமையையும், திறமையையும் குறைவாக மதித்துவிடுகிறார்கள். இதனால் அவர்கள் செய்ய விரும்பும் வேலைகளைச் செய்ய விடுவதில்லை. வேலை செய்ய அவர்களுக்கு இயற்கையாக ஏற்படும் ஏவுதலை அணை போட்டுத் தடுத்துவிடுகிறார்கள். சமையல் வேலையில் பங்குகொள்ள மாமி வந்துவிட்டால் மருமகள் அதை வரவேற்பதில்லை. விறகு வெட்டக் கிழவனார் வந்துவிட்டால் மகன் நச்சரித்து அவரை விரட்டிவிடுகிறான். எல்லாம் நல்லெண்ணத்தோடுதான். என்றாலும் இதனால் வயோதிபர்களுக்கு மனக்கசப்பு ஏற்பட்டுச் சதாகாலமும் அவர்கள் "கற புற" என்று பொரிந்து தள்ளிக்கொண்டே இருப்பார்கள். இதைத் தவிர்ப்பது சுலபம். அவர்களை இஷ்டப்பட்டதைச் செய்யாவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்.

#### வீட்டுப் பொருத்தம்

வயோதிபருக்கு மற்றுமோர் விசித்திரமான விருப்பம் உண்டு. உதாரணமாக தற்போது உங்களோடு வசதியான புது வீட்டில் சுகமாக இருக்கும் உங்கள் வயதான அப்பாவும் அம்மாவும் உங்கள் வீட்டிற்கு வருமுன் வேறோரிடத்தில் பழைய வீடொன்றில் இருந்தார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த வீட்டில் சுகாதார வசதிகள் எதுவுமே இல்லாதிருக்கலாம். குடியிருக்க போதிய இடவசதியில்லாமலும் இருக்கலாம். அந்த வீட்டில் கிணறு இல்லாமல் இருக்கலாம். கக்கூஸ்கூட இல்லாமல் இருக்கலாம். அப்படியிருந்தும் அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? பழைய வீடுதான் நல்ல வீடு; அதுதான் பொருத்தமான வீடு என்று சொல்லிப் புதிய வீட்டில் இருக்க விருப்பமில்லாமல் எப்பொழுதும் உங்களை நச்சரித்தவண்ணம் இருப்பார்கள்.

#### இஷ்டம் போல் வைக்க வேண்டும்

இது பொதுவாக வயோதிபர் அனைவரினதும் இயற்கையான சுபாவம். இதிலிருந்து அவர்களை மாற்ற யாராலும் முடியாது. இதற்குச் செய்ய வேண்டிய ஒரே ஒரு வழி செலவைப் பொருட்படுத்தாமல் அவர்களை விரும்பிய இடத்தில் குடியிருக்க வைப்பதுதான். அந்த வீட்டில் வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அது மிகவும் நன்று.

வயதானவர்களின்
(13-ம் பக்கம் பார்க்க)

# சிறுபான்மை மக்களின் நலவுரிமை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைகளை நாம் அறிவது அவசியமாகிறது.

மக்கள் ஆட்சி எனப்படும் ஜனநாயக ஆட்சியின் அடிப்படையான பலம், அந்த ஆட்சியை நடத்தும் கட்சிப் பலத்திலேயே தங்கியிருக்கிறது. ஆகவே பெயரளவில் அது ஜனநாயக ஆட்சி எனப்பட்டாலும், நடைமுறையில் அது ஓர் கூடிய கட்சியின் ஆட்சியாகவே இருக்கிறது. இது தன் கட்சிப் பலத்தை உபயோகித்து தனக்குச் சாதகமான காரியங்கள் யாவற்றையும் அவை சிறுபான்மைக் கட்சிக்குப் பாதகமாயிருப்பினும்—நிறைவேற்றியே தீருகிறது. இவ்வித கட்சிப் பலத்தைக் கொண்டே இன்றைய "சிங்களம் மாத்திரம்" என்னும் சட்டம் சிறுபான்மையினர்மேல் திணிக்கப்பட்டிருக்கிறதை நாம் காண்கிறோம். இனியேல் வரவிருக்கும் சட்டங்களும் இக் கட்சிப் பலத்தைக் கொண்டே ஆக்கப்படவும் இருக்கின்றன.

இவ்வாறு இன்றைய ஆட்சி முறையானது ஜனநாயக ஆட்சி அல்லது மக்கள் ஆட்சி எனப் பெயர் பெற்றாலும் அது பெரும்பான்மைக் கட்சியினருக்கென மாத்திரம் ஆக்கப்பட்ட ஓர் நீதி முறையற்ற ஆட்சியாகவே யிருக்கிறது. எனவே ஜனநாயக ஆட்சி என்பது மக்களுக்கென மக்களால் நடத்தப்படும் மக்களது ஆட்சியாயிராது, பெரும்பான்மையினருக்காக, பெரும்பான்மையினரால் நடத்தப்படும் பெரும்பான்மையினரது ஆட்சியாகவே மாறுகிறது. (Government of the majority by the majority for the majority) இவ்வகையில் அது ஓர் தனி ஆளின் சர்வாதிகாரமாயிராவிடினும், ஓர் தனிக் கட்சியின் சர்வாதிகாரமாய்த் தோற்றுகிறது. இவ்வித சர்வாதிகாரமே இன்றைய இலங்கையில் தலைவிரித்து ஆடுவது. மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரோடு. அது பெரும்பான்மையினரின் நலன்களை மாத்திரம் பேணும் ஓர் ஆட்சி முறையாயிருக்கிறது.

#### ஜனநாயகம் எது?

"ஜனநாயகம் என்பது பெரும்பான்மையினருக்கல்ல; அது சிறுபான்மையினரின் நலனுக்காகவே; சிறுபான்மையினருக்கு நீதி வழங்குவதற்காகவே ஜனநாயக ஆட்சி தோன்றியது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெரும்பான்மையினர் பேணிக் காத்தலே ஜனநாயகத்தின் ஒரே இலக்கு" எனப் பிரபல அரசியல் அறிஞரான மசாரிக் (Masaryk) என்பவர் கூறுகிறார். சிறுபான்மையினரை ஆதரித்து, அவர்களுக்கு நீதி வழங்கி, பெரும்பான்மையினரிடமிருந்து அவர்களுக்குண்டாகும் இன்னல்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் ஆட்சியே உண்மையான ஜனநாயக ஆட்சியாகும். இவ்வாறான ஜனநாயக ஆட்சியிலே சிறுபான்மையினர் ஓர் ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, வேண்டாச்சாதியினராயிருக்க மாட்டார்கள். அவர்களுக்கு வேண்டிய அடிப்படையான ஆதரவும் அடைக்கலமும் அந்த ஆட்சியிலிருந்தே அவர்களுக்குக் கிடைக்கும். அவ்வித அடைக்கலமும் அளிக்காத ஆட்சி எவ்விதத்திலும், ஓர் ஜனநாயக ஆட்சியாயமைய முடியாது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பேணாது, அவற்றைப் பறிக்க முயலும் எந்த ஆட்சியும் "ஜனநாயக ஆட்சி" எனப் பெயர் பெறுவதற்கு எவ்வித உரிமையுமற்றதாகும். இவ்வகையிலே, சிறுபான்மையினர் செலவில் பெரும்பான்மையினர் மாத்திரம் பெருமக்களாய் வாழ முயலும் இன்றைய ஆட்சிமுறையும் எவ்வித வரவிலக்கணத்தைக்கொண்டும் ஓர் ஜனநாயக ஆட்சி முறை என அழைக்கப்பட முடியாது.

ஆகவே இன்று தம் உரிமைகளை ஒவ்வொன்றாய்ப் பறிகொடுத்து நிற்கும் சிறுபான்மை மக்கள் தம்மை ஆளும் ஆட்சியின் பேரில் நம்பிக்கையற்று, தம் உரிமைக்காகத் தாமே போராடி, அவற்றைப் பாதுகாக்கக் கங்கணம் கட்டி நிற்பது முற்றிலும் நீதியான இயற்கையான ஓர் காரியமே! இந்நிலையை உணர்ந்து அதற்குப் பரிகாரம் தேட வாஞ்சிப்பதே சிறுபான்மை மக்களுக்கு இன்று வேண்டிய அரசியல் ஞானமுமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதேச, மேல் நாட்டு வைத்திய முறைகள்

## ஒன்றோடொன்று மோதவேண்டியதில்லை

## ஆயுர்வேத, யூனானி முறைகளில் நிரம்பிய வைத்திய ஞானம் உண்டு

### ஆயினும் தற்கால வைத்திய முறைகளைச் சேர்த்துக் கொண்டால் வளர்ச்சி அதிகரிக்கும்

[ ராஜ்குமாரி அம்ருத கௌரி
இந்திய யூனியன் சுகாதார மந்திரி ]

இந்திய வைத்திய முறைகளை மீண்டும் உயிர்ப்பித்து, அவற்றில் மறைந்து கிடக்கும் உண்மைத் தத்துவங்களை வெளிப்படுத்தி நன்மைகாண வேண்டும்.

இந்திய வைத்திய முறைகளுக்கும், மேனாட்டு வைத்திய முறைகளுக்குமிடையே முரண்பாடு இருக்க வேண்டிய அவசியமில்லை. தற்கால வைத்தியமுறை எந்த ஒரு தேசத்துக்கும் சொந்தச் சொத்து அல்ல ஆயுர்வேத யூனானி முறைகள் பல நூற்றுண்டு காலமாக நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளின் தொடர்பில்லாமல் இருந்த போதிலும், அவற்றில் வைத்திய ஞானம் அதிகமாக இருக்கிற மத்திய சர்க்கார் உள்நாட்டு வைத்திய முறைகளை அபிவிருத்தி செய்வதற்குச் சமீபத்தில் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

யூனானி வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் இந்தியாவுக்கு வந்த காலத்திற்கு வெகுகாலம் பிற்பட்டு வந்த போதிலும் இப்போது அதுவும் ஆயூர்வேதத்தைப் போலவே இந்தியாவின் வைத்திய முறைதான்.

### யுனானி வைத்திய வரலாறு

ஐரோப்பா அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்த காலத்தில், கிரேக்கத் தத்துவ ஞானமும் விஞ்ஞானமும் அநேகமாய் அழிந்துவிட்டிருந்த கட்டத்தில், மந்திரவாதமும், போலிவைத்தியமும் தலைதூக்கி நின்ற சமயத்தில் அராபிய வைத்திய முறை ஒரு தீபஜோதிபோல் மனித சமுதாயத்திற்குக் கிடைத்தது. அராபியர்கள் வைத்திய முறையைத் திட்ட ரீதியில் முறைப்படுத்த முன் வந்தார்கள். கிரேக்க கிரந்தங்களையெல்லாம் அவர்கள் மொழிபெயர்த்து வியாக்கியானங்கள் எழுதினார்கள். ஏராளமான ஆஸ்பத்திரிகளையும், நூலகங்களையும் ஸ்தாபித்தார்கள். நூற்றுக்கணக்கான மூலிகை மருந்துகள், கனிப்பொருள் மருந்துகள் முதலியவை அடங்கிய மருந்து நூல் பட்டியலைத் தயாரித்தார்கள். ஆனல் மதாசார நிபந்தனைகள் காரணமாய், பிணங்களை அறுத்துப் பார்த்துச் சோதிப்பதில் தடைகள் இருந்தன. இது அராபிய வைத்திய முறை அபிவிருத்தியை ஓரளவு தடைசெய்தது.

மேனாடுகளில் அராபிய ஆதிக்கம் குறைந்த பின் அராபிய வைத்தியத் துறையிலும் அந்த கதி தோன்றிவிட்டது. ஆனல் அராபிய வைத்திய முறை சாலர்னோ, மாண்ட் பெலியர் போன்ற ஐரோப்பிய சர்வகலாசாலைகளில் போதிக்கப்பட்டு வந்தன. அராபியர் விட்ட இடத்திலிருந்து ஐரோப்பியர் வைத்தியத்துறை அபிவிருத்தியைத்தொடர்ந்தனர். பௌதிகம், ரசாயனம், ஜீவப் பொருள் ஆராய்ச்சி முதலிய விஞ்ஞானத்துறைகளின் உதவியோடு காட்சி, பரிசோதனை தடைமுறைகளைக் கையாண்டு அவர்கள் வைத்தியத்துறையை விஞ்ஞான ரீதியில் வளரச் செய்தார்கள்.

### தறகால வைத்தியமுறை

தற்கால வைத்திய முறையைக் கையாளும் நாடுகளில் மக்களின் சுகாதாரம் அபாரமாய் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. ஆகாரம், தண்ணீர் முதலியவைமூலம் ஏற்படும் பெருவாரி நோய்கள் கட்டுக்கடங்கின. நோய் வராமல் தடுப்பதற்குப் பல முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மருந்துப் பிரயோகம், நோய்க் கிருமிக்கு எதிர்ப்புக் கிருமி உடலில் உற்பத்தியாகுமாறு செய்வது, ரண சிகிச்சை முறை முலியவை அபிவிருத்தி யடைந்து ஆயிரக்கணக்கான உயிர்கள் ரட்சிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு வைத்திய வரலாறுகளை விவரித்ததற்குக் காரணம், தற்கால வைத்திய முறை எந்த ஒரு தேசத்தின் சொந்த சொத்து அல்ல என்றும், மனித சமுதாய பொது அறிவின் பரிணமிப்பே அது என்றும் காட்டுவதற்குத்தான், ஆயுர்வேதம், மிஸேவன், எகிப்தியன், கிரேக்கோ-ரோமன், யுனானி ஆகிய வைத்திய முறைகளெல்லாம் தற்கால வைத்தியமுறை உருவாவதற்கு ஆரம்பத்தில் வழி செய்துள்ளன.

உண்மையில் இந்தியவைத்திய முறைகளுக்கும், தற்கால வைத்திய முறைக்கும் இடையே தகராறு இருக்க இடமில்லை. வைத்திய விஞ்ஞானம் ஒரே முழுப் பிண்டம்தான். மனிதனுக்கு ஏற்படுகிற வியாதியைக் குணப்படுத்தி தேக திடத்தை உண்டுபண்ணுவதுதான்.

புராதன வைத்திய முறைகளை அனுஷ்டிக்கும் வைத்தியங்கள், நோயை அறிவதற்கு நாடியைப் பிடித்துப் பார்ப்பதோடு, நவீன நோய் நிர்ணயக் கருவிகளை ஏன் உபயோகப்படுத்தக் கூடாது? நவீன நர்ஸிங் முறையைக் கையாண்டு, வியாதியஸ்தர்களின் நிலைமையை ஏன் சௌகரியமாக்கக்கூடாது? அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு அவற்றில் போதனை அளிக்கப்பட வேண்டும்.

புராதன வைத்திய மாணவர்கள் நவீனமுறை டாக்டர்களின் பயிற்சிமுழுவதையும் பெறும்படி செய்ய வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் அந்த விஞ்ஞான மனப்பான்மையோடு ஆயுர்வேத, யுனானி வைத்திய முறைகளைக் கையாளட்டும். இப்போதுள்ள நிலையங்களில் பயிற்சி பெறுகிற ஆயுர்வேத, யுனானி வைத்தியர்கள் தற்கால சிகிச்சைக்குப் பூர்வாங்க அம்சங்களில் ஓரளவு பயிற்சி பெற்று, தற்கால மருந்துகளை வழங்கி [illegible] செய்தால் புராதன முறைகள் சீக்கிரம் நசிந்துவிடும்.

### இந்திய முறைகளை அபிவிருத்தி செய்ய சர்க்கார் ஏற்பாடுகள்

சுதந்திரத்துக்குப் பின் சர்க்கார் இந்திய முறைகளை அபிவிருத்தி செய்வதற்குச் சாத்தியமான சகல உதவிகளையும் செய்து வருகிறார்கள்.

ஆயுர்வேத, யுனானி வைத்திய முறைகளை அபிவிருத்தி செய்வதற்கு மூன்று அம்சங்களில் நாம் கவனம்செலுத்தி வருகிறோம். முதல் அம்சம் அவைகளை விஞ்ஞான மனப்பான்மையோடு ஆராய்ச்சி செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நிர்ணயிப்பது, இரண்டாவதாக இந்த முறைகளில் கல்வி போதனை தரத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை நிர்ணயிப்பது, மூன்றுவது அம்சம், அத்துறை வைத்தியர்களைத் தேசத்தின் சுகாதார நடவடிக்கைத் திட்டத்தில் எப்படிப் பயன்படுத்துவது என்று நிர்ணயிப்பது.

இதற்கென பல நிபுணர்கள் கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மத்திய சுகாதாரக் கவுன்சில் இப்பிரச்னைகளில் தீவிர அக்கறைகாட்டி வருகிறது. ஜாம் நகரில் உள்நாட்டு வைத்திய முறை ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நிலையம் ஆயுர்வேத, யுனானி முறைகளில் கூறப்பட்டுள்ள சுகாதாரக் கட்டுப்பாடுகள், வைத்திய தத்துவங்கள், மருந்துப் பிரயோக முறைகள் முதலியவைகளை ஆராயும்.

# வெளிநாட்டு தூதுகோஷ்டிகளில் சேர தமிழ் ஆசிரியர்கள் மறுப்பு

## தமிழுக்கு சம அந்தஸ்து அளிக்காததே காரணமாம்

## மேல் மாகாண ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

"இலங்கையில் தமிழுக்குச் சமஅந்தஸ்து அளிக்காத வரை பிறநாடுகளுக்குச் செல்லும் நல்லெண்ணத் தூதுகோஷ்டிகளில் அங்கத்துவம் வகிக்க மேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கம் தயாராயில்லை."

மேற்படி தீர்மானம் கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற மேல்மாகாணத் தமிழாசிரியர் சங்க நிருவாக சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

ருஷியா செல்லவிருக்கும் நல்லெண்ணத் தூதுகோஷ்டியில் சேர்த்துக் கொள்ள 10 ஆசிரியர்களைத் தெரிவு செய்து தரும்படி அகில இலங்கை ஆசிரிய சங்கம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இப்பிரச்னை மேல்மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிருவாக சபைக் கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. கே. எஸ். லியோனிஸ் பர்னந்து தலைமை வகித்தார்.

பாடசாலைப்பிள்ளைகளுக்கு இலவசப் பால் கொடுப்பதற்கு உதவியாக சீனி வழங்கவேண்டுமென்று கொழும்பு முனிசிப்பல் சபையைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது. இது சம்பந்தமாக நகர மேயரைப் பேட்டி காண திருவாளர்கள் கே. எஸ். லியோனிஸ் பர்னந்து, கு.வி. செல்வத்துரை, அ. நாகராசா ஆகிய மூவரும்தெரிவு செய்யப்பட்டனர்.

அகில உலக ஆசிரிய சங்கத்தில் அங்கத்தினராகச் சேரவேண்டும் என்று இச்சங்கம் அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தைக் கேட்டுக் கொள்கிறதென்ற மற்றொரு தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது.

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையில் சங்கீத விழா ஒன்று அடுத்த ஜூன்மாதமத்தியில் நடாத்துவதென்றும் திறமையுள்ள பாடசாலைகட்கு பரிசில்கள் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கப் பிரதிநிதிகளாக திருவாளர்கள் கே. எஸ். லியோனிஸ் பர்னந்து, அ. நாகராசா, எஸ். வி. பி. பிள்ளை, கு. வி. செல்வத்துரை, வ. நடராசா, நீர் கொழும்பு தமிழ[illegible] சங்கத் தலைவரும் [illegible] யும் தெரிவு செய்யப்பட்டனர்.


கமலா பீடி

பீடி இலை, பீடிப் புகையிலை, இன்னும் பீடிக்குத் தேவையான சாமான்களும் எங்களிடம் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: V. P. P. ஆடர்கள் அவசியம் கவனிக்கப்படும்.


ஒருமுறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.


போன்: 3597 6322

கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு—11.

தந்தி: "தாமரை"

தங்க நகைகள்





சிறந்த அழகிய ஆபரணங்கள், அபூர்வ வேலைப்பாடுகள் அமைந்த பெண்டன்கள், நெக்லஸ்கள், பதக்கங்கள், வளையல்கள் அநேக டிசைன்களில் கைவசம் இருக்கின்றன.

உண்மைக்கும் உத்தரவாதத்துக்கும் புகழ்பெற்ற ஸ்தாபனம்

வெ. சண்முகராஜா,
195, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 5946

N. B. புளு ஜாகர் வைரங்கள் இறக்குமதியாளர், கியாரண்டியுடன் கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'பசுத்தோல் போர்த்த' யு. என். பி. புலிகளைப் பட்டியில் சேர்க்க மறுத்தோம்

## ஐக்கிய முன்னணி முறிந்ததன் அந்தரங்கம் இதுதான்'

### பொன்னம்பலத்தின் போலிவாதங்களுக்கு அமிர்தலிங்கத்தின் ஆணித்தரமான பதில்

**இரண்டு வாரங்களில் ஏதோ ஒரு பெரிய திட்டத்தைத் தான் வெளியிடப் போவதாகக் கடந்த மாதம் 4-ந் திகதி கூறிய திரு. பொன்னம்பலம் கப்சிப் என்று இருந்துவிட்டார். அப்புறம் ஒரு மாதம் கழித்து யாழ்ப்பாணத்திலிருந்து அல்வாய்க்கு ஓடி வந்து மகத்தான யுத்தப்பிரகடனம் செய்திருக்கிறார். அவருடைய யுத்தம் சிங்கள அரசியல் வாதிகளுக்கு எதிரான தல்ல. கடைசிவரையும் தமிழரசு கட்சியோடுதான் போராடுவேன் என்று முழங்கியிருக்கிறார் 'வீரர்' பொன்னம்பலம்.**

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஓர் பொதுக் கூட்டத்தில் பேசிய வட்டுக்கோட்டைப் பிரதிநிதி தி[illegible]. அமிர்தலிங்கம் கூறி[illegible]

[illegible]ம் துன்னாலை தெற்கு பிள்ளையார் கோயி[illegible] அருகாமையிலுள்ள மைதானத்தில் அண்மையில் திரு. நா. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

#### எது குற்றம்?

"திரு. பொன்னம்பலம் ஐக்கிய முன்னணியை முறித்தவர்கள் தமிழரசுக் கட்சிக்காரர்கள்தான் என்று எங்கும் சொல்லித் திரிகின்றார். அதை அவர் அல்வாய்க் கூட்டத்திலும் சொல்லத் தவறவில்லை. இதையிட்டு சில விஷயங்கள் சொல்ல வேண்டியது எனது கடமை. யு. என். பி. அங்கத்தவர்களைப் போட்டியின்றி அனுப்புவதற்கு அப்போது பொன்னம்பலம் தீவிரமாக வேலை செய்தார். அதற்கு நாங்கள் இணங்கவில்லை. பசுத்தோல் போர்த்த புலிகளை எங்கள் பட்டியில் சேர்க்காதுவிட்டது எங்கள் குற்றமா? மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும்பகுதி தமிழரசுக் கட்சியை ஆதரிக்கின்றது. கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள 16 தொகுதிகளில் 10 தொகுதிகளில் தமிழரசுக் கட்சியினர் வென்றார்கள். இதிலிருந்து தமிழ் பேசும் மக்கள் எக்கட்சியினரை ஆதரிக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்றாயறியலாம்."

திரு. அமிர்தலிங்கம் மேலும் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:

#### உரிமை யாருக்கு?

"இன்னுமொரு கூற்றை திரு. பொன்னம்பலம் கூறித் திரிகின்றார். அது என்னவென்றால், 'தமிழ்ப் பிரதேசங்களில் கடந்த பொதுத் தேர்தலில் வாக்களித்த மொத்த வாக்குகளைக் கணக்கிட்டால் அதில் தமிழரசுக் கட்சியினர் அரைவாசிக்கும் குறைவான வாக்குகளையே பெற்றிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது இவர்கள் தமிழ் மக்கள் சார்பில் பேசுவதற்கு இவர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது' என்பதாகும். நான் அவரிடம் ஒன்று கேட்க விரும்புகின்றேன்: கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தொகுதியில் 22000 மக்கள் வாக்களித்தார்கள். அதிலே பொன்னம்பலம் 8000 வாக்குகளைப் பெற்றார். அவருக்கு எதிராக 14000 வாக்குகள் அளிக்கப்பட்டன. இந்தக் கணக்கின்படி பார்த்தால் திரு பொன்னம்பலம் யாழ்ப்பாணப் பிரதிநிதியாகவே பேச முடியாத நிலையில் இருக்கும்போது, தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேர் சார்பிலும் பேச அவருக்கு உரிமை கொடுத்தவர் யார்? இதற்குத் திரு. பொன்னம்பலம் என்ன பதில் சொல்லப் போகிறார்?

#### திரு வன்னியசிங்கம் பேசியதென்ன?

திரு. வன்னியசிங்கம் பாராளுமன்றத்தில் சிங்களத்தை ஆதரித்துப் பேசியதாக அல்வாய்க் கூட்டத்தில் 'ஹன்சாட்' புத்தகத்தைக் காட்டிக் கூறினாராம். அதிலே அவர் திரு வன்னியசிங்கத்தின் முழுப் பேச்சையும் ஏன் வாசிக்காதுவிட்டார். அன்று பாராளுமன்றத்தில் திரு. வன்னியசிங்கம் சமஅந்தஸ்தையே வற்புறுத்திப் பேசினார். அத்துடன் சமஷ்டி கிடைக்கும்போது சிங்களத்தையிட்டு யோசிப்போம் என்றார்.

ஆனால் ஜூன் 7-ந் திகதி திரு பொன்னம்பலம் நிகழ்த்திய பேச்சில் சமஅந்தஸ்து என்ற பேச்சே எழவில்லை. இவருக்குப் பின் பேசிய திரு. டபிள்யு. தகநாயகா திரு. பொன்னம்பலம் பிரதேச மொழிக்கு வந்ததாகக் கூறினார்.

#### ஜீ ஜீ சாதித்ததென்ன?

திரு. பொன்னம்பலம் தனது 37 வருட அரசியல் வாழ்வில் சாதித்ததென்ன? மலைநாட்டுத் தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தவரை நம்பாத நிலையில் வைத்தது தான் அவர் செய்த பெருந்தொண்டு. அவர் 48ம் ஆண்டில் 'உற்ற போரில் சுற்றது மறந்துவிட்டார்' கர்ணனைப் போல. துரியோதனனுடன் செஞ்சோற்றுக் கடன் கழிக்க கர்ணன் சேர்ந்தது போல திரு பொன்னம்பலமும் மந்திரிப் பதவிக்காக யு. என். பி. யுடன் சேர்ந்து மலைநாட்டுத் தமிழரை அரசியல் அநாதைகளாக்கினார்.

இப்பொழுது எல்லாத் தமிழர்களும் நம்பக்கூடிய தலைவராக திரு. செல்வநாயகம் ஒருவர்தான் இருக்கின்றார்.

#### காட்டிக் கொடுத்தவர் யார்!

தமிழ்க் காங்கிரசுடன் மலைநாட்டுத் தமிழர் ஏன் ஒத்துழைக்கவில்லை என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்குமுகமாக திரு. அமிர்தலிங்கம் கூறியதாவது:

"43ம் ஆண்டில் தமிழ்க் காங்கிரசுடன் மலைநாட்டுத் தமிழர்கள் ஒத்திருந்தார்கள். அவர்களில் திரு. மோத்தா இணைக் காரியதரிசியாகவும், திரு ஐ. எக்ஸ். பெரேரா உபதலைவராகவும் தமிழ்க் காங்கிரசில் அங்கம் வகித்திருந்தனர். திரு. பொன்னம்பலம் இங்கிலாந்து சென்று சோல்பரி அறிக்கையையிட்டு வாதிட்டபோது அவருடன் கூட திரு. மோத்தாவும் சென்றிருந்தார். அப்படியிருந்த மலைநாட்டுத் தமிழர் இலங்கைத் தமிழருடன் ஒத்துழைக்கவில்லையென்று கூறுவது அறியாமையாகும். 50க்கு 50 கோரிக்கையை மலைநாட்டுத்தமிழர் ஆதரித்தனர். ஆனால் திரு. பொன்னம்பலம்தான் அவர்களுக்கு எழுத்திலே கொடுத்த வாக்குறுதியையும் மீறி மந்திரிப் பதவிக்காக அவர்களைக் காட்டிக்கொடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் ஒற்றுமை பேசுவதில் அர்த்தமில்லை. 25 லட்சம் தமிழர்களும் ஒன்று சேர்வதிலே தான் ஒற்றுமை தங்கியிருக்கின்றது. 10 லட்சம் தமிழர்களைக் காட்டிக் கொடுத்து ஒற்றுமையைக் கெடுத்தவர் திரு பொன்னம்பலமா நாங்களா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

#### யார் காடையர்கள்?

கடந்த 4ந் திகதி நடந்த காடைத்தனத்தைப் பற்றித் திரு. பொன்னம்பலம் குறிப்பிட்டிருந்தார்: யாழ்ப்பாண அரசியலில் காடைத்தனத்தைப் புகுத்தியவர் யார்? அவர் புகுத்திய காடைத்தனம் அவரையே இப்பொழுது அழிக்கின்றது. வினை விதைத்தவன் வினையைத் தானே அறுக்க முடியும். அன்று எங்கள் கூட்டத்திற்கு முற்றவெளியை நோக்கி சைக்கிள்களில் வந்த இளைஞர்களை ஆனைப்பந்தியடிச் சந்தியில் வைத்துத் தாக்கிய காடையர்கள் யாரென்பதை நீங்கள் நன்றாயறிவீர்கள்.

#### மாற்றமுடியாத சம அந்தஸ்து வேண்டும்

நாங்கள் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் நாடு முழுவதும் சம உரிமை வேண்டுமென்பதையிட்டுப் போராடி வருவோமென்பதைத் திட்டவட்டமாகக் கூறிவிட விரும்புகின்றேன்.

இப்போது சமஅந்தஸ்து தந்துவிட்டு இன்னொரு அரசாங்கம் வந்து அதைப் பறித்துவிடக்கூடிய சமஅந்தஸ்தை நாங்கள் கோரவில்லை. சமஅந்தஸ்துவேண்டும். அது மாற்ற முடியாததாய் இருக்கவேண்டும். சிங்கள மக்கள் நினைத்தபோது பறிக்கக்கூடிய சமஅந்தஸ்தாக அது இருக்கக்கூடாது.

#### அழைப்பு


மொழியில் மாத்திரமல்ல, குடியேற்றத் திட்டத்திலும் சமஅந்தஸ்து கிடைக்கவேண்டும். மூன்றாவது மலைநாட்டுத் தமிழர்களுக்குப் பிரஜா உரிமை வழங்கவேண்டும். நான்காவது தமிழன் தன் மானத்தோடு வாழ சமஷ்டி அதாவது தமிழரசு நிறுவப்படவேண்டும். இந்நான்கிற்குமாக நாங்கள் சிறைச்சாலை செல்லவும் தயாராக இருக்கின்றோம். ஆகவே இளைஞர்கள் எல்லோரும் எங்களுடன் சேர்ந்து ஆகஸ்ட் போராட்டத்தில் உழைக்க வரும்படி உள்ளன்போடு அழைக்கின்றேன்" என்றார்.

கூட்டத்தில் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு என். நவரத்தினம், தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு க. துரைரத்தினம், ஆசிரியர் ஏ. டி. சுப்பிரமணியம், புதுமைலோலன் முதலான பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

தமிழ்க் காங்கிரஸ்காரர்கள் சிலர் கேள்விகளைக் கற்றை கற்றையாகக் கொடுத்திருந்தார்கள். அவற்றிற்கெல்லாம் திரு அமிர்தலிங்கம் சுடச் சுடப் பதிலிறுத்தார்.


உத்தரவாதமான உபயோகத்திற்கு

எக்கோ வானொலிப் பெட்டிகள்



மொடல் B. 241

டிரை-பட்டரி-வானொலிப் பெட்டி மிகவும் சிறந்தது. அதற்கு இணையான வானொலிப் பெட்டிகளே கிடையாது. அதிதீவிர உணர்ச்சி உடையது. புதிதாக இதில் அமைக்கப் பட்ட குறைவான மின்சாரம் உபயோகிக்கும் வால்வ்கள் பாட்டரியின் ஆயுளை நீடிக்கச்செய்கின்றன.

பிரசித்தி பெற்றதும் திறமையுடையதுமான பலவித விதமான 'எக்கோ' வானொலிப் பெட்டிகளையும், ரேடியோக் கிரமகளையும் இன்றே பார்க்க வாருங்கள். உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய வானொலிப்பெட்டி 'எக்கோ' தான்.

'எக்கோ' வானொலிப் பெட்டிகளை நீங்கள் நம்பி இருக்கலாம்.

அக்மி டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்,

பூந்தோட்ட வீதி, கொழும்பு


### ருஷியாவில் அணு ஆயுத சோதனை

சோவியத் ருஷியா அண்மையில் மற்றுமொரு அணு ஆயுத பரிசோதனை நடத்தியது என்று அமெரிக்க அணு சக்திக் குழு அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய இலக்கிய நூல்கள் பெருமை பெற

# தமிழ்ப் பல்கலைக் கழகம் அவசியம்

:0:

## முஸ்லிம்களின் ஆதரவு அதற்குப் பரிபூரணமாகக்கிடைக்கவேசெய்யும்

:0:

### தாய் மொழியாம் தமிழ் மொழியை என்றும் பேணுவதில் முஸ்லிம்களுக்குப் பெருமையே

**தமிழ் பேசும் மக்களுக்கெனத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் நிறுவும் முயற்சிக்கு ஆதரவு தேடுமுகமாகச் சமீபத்தில் கிழக்கிலங்கையில் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன.**

**கல்முனையில் நடந்த கூட்டமொன்றில் ஏராளமான முஸ்லிம் மக்கள் முன்னிலையில் பேசிய ஜனாப் ஐ எஸ். எம். பலீல் மௌலானா தமிழ்ப் பல்கலைக் கழகம் முஸ்லிம் மக்களுக்கு அவசியம் வேண்டுமென்றும் அதற்கு அவர்கள் ஆதரவு பரிபூரணமாகக் கிடைக்கும் என்றும் கூறினர்.**

**அவருடைய பேச்சின் சுருக்கம் இங்கே தரப்பட்டிருக்கிறது.**

அன்று ஆட்சி மொழியாக இருந்த அருமைத் தமிழ் இந்நாட்டில் இன்று மாற்றாந்தாய் கண்கொண்டு நோக்கப்படுதல் அனுமதிக்கப்படுமாயின் தமிழினம் அழிந்தொழிந்து போகுமென்பதில் ஐயமில்லை.

''கன்னடமும் களிதெலுங்கும்
கவின் மலையாளமும்
உன்னுதிரத்தெழுந்தே
ஒன்று பலவாயிடினும்
ஆரியம் போல் உலக வழக்
கழிந்தொழிந்து
சிதையாத நீந்தமிழின்
சீரிளமைத் திறன் வியந்து''

ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்படும் நாளே தமிழ்ப் பேசும் இனத்தின் நன்னாளாகும். இதற்குத் தமிழ் பேசும் மக்கள் ''தமிழ் பேசா நாளெல்லாம்பிறவாநாட்கள்'' எனத் திடங்கொண்டு எண்ணமும் எழுத்தும் தமிழாக, உயிரும் உடலும் தமிழுக்காக என்றெண்ணி அரும்பாடுபட வேண்டும். ''உலகெலாம் தமிழ் முழக்கஞ் செய்தற்காக'' எம்மாலியன்ற தொண்டாற்ற வேண்டும். ஈழத்தே தமிழ் வளர ஒரு தமிழ் பல்கலைக் கழகம் நிறுவவேண்டியது இன்றியமையாத கடமையாகும். தமிழ்ப் பெரியார்கள் பலர் இதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சி தமிழ் மொழியின் சிறப்பான எதிர் காலத்தைக் காட்டி நிற்கிறது.

#### தமிழில் இஸ்லாமிய இலக்கிய நூல்கள்

இலங்கையைத் தங்கள் தாயகமாகக் கொண்டு ஆயிரம் வருடங்களாகத் தமிழன்னையின் மடியில் தவழ்ந்து வளர்ந்து வரும் இஸ்லாமிய மக்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவும் இந்நன் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பார்கள் என்பது உறுதி. பைந்தமிழ்ப் பாஷையில் விழுமிய பொருளும், அழகிய ஓசையும், உயரிய பண்பும் கொண்டு மிளிரும் அரிய பெரிய இஸ்லாமிய தமிழிலக்கிய நூல்கள் எழுந்துள்ளன. உத்தமர் உமர் தந்த சிறாப் புராணம் இன்பக் கருவூலமன்றோ! தொண்ணூற்றாறு வகை தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்றான நெய்னார் லெப்பை ஆலிம் பாடிய மக்காக் கலம்பகம் பிரபந்தங்களுள் தலையான தொன்று என்று கருதப்படுகிறது. வெண்செந்துறை, செந்துறைவெள்ளை செய்யுட்களைக் கொண்டதும் இஸ்லாமிய நல்லிலக்கியங்களுள்ளே தலைசிறந்து விளங்கும் செந்தமிழ்க் காப்பியம் இராஜநாயகம், காப்பிய இலக்கணங்களுக்கமைவாகப் பாடப்பட்ட புதுகுஷ்ஷாம், சின்னச் சீறா, முசையதீன் ஆண்டகையின் பிள்ளைத்தமிழ், சுஅபில் ஈமான், குலாம் காதிறு பாவலர் தந்த நாகையந்தாதி, ஞான ஒளிவீசும் குணங்குடியாரின் பாடல்கள் இன்னோரன்ன பிறவும் நமது அன்னை மொழியாம் தீந்தமிழ்ச் சோலையில் வாடா மலர்களாக இருப்பதைக் காண இஸ்லாமிய இனம் இறும்பூதெய்தி நிற்கிறது. தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்படுமாயின் சிறப்புமிக்க இஸ்லாமிய நூல்களும் பண்டைய மதிப்பைப் பெறுமென எதிர்பார்க்கலாம்.

**ஜனாப் ஐ. எஸ். எம். பலீல் மௌலானா**

#### தமிழில் இஸ்லாமிய கிராமியப் பாடல்கள்

தமிழ் வளர்த்த இஸ்லாமிய திலகங்கள் என்னும் போது இஸ்லாமியப் பண்டிதர்களும், பாவலர்களும் மட்டும் இதற்குப் பாத்தியதை யுடையவர்களல்லர். சாதாரண கிராமியப் பெண்ணான கதீஜாவும், அவள் காதலன் அலியும்கூட தமிழ் வளர்த்த திலகங்களாகத் திகழ்கின்றார்கள். எழுத்தறிவே இல்லாத அந்த இள நங்கையும் இளவலும் கவி பாடிக் களிப்படையும்திறன் நம்மைப் பேராச்சரியத்தில் மூழ்கச் செய்கிறது. கவிதையழகும், கற்பனைத் திறனும் கற்றாருக்கே ஒரு விருந்தாகி விடுகிறது.

''உன்னை அரட்டி
உயர்ந்த கட்டில்
மேல்வைத்துக்
கன்னந் திருப்பி நான்
கதைக்கும் நாள் எந்நாளோ

மூன்றாம் பிறையே
முகம் மலரும் சந்திரனே
தூண்டா மணிவிளக்கே
உன்னைத்
தூரவிட்டோ நானிருப்பேன்''

இக்கவிதையில்வரும்கற்பனையழகும், உவமானத் திறனும் நம்மையும் களிப்படையச் செய்கின்றன. இக்கவிதைகள் போன்ற ஈடிணையற்ற ஆயிரமாயிரம் கவிதைகளைக்கொண்டுநிற்கும் பைந்தமிழ், முஸ்லிம்களின் தாய் மொழியல்ல என்று கூறும் குறுமதியாளர்களும், வக்ர புத்தி படைத்தவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர் எம் சமூகத்தில். எனினும் தம் உணர்ச்சியையும், உள்ளக் கருத்தினையும் செவ்வனே வெளியிடக்கூடிய ஒரு மொழியைத் தமது தாய் மொழியாக ஏற்க மறுக்கும் இவர்களை எதிர்காலச் சரித்திரம் எள்ளி நகையாடும். திருமுடி இறக்கிய ஹதீது முதல் திருக்குர்ஆன் வரை ஐந்தில் மூன்று இஸ்லாமிய அறிவுச் செல்வங்களை தீந்தமிழில் வைத்துக்கொண்டிருக்கும் நாம், இதை மறப்பது ஈன்ற அன்னையை மறப்பதற்கு ஒப்பாகும்.

#### தமிழன்னையின் செல்வப் புதல்வர்கள்

ஆங்கிலம் நூற்றைம்பது வருட காலம் ஆட்சி மொழியாகஇருந்தும்முஸ்லிம்களில் விரல்விட்டெண்ணக்கூடியவரே ஆங்கிலம் கற்றுப் பிரயோசனமடைந்தனர். தீந்தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்த ஒரே காரணத்தால் சென்ற 20 வருடங்களுள் 800க்கதிகமான முஸ்லிம் தமிழாசிரியர்கள் தொழில் நடத்தி மானத்துடன் இன்று வாழ்கின்றனர்.

ஈழநாட்டில் ஐந்து லட்சம் முஸ்லிம்களும், தமிழகத்தில் நாற்பத்தைந்து இலட்சம் முஸ்லிம்களும், மலாயா, சிங்கப்பூர், பினாங்கு முதலான நாடுகளில் பல இலட்சம் முஸ்லிம்களும் தமிழன்னையின் செல்வப் புதல்வர்களாக இருப்பதில் பெருமைப் படுகின்றார்கள். இஸ்லாம் மதம் இலங்கையிலென்ன தென்னாட்டிலும்கூட வேரூன்றி அரைக் கோடி மக்களைத் தன் வட்டத்துள்சேர்த்துக்கொண்டமைக்கு தமிழ்ப் பாஷைதான் ஒரே ஒரு காரணமாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த அரைக் கோடியில் நாங்கள் ஒரு சிறு பகுதியினர் பிரிந்து மொழி, பண்பாடு ஆகியனவற்றில் தமிழர்களைவிடக் குறைவுபட்ட இன்னோர் சாகியத்துடன் ஒன்றி நிற்பதால் நாமடையும் பயன் மிகச் சொற்பமாகும். எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள ஜாவா முஸ்லிம்களைப்போல ஒரு புதிய இஸ்லாமிய இனமே தோன்றிவிடும். எங்களை நாங்கள் சரியான வழியில் இட்டுச் செல்லத் தவறும் போது பிற்கால சந்ததியின

(11-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### சிங்கள ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஸ்காலர்ஷிப்

ஐயா!

இந்திய அரசாங்கம் ''கொழும்புத்திட்ட உதவி அளிப்பு ஒழுங்கின்'' (Colombo plan technical co operation assistnace scheme பிரகாரம் இலங்கையர்கள், இந்திய சர்வகலாசாலைகளில் பி. எஸ். ஸி. பட்டம் பெறுவதற்குப் படிப்பதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு ஆறு ஸ்காலர்ஷிப் (Scholarships)அளிக்க முன்வந்ததாகவும், அதற்கு அரசாங்க கலாசாலைகளில் படிப்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கல்வி இலாகா கோருவதாகவும் பெப்ரவரி 22-ம் திகதி கெசற் பத்திரிகையில் (Govt gazette part I sect II of 22-2-57) ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

விண்ணப்பம்அனுப்புபவர்கள் சிங்களத்தில் நல்ல தேர்ச்சி உடையவர்களாகவும், படித்துப் பட்டம் பெற்று இலங்கைக்கு வந்தபின் சிங்களத்தில் விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கத்தக்கவர்களாகவும் இருக்க வேண்டுமென்றும் ஒரு நிபந்தனையைக் கல்வி இலாகா விதித்திருக்கிறது.

இந்த நிபந்தனையினால் அரசாங்க கலாசாலைகளிலுள்ள தமிழ் முஸ்லிம் ஆசிரியர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தை இழக்கின்றார்கள். கல்வி விசயத்திலேயும் இன வெறியைக் காட்டுவது அரசாங்கத்தின் நோக்கமா? அல்லது தாய் மொழி எப்படி இருந்தாலும் எவரும்சிங்களத்தில்தான் விஞ்ஞான பாடங்களைப் படிக்க வேண்டுமென்று ''சிங்களம் மாத்திரம்'' சட்டத்தினால் ஏற்பட்டுள்ளதோ? இது வேணுமென்றே கல்வி இலாகா தமிழ்ப் பேசும் மக்களுக்குச் செய்தது அநீதியில்லையா? செய்கையில் இப்படி அநீதி செய்யும் அரசாங்கம், பல இடங்களிலும் வாய்ப்பேச்சளவில் மாத்திரம் தமிழர் பல்கலைப் படிப்பு வரைப் படிப்பதற்கு இடைஞ்சல் ஒன்றும் இருக்காது என்று கூறி ஏமாற்றுவது ஏனோ? சிறுபான்மையினரை நியாயமான முறையில் நடத்துமென்று அரசாங்கம் பல முறையும் கூறிய உறுதிமொழியை எப்படிக் கடைப்பிடிக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

தங்கள் உண்மையுள்ள
ஆ. விஸ்வநாதன்

வெள்ளவத்தை
7-3-57

### வீரர்கட்கு மாறாய் வீம்பு பேசாதீர்!

வீட்டைக் காப்பதற்காக வேண்டியே நாயை வளர்ப்பது. வீட்டில்நாய் இருக்கின்றதென அறிந்தும் கொள்ளைக்கூட்டக்காரர் உள் நுழையவேண்டுமெனில் முதலில் நாயை தங்கள் வசப்படுத்த வேண்டும். இல்லையேல் அது எம்மை எவ்விதத்திலும் காட்டிக்கொடுத்துவிடும் என்பதை அறிந்தவர்கள் முதலில் குரைக்கும் நாயை அழைத்து ஓர் எலும்புத் துண்டைப் போட்டுவிட்டால் ஏங்கிக்கிடந்த நாயாய் இருந்தால் எலும்புத் துண்டுடன் நின்றுவிடும். கொள்ளைக்காரர் உள்ளே நுழைந்து தங்களெண்ணத்தை பூர்த்தி செய்துவிடுவார்கள். எலும்புத் துண்டுக்கு ஏமாறாத நாயாய் இருந்தால் தன்னால் விரட்ட முடியாவிட்டாலும் விரட்டுபவர்களையாவது விழிக்கப்பண்ணி தன் கடமையைச் செய்து வீட்டுப் பொக்கிஷத்தைப் பாதுகாக்க உதவுகின்றதல்லவா?

இதேபோலத்தான் மதம், கலை, கலாச்சாரம்போன்ற எங்களது இனப் பொக்கிஷம் மொழியென்ற இரும்புப் பெட்டியில் பூட்டி தமிழ் மொழி பேசும் சாகியத்தனர் என்ற மதிளால் சூழப்பட்ட எல்லைக்குள் வைக்கப் பட்டிருக்கின்றது.

இவ்வினத்தைத் தாண்டி மொழியைக் கைப்பற்றி மதம், கலை, கலாச்சாரம் ஆகியவற்றை மாற்றார்கைப் பற்றாவண்ணம் பாதுகாப்பதற்காக வேண்டியே கூடிய வாக்குரிமையைக் கொடுத்து தங்களைப்போன்றோர்களைத் தேர்ந்தனுப்பினோம். உங்கள் கடமை எங்கள் இனத்திற்குப் பங்கம் வராது பாதுகாப்பதே.

எங்கள் பொக்கிஷங்கள் மேல் பொறாமைகொண்ட மாற்றார் எங்கள் இன எல்லையைத் தாண்டி மொழிப் பொக்கிஷப் பெட்டியில் கைவைத்து சூறையாடத் திட்டமிட்டு சூழ்ந்துவரும் இவ்வேளையிலே பட்டம் பதவி என்னும் செம்புத் துண்டுகளை நீட்டி எங்கள் எம். பிகளை ஏமாற்ற எண்ணுகின்ற வேளையிலே குட் [illegible] துரோகச் செயலில் ஈடுபடாமல் தங்களால் நன்மை

(13-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75 சிறியது ரூ. 3-00

இத்துடன், ''ஆனந்தா தைலத்தை''த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா.

**ஆனந்தா வைத்தியசாலை,**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN
1957 மார்ச் மாதம் 17-ம் திகதி
194 ஏ. தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 பெ.த. 1183

# கூட்டங் குழப்பிகள்

கொழும்பு மாநகர சபையின் மண்டபத்தை அரசியல் கூட்டங்களுக்கும், கருத்து வேற்றுமையுள்ள இதர நிகழ்ச்சிகளுக்கும் கொடுப்பதில்லையென நகர மேயர் முடிவு செய்திருக்கிறார். இந்த நாட்டில் ஜனநாயகம் வாழ வேண்டும், வளர வேண்டும் என்று வாஞ்சையுறும் யாவருக்கும் மேயரின் இந்த முடிவு வருத்தத்தைத் தருவதாகும்.

மேயரின் இப்படியான திடீர் முடிவுக்குக் காரணம் என்ன? ஆயுர்வேத வைத்திய மாணவர்கள் கடந்த வாரம் கொழும்பு மாநகர மண்டபத்தில் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அவர்களுடைய கூட்டத்தைச் சில காலிகள் உட்புகுந்து குழப்பியடித்தார்கள். கூட்டம் நடத்தியவர்களுக்கும் கூட்டங் குழப்பிய காலிகளுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. நாற்காலிகள் வீசி எறியப்பட்டன, மண்டபத்தின் கண்ணாடி ஜன்னல்கள் நொறுக்கப்பட்டன. நகர சபையின் உடைமைகள் பல சேதத்திற்குள்ளாயின.

நகர சபையின் சொத்துக்கள் முன்பும் பலதடவைகளில் இப்படியான அழிவுக்குட்பட்டதுண்டு. கடந்த ஆண்டில் நடைபெற்ற மொழி சம்பந்தமான பொதுக்கூட்டங்கள் சிலவற்றின்போதும் கண்ணாடி ஜன்னல்களும், நாற்காலிகளும் நொறுக்கப்பட்டதை நேயர்கள் மறந்திருக்க முடியாது.

எனவே மாநகர சபை தனது உடைமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் பாதுகாப்பு நடவடிக்கையின்பேரால் நகர மண்டபத்தையே கூட்டங்களுக்குக் கொடுப்பதில்லையென்று செய்திருக்கும் மேற்படி முடிவு வரவேற்கக்கூடியதல்ல. இம்முடிவு கோழைத்தனமான முடிவு ஆகும். குழப்பக்காரர்களுக்கு அடிபணிந்து, ஜனநாயக உரிமையை நிலைநாட்ட தெம்பும் திராணியும் இல்லாதவகையில், அதிகாரத்திலிருப்போர் தங்கள் பலவீனத்தை ஒப்புக்கொள்வதாகவே இந்த முடிவு அமைந்திருக்கிறது.

ஜனநாயகம் மக்களுக்கு மூன்று அடிப்படை உரிமைகளை வழங்கியிருக்கிறது: அரசியல், கலாச்சார, மத அடிப்படையில் மக்கள் ஒருவரோடொருவர் உறவாடும் உரிமை; பொதுக்கூட்டம் கூடும் உரிமை; பேச்சுரிமை ஆகியவையே அம்மூன்று அடிப்படை உரிமைகளுமாம். பேச்சுரிமையின்பால் பிரசுர உரிமையும், பிரசார உரிமையும் அடங்கும்.

ஜனநாயக தத்துவத்தின்கீழ் பொதுக்கூட்டம் கூட்டி தங்கள் கொள்கைகளையும், அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் எடுத்துரைக்கும் உரிமை யாவருக்கும் உண்டு. இப்படிக் கூட்டப்படும் கூட்டங்களுக்கு வரும்படி யாரும் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. விரும்பியவர்கள் போகலாம். விரும்பாதவர்கள் போகாதிருக்கலாம். அப்படிப் போகிறவர்கள் விரும்பினால் அங்கு வெளியிடப்படும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளலாம்; விரும்பாவிட்டால் நிராகரிக்கலாம்; வேண்டும்போது வெளியேறலாம்; சந்தேகமிருந்தால் அமைதியான முறையில் கேள்விகள் கேட்டுத் தெளிந்துகொள்ளலாம். ஆனால் எக்காரணம்கொண்டும் முரட்டுத்தனமாகவும் மூர்க்கத்தனமாகவும் நடந்துகொள்ளவோ அன்றிக் கூட்டத்தைக் குழப்பவோ கூடாது. அப்படிக் குழப்புவது ஜனநாயக விரோதமான செயலாகும்.

ஜனநாயக தத்துவத்தில் பேச்சுரிமையை விளக்க அரசியல் சாத்திர விற்பன்னர்கள் Helvetius என்ற ஒரு இலக்கிய பாத்திரத்தின் கூற்றை ஆதாரமாகக் காட்டுவதுண்டு. "I detest your opinions, but I will contend to the death for your right to utter them" என்று ஹெல்வெட்டியஸ் கூறினான். அதாவது "நான் உன் அபிப்பிராயங்களை வெறுக்கிறேன். ஆயினும் அவற்றை வெளியிடும் உரிமை உனக்கு உண்டு என்பதை நிலைநாட்ட என் உயிருள்ளவரை போராடுவேன்" என்பது இதன் பொருள்.

அமைதியாக நடைபெறும் ஒரு கூட்டத்தைக் குழப்புவதற்கு விசேஷ சாமர்த்தியமோ, திறமையோ, வீரமோ வேண்டியதில்லை. பத்தாயிரம் பேர்கொண்ட கூட்டத்தைப் பத்துக் காலிகள் குழப்பியடித்துவிடலாம். இதில் பெருமையடைவதற்கு ஒன்றுமில்லை. உயிரினும் மேலான ஜனநாயக உரிமைகளில் மிக உன்னதமான பேச்சுரிமையும், கூட்டம் கூடும் உரிமையும் காலிகளின் அதிகாரத்திற்குப் பலியாகிவிட்டனவே என்று கவலைகொள்ளத்தான் இடமுண்டு.

சிறந்த ஜனநாயக ஆட்சிக்கு இன்று எடுத்துக்காட்டாக விளங்கும் இங்கிலாந்து தேசத்திலும் ஒரு காலத்தில் பொதுக்கூட்டங்கள் காலிகளால் குழப்பப்பட்டதுண்டு. அந்த நிலை தொடர்ந்து நீடித்தால் ஜனநாயகத்திற்கு பங்கம் விளைந்துவிடும் என்பதை உணர்ந்த இங்கிலாந்து மக்கள் 'பொதுக்கூட்டப் பாதுகாப்புச் சட்டம்' ஒன்றைக் கொண்டு வரும்படி அரசாங்கத்தைத் தூண்டினார்கள். அதன்பிரகாரம் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி ஒரு கூட்டத்தைக் கூட்டுபவர்கள் அக்கூட்டத்தின் சொந்தக்காரர்களாகவும், கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குத்தகைக்காரர்களாகவும்கொள்ளப்படுகிறார்கள்.

கூட்ட அக்கிராசனரின் ஆணையை மீறி யாராவது கூட்டத்தைக் குழப்பினால் அக்கிராசனர் குழப்பக்காரரைச் சுட்டிக்காட்டி அல்லது பெயர் சொல்லி அழைத்து அவர்களைக் கூட்டத்தைவிட்டு வெளியேறும்படி கட்டளையிடலாம். அவர்கள் வெளியேறாவிட்டால் தமது தொண்டர் படையைக்கொண்டு குழப்பக்காரரைக் 'கழுத்தைப் பிடித்து' வெளியே தள்ளிவிடலாம், அல்லது பொலீஸாரை அழைத்து அவர்களைக் கைது செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். கூட்டத்தைக் குழப்புபவர்களுக்கு பாரிய அபராதம் விதிக்கவும் ஆறு மாதம்வரை கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கவும் சட்டத்தில் இடமுண்டு.

இந்த நாட்டிலும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் இப்படிப்பட்ட சட்டத்தை உருவாக்குதல் தவிர்க்க முடியாததாகும். இப்படியான பொதுக்கூட்ட பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற கிளர்ச்சியைத் தூண்டுவதற்குப் பதிலாக கொழும்பு மேயர் காலிகளின் வெறிச் செயல்களுக்குப் பயந்துகொண்டு மண்டபத்தைத் தரமாட்டோம் என்று சொல்வது வேடிக்கையாகவிருக்கிறது. அதாவது அதிகாரப் பொறுப்பிலுள்ளவர்கள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடுவதைக் கைவிட்டுவிட்டு, காலிகளிடம் சரணடைந்துவிட்டார்கள் என்பதுதான் இதன் பொருள்.

தேர்தல் நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். வோட்டுப் பதிவாகும் தேர்தல் சாவடியில் சில காலிகள் குழப்பம் விளைவிக்கிறார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். அப்போது குழப்பக்காரர்களைக் கட்டுப்படுத்தி அப்புறப்படுத்துவதற்குப் பதிலாக, "குழப்பக்காரர்கள் தேர்தல் சாவடியைத் தாக்குகிறார்கள், வாக்குப் பெட்டியை உடைத்துவிட்டார்கள். ஆகையினால் இனிமேல் தேர்தலே நடக்க முடியாது; நடத்துவதில்லை" என்று கூறினால் எப்படியிருக்கும்?

மற்றுமொரு உதாரணம்: தெருவிலே நடமாடுவது மக்கள் உரிமை. ஒரு சந்தியிலே சில காலிகள் நின்றுகொண்டு போவோர் வருவோருக்கு கல்வீசுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதிகாரத்திலுள்ளவர்களின் கடமை என்ன? குழப்பக்காரர்களை அகற்றுவது அவர்கள் கடமையா? அல்லது குழப்பக்காரர்கள் பாதசாரிகள்மீது கல் வீசுகிறார்கள். அதனால் தெரு விளக்குகள் நொறுங்குகின்றன. ஆகவே யாரும் நடமாடுவதற்காகத் தெருவை உபயோகிக்க அனுமதிக்கமாட்டோம் என்று அவர்கள் கூறுவதுதான் கடமையா?

எனவேதான் மேயரின் பிரஸ்தாப முடிவு தவறானது என்றும், இந்த நாட்டில் ஜனநாயகம் வளர்ச்சியுறுவதற்கு குந்தகமானது என்றும் நாம் கருதுகிறோம். குழப்பக்காரர்கள் தண்டிக்கப்பட வேண்டுமே தவிர, ஒரு சில குழப்பக்காரர்களுக்காக பொதுமக்களுடைய ஜனநாயக உரிமைகளும், பிரஜா சுதந்திரங்களும் பாதிக்கப்படக்கூடா.

சில பொறுப்பற்றபத்திரிகைகள் குழப்பக்காரர்களுக்கு ஆதரவு காட்டுவதை விடுத்து, குழப்பக்காரர்களைத் தண் [illegible]ப் பாதுகாப்புச் சட்டம் [illegible], ஜனநாயகத்தைப் பாதுகாக்கும்படியாகவும் பொதுஜன அபிப்பிராயத்தைத் தட்டியெழுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

# கனடா காட்டிய வழி!

## ஒற்றையாட்சி ஒழிந்தது-கூட்டாட்சி மலர்ந்தது!

இலங்கைத் தமிழ் பேசும் பெருமக்கள் ஒற்றையாட்சியினை ஒழித்துக்கட்டிவிட்டு சமஷ்டியாட்சி அமைப்பிலே தமிழரசுகாண்பதற்கு உறுதி பூண்டிருக்கும் நேரத்திலே, இறுதிப் போராட்டத்திற்காகத் தயாராகிக்கொண்டிருக்கும் நேரத்திலே ஒருசில அரசியல்வாதிகள் 'சமஷ்டியென்றால் புரியவில்லையே, அது சாக்காட்டுக்கு இட்டுச் செல்லும் திட்டம்' என்றெல்லாம் ஜன்னி கண்டவர்கள்போல் புலம்புவதைக்கேட்டு 'பரிதாபம், அவர்களுக்கு எம் ஆழ்ந்த அனுதாபம்' என்று கூறிக் கொள்வதோடு மட்டும் நில்லாது, நாட்டாட்சி நன்றாக அமையவேண்டு மென்பதற்காகக் கூட்டாட்சி அமைத்துக்கொண்ட உலக நாடுகளையெல்லாம் உதாரணங்களாகக் காட்டினோம். உண்மையாக உறங்கினோரெல்லாம் கடந்த தேர்தல் காலத்திலே விழித்துக் கொண்டனர்; எம் கருத்துக்களை யெல்லாம் விளங்கிக் கொள்ளவும் செய்தனர். பொய்யுறக்கம் கொண்டவர்கள் பள்ளியறை விடுக்கும் படலம் இன்னும் ஆரம்பமாகவில்லை. இதோ உலக உதாரணங்களில் சமஷ்டியாட்சியிலே சாந்தி கண்ட கனடாவைக் காட்டுகின்றோம். ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையிலே படித்த ஒப்பற்ற தலைவர்களுக்கு கனடாவிலே காணப்படுவது எத்தகைய ஆட்சி முறையென்பது தெரியாமல் இல்லை. இருப்பினும் ஞாபகமூட்டுகின்றோம். திருந்தட்டும் அவர்கள்; திருந்தாவிடினும் புரிந்துகொள்ளட்டும். அதுவே போதும்.

### போராட்டத்தின் பின் ...அரசியல் இலக்கியம்

அடிமைத் தளையினை அறுத்தெறிந்துவிட்டு, ஆங்கிலேயக் கனடாக்காரர்களின் ஆக்கிரமிப்பிற்குப் பலியாகாது வாழவிரும்பிய பிரெஞ்சுக் கனேடியர்கள் 1837ம் ஆண்டில் புரட்சி செய்தனர். விக்டோரியா மகாராணியார் பதவி ஏற்றிருந்த வருடமது. புரட்சி பொசுக்கப்பட்டது. புரட்சியின் எழுச்சிக்கான காரணத்தினை அறிய டேர்காம் பிரபுவின் (Lord Durham) தலைமையிலே ஓர் விசாரணைக் குழு விக்டோரியா மகாராணியாரால் கனடாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. டேர்காம் பிரபு, இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்ட விசாரணைக் குழுத் தலைவர் சோல்பரிப் பிரபுவினைப் போல் ஒற்றைக் கண்ணனாக இல்லாவிட்டாலும் ஓரவஞ்சனைக்காரனாக இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் விடுதலை வேட்கையினால் புரட்சி செய்த பிரெஞ்சுக் கனேடிய மக்களை விசாரணையின்றி பெர்மூடாவிற்கு (Bermuda) நாடு கடத்தியிருக்கமாட்டார். புரட்சியின் காரணத்தினையறியப் போனவரே புரட்சிக்கு வித்திட்டு விடுவார் போலத் தோன்றவே டேர்காம் பிரபு விக்டோரியா மகாராணியாரால் திருப்பியழைக்கப்பட்டார். திரும்பிச் சென்ற டேர்காம் பிரபு ஓர் அறிக்கையினை சமர்ப்பித்தார். டேர்காம் பிரபுவினைப் பாராட்டாவிடினும் அவ்வறிக்கையினை நிச்சயமாகப் பாராட்டத்தான் வேண்டும். இல்லாவிட்டால் கனடாவிற்கு சுயாட்சி வழங்குமளவிற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் முன்னேறியிருக்கமாட்டாது. இந்த அறிக்கை 'அரசியலமைப்புத் திட்ட சரித்திரத்திலேயே ஓர் இலக்கியம்' என இன்றும் போற்றப்படுகின்றது.

### சிக்கல்கள்

1839-ம் ஆண்டில் கனடாவிற்கு சுயாட்சி கிடைத்தது. பிரிட்டிஷ் ஆட்சியினர் ஈழநாட்டினை எத்தகைய தவறான அமைப்பின் கீழ் விடுத்துச் சென்றனரோ, அத்தகைய அமைப்பின் கீழே தான், அதாவது ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழே தான், 1840 ஆண்டு கனடாவும் கொண்டுவரப்பட்டது. சமஷ்டியமைப்புத் திட்டம் அங்கு சமைக்கப்படாததினால், கனடாவில் மீண்டும் சிக்கல்கள் தோன்ற ஆரம்பித்தன.

### சமஷ்டியில் இணைப்பு

1847-ம் ஆண்டிலே, எல்கின் பிரபு (Lord Elgin) என்பவர், அதாவது டேர்காம்

(9-ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் முஸ்லிம் பிரமுகர்களுடன் மகாநாடு

## தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்வார்கள்

## பொத்துவில் பிரதிநிதி ஜனாப் முஸ்தபா ஏற்பாடு

**மட்டக்களப்புப் பகுதியில் தமிழரசுக் கட்சிக்கு சார்பாயுள்ள முஸ்லிமகளையும் இதர முஸ்லிம் பிரமுகர்களையும் அழைத்து தமிழரசுக்கட்சித் தலைவர்களுடன் ஒரு அந்தரங்க மகாநாடுநடத்துவதற்கு பொத்துவில் தொகுதிப் பிரதிநிதி ஜனாப் எம். எம். முஸ்தபா ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இம்மகாநாடு இவ்வாரம் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் மட்டக்களப்பில் நிற்கும்போது நடைபெறும்.**

ஞாயிற்றுக்கிழமை காலையில் 9 மணியளவில் கட்சிச் செயற்குழுக் கூட்டம் மட்டக்களப்பு ஆமன்கோணர், 10 ம் இலக்க இல்லத்தில் நடைபெறும் என்றும் பிரஸ்தாப கூட்டத்தில் கட்சியின் மார்ச்,ஏப்ரல் மாத வேலைத் திட்டங்கள் ஆராயப்படுமென்றும், தற்போது வெற்றிகரமாக நடந்துவரும் சட்டமறுப்புப்போராட்டத்தைப் பன்மடங்கு விஸ்தரிப்பதுபற்றி ஆலோசிக்கப்படுமென்றும் தெரிகிறது.

15, 16, 17 தேதிகளில் மட்டக்களப்பின் பல பாகங்களில் கட்சிப் பொதுக் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. இக்கூட்டங்களை மட்டக்களப்பு தமிழரசுக் கட்சி டிஸ்திறிக் கமிட்டியார் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

15-3-57 மாலையில் அக்கரைப்பற்றிலும், 16-3-57 காலையில் கழுவாஞ்சிக் குடியிலும், அன்று மாலை கல்முனையிலும் 17-3-57 மாலையில் மட்டக்களப்பிலும் மாபெரும் பொதுக் கூட்டங்கள் நடக்கவிருப்பதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஆசிரியர் அகற்றப்பட்டார்!

## ஏருவூர்மாணவர்கள் ஒற்றுமையினல் ஈட்டிய மாபெரும் வெற்றி

:0:

### 'உறுதியோடு போராடினுல் உரிமைகளைப் பெறலாம்'

—இராசதுரை எம். பி.

**மட்டக்களப்புப் பகுதியிலுள்ள ஏருவூர் சிரேஷ்ட பாடசாலையில் மாணவர்களின் விருப்பத்திற்கு மாருகவும், பெற்ருேர்களின் சம்மதத்தைக் கேளாமலும் சிங்கள ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இந்நியமனத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் மாணவர்கள் வெற்றி கண்டுவிட்டார்கள் அரசாங்கம் அடிபணிந்துவிட்டது. சிங்கள ஆசிரியர் அப்பாடசாலையிலிருந்து உடனடியாக வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டுவிட்டார்.**

இது சம்பந்தமாக நமது நிருபர் மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரையைப் பேட்டி கண்டபோது அவர் கூறியதாவது:

"தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் போராடினுல் அவர்கள் எந்த விஷயத்திலும் இறுதி வெற்றியடைவது நிச்சயம் என்பதற்கு இந்த ஏருவூர் பாடசாலைச் சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாகும். இப்பாடசாலை மாணவர்களின் அரிய சாதனையை நாம் பாராட்டவேண்டும். அவர்கள் காட்டிய திண்மையின் முன்னுல் அரசாங்கம் பணிய வேண்டியதாயிற்று. தமிழ் பேசும் மக்கள் இதர துறைகளிலும் இந்த மாணவர்களின் உறுதியைக் கடைப் பிடிப்பார்களானுல் அவர்கள் தமிழ் மொழிக்கு சமஅந்தஸ்தை மட்டுமல்ல, தங்களுக்கென்றே ஒரு தமிழரசையும் அமைத்து நல்வாழ்வுறலாம்."

ஏருவூர் அரசினர் சிரேஷ்ட பாடசாலையில் சிங்கள ஆசிரியர் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஒரு மாத காலமாக பாடசாலையை பகிஷ்கரித்து வந்த நாநூற்றுக்கதிகமான மாணவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாகக் கடந்த 28-2-57-ல் வாழைச் சேனையிலிருந்து கல்முனை வரையிலுமுள்ள பாடசாலைகளை (5000) ஐயாயிரம் மாணவர்கள் பகிஷ்காரம் செய்தார்கள். பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் மட்டுமே சமூகமளித்திருந்தனர்.

ஏருவூர் அரசினர் சிரேஷ்ட பாடசாலையில் மாணவர்களின் விருப்பத்திற்கு மாருகவும், பெற்ருர்களின் சம்மதத்தை கேளாமலும் சிங்கள ஆசிரியர் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து கடந்த ஒரு மாத காலத்திற்குமேலாக 400க்கு அதிகமான இந்து—கிறிஸ்துவ—இஸ்லாமிய மாணவர்கள் பாடசாலையை பகிஷ்கரித்து வந்தார்கள். இம்மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுவிடக் கூடாதென்பதற்காக ஏருவூரில் ஒரு பதில் பாடசாலை நடைபெற்று வந்தது. இப்பாடசாலையை ஆரம்பித்து வைத்து மட்டக்களப்பு பிரதிநிதி திரு செ. இராசதுரை பேசுகையில் குறிப்பிட்டதாவது: "உங்களின் தமிழ் மொழிப்பற்றை நினைக்கும்போது தமிழ் மொழியை எவராலும், எந்த அரசாங்கத்தினுலும் அழிக்க முடியாதென்ற நம்பிக்கை மேலும் வலுவடைகிறது. தமிழ் மொழியின் மானத்தை காப்பதற்காக நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கை பாராட்டற்குரியது. உங்கள் கோரிக்கை நியாயமானது. ஜனநாயகம் நிரம்பியது. இறுதி வெற்றி கிட்டும்வரை தொடர்ந்து போராடுங்கள்".

இப்பாடசாலையை நடத்துவதற்கு பொதுமக்கள் பாடசாலை உபகரணங்கள் அளித்தார்கள். சுமார் பதினைந்துமைல் தூரத்திலிருந்தும் ஆசிரியர்கள் வந்து இப்பாடசாலையில் இலவசமாகக் கல்வியளித்துவந்தார்கள். ஆசிரியர்களுக்கு உணவு அளிப்பதிலும், பிரயாண வசதியளிப்பதிலும் பொதுமக்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்னின்ருர்கள்.

### 2வது பரிசுக் கோரிக்கை

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி இல. 35ல் இரண்டாவது பரிசுக்கான சோரிக்கை ஒன்று தம்பிலுவில் திரு கி. மகாதேவனிடமிருந்து வரப்பெற்ருேம்.

இதன் பிரகாரம் அன்னாரின் விடைக் கூப்பன்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் அவரும் இரண்டாவது பரிசு பெற உரிமையுடையவரென்பது ஸ்தாபிதமாகிறது.

எனவே இரண்டாவது பரிசுத் தொகையான ரூபா 300ம் மொத்தம் 10 பேர்களுக்கு ஆளுக்கு ரூபா 30 விதம் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதை நேயர்கள் அறியத் தருகிருேம்.

—போட்டி ஆசிரியர்

### கனடா.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரபுவின் மருமகனுர் கனடாவிற்குக் கவர்னராக அனுப்பப்பட்டார். மருமகனுர் மாமனுரிலும் பார்க்கப் புத்திசாலியாக இருந்த காரணத்தினுலோ, நாட்டின் நலனிலே அக்கறை கொண்டவராக இருந்த காரணத்தினுலோ, பெயரளவில் சுதந்திர நடாக (இன்று இலங்கை இருப்பதுபோல) இருந்த கனடாவை செயல் முறையிலும் சுதந்திர சொர்க்கமாக மாற்றினுர். அதைவிட முக்கியம் என்ன வென்ருல் ஒற்றையாட்சியின் கீழ் முன்னேற மறுத்த கனடா 1860 ஆண்டிலே இன்று ஒண்டாரியோ (Ontario) என அழைக்கப்படும் கனடாவின் மேல் மாகாணமும், இன்று குவிபெக் என அழைக்கப்படும் கீழ் மாகாணமும் தனித்தனியே பிரிக்கப்பட்டு சமஷ்டியமைப்பின் கீழ் இணைக்கப்பட்டன. முடங்கிக் கிடந்த கனடா முன்னேறத் தலைப்பட்டது.

—"கரிகாலன்"

## எம். ஈ. பி. அரசாங்கத்திடம் மத வெறி அரும்புகிறது

0

### பிறசமயங்களைப் பாதிக்காதவகையில் பௌத்தத்துக்கு உரிய இடமளிக்கப்படுமாம்

கலாச்சார மந்திரி அறிவிப்பு

(நமது நிருபர்)

**இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை ஒழித்துக்கட்டுவதற்கு யூ. என். பி. அரசாங்கம் செய்துவந்த குடியேற்றத் திட்ட, பிரஜா உரிமைச் சட்டத் திட்டங்களைத் தொடர்ந்து தற்போது பதவியிலிருக்கும் இனவெறிகொண்ட எம். ஈ. பி. அரசாங்கம் அவர்கள் மொழியை ஒழிக்கச் சட்டமும் அரசாங்க சேவையிலிருந்து அவர்களைப் படிப்படியாகத் தவிர்க்கத் திட்டமும் கொண்டுவந்திருக்கிறது. இது போதாதென்று இப்போது அவர்கள் சமயத்திலும் கைவைக்க ஆரம்பித்துவிட்டது.**

கலாச்சார மந்திரி திரு. ஜயவீர குருப்பு, பலாங்கொடை அடவக்வல விகாரையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய பேச்சிலிருந்து இது வெளியாயிற்று.

சமயப் பாடசாலைகளில் பயிலும் மாணவருக்கு இலவசமாக நூல்களை வழங்கக் கலாசார அமைச்சு முடிவு செய்துள்ளதாக அறிவித்த மந்திரி ஜெயவீர குருப்பு, இதர சமையங்களைப் பாதிக்காத முறையில் பௌத்தத்திற்கு உரிய இடமளிக்கச் சகல முயற்சிகளும் எடுக்கப்படும் என்று சொன்னுர்.

தமிழ் மொழிக்கு நியாயமான அளவு உபயோகம் அளிக்கப்படும் என்று உறுதி கூறிய பிரதமரும் அவருடைய அரசாங்கமும் எந்த அளவுக்கு இப்பொழுது தமிழுக்கு "நியாயம்" வழங்குகிருர்களோ அந்த அளவுக்குத்தான் பிற சமயங்களுக்கும் அவர்கள் தீங்கிழைக்காமல் இருப்பார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் பௌத்தரல்லாத பிற சமயத்தவர்கள் யாவரும் பீதியடைந்துள்ளார்கள்.

எம். ஈ. பி. அரசாங்கம் பாடசாலைப் பிள்ளைகளுக்கிடையில் வகுப்புத் துவேஷத்தை வளர்த்து வருவது தெரிந்த விஷயம். மலைநாட்டுப் பாடசாலைகளில் உள்ள சிங்களக் குழந்தைகளுக்குத் தமிழரைப்பற்றிய தவருன, தாழ்வான கருத்துக்களைப் போதிக்கவும், இலங்கை சிங்களவருக்குமட்டுமே சொந்தமென்றும், தமிழர்கள் எல்லோரும் இங்கே வந்தேறு குடிகளென்றும் சரித்திரத்தையே திரித்துச் சொல்லிக்கொடுக்கவும் கல்வி அமைச்சு தூண்டுகோலாய் இருந்து வருவதைச் சுதந்திரன் முன்பு அம்பலமாக்கியிருக்கிறது.

இத்தகைய இன, மொழி வெறி கொண்ட எம். ஈ. பி. அரசாங்கம் இப்பொழுது மத வெறியும் கொள்ளத் தலைப்பட்டிருப்பது மந்திரியின் வாயிலிருந்தே மறைமுகமாக வெளிவந்திருக்கிறது.

### சட்ட மறுப்பு போராட்டம்

தமிழரசுக் கட்சியார் சிறீ எதிர்ப்புச் சட்ட மறுப்புப் போராட்டத்தைப் புது உத்வேகத்துடன் தொடர்ந்து நடத்திவருதாக நமது யாழ்ப்பாண நிருபர் அறிவிக்கிருர்.

தொண்டர்கள் நகரின் பிரதான சந்திகளில் நின்று கார்களையும் பஸ் வண்டிகளையும் மறித்து தமிழ் இலக்கத் தகடு பொறிக்கும்படி வற்புறுத்தி வருவதாகவும் இம்முயற்சியில் அவர்கள் பெரும் வெற்றியீட்டி வருவதாகவும் நமது நிருபர் மேலும் தெரிவிக்கிருர்.

திருகோணமலையிலும் போராட்டம் புதியதோர் கட்டத்தை யடைந்து உற்சாகமாகவும் வெற்றிகரமாகவும் நடந்து வருவதாக நமது திருகோணமலை நிருபர் அறிவிக்கிருர்.

## தமிழை வெறுத்து சிங்களத்தைப் பேணும் தமிழ் சுகாதார அதிகாரி

## பருத்தித்துறையில் பிறந்த இவர் எழுதுவதும் பேசுவதும் சிங்களம்

### களுத்துறை ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் விசித்திரப் பேர்வழி

**அறிந்தறிந்தும் தவறு செய்து தமிழினத்தை மென்மேலும் அடிமைத் தளையில் ஆழ்த்தும் இனத் துரோகச் செயலில் ஈடுபடும் தமிழர்களைப்பற்றிய செய்திகள் சுதந்திரனுக்கு அடிக்கடி கிடைத்து வருகின்றன. சமீபத்தில் கிடைத்த செய்தியொன்றில், களுத்துறை ஆஸ்பத்திரியில் சுகாதார அதிகாரியாகக் கடமையாற்றும் பருத்தித்துறைத் தமிழ்ப் பிரமுகர் ஒருவர் தமிழை வெறுத்துச் சிங்களத்தைப் பேணி வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது.**

தமிழ் பேசும் மக்கள் தற்போதய சூழ்நிலையில் எந்தெந்த வகைகளில் சிங்களத்தைத் தவிர்த்து, அதற்குப் பதிலாகத் தமிழை உபயோகித்துத் தமிழின் நிலையை உயர்த்தப் பாடுபடுகிருர்களோ அதற்கு எதிர்மாருக பிரஸ்தாப தமிழ்ச் சுகாதார அதிகாரி முடிந்தவரையில் தமிழின் உபயோகத்தைத் தவிர்த்துச் சிங்களத்தைப் பேணி வருகிருராம்.

மேல் அதிகாரிகள் தாம் அனுப்பும் உத்தியோகத் தபால் உறைகளில் அதிகாரசில் (பிராங்க்) வைப்பார்களல்லவா? பிரஸ்தாப சுகாதார அதிகாரியின் 'பிராங்க்' இன்னமும் சிங்களத்திலேயே இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் அவர் தமது கடிதப் போக்குவரத்தையும் சிங்களத்திலேயே வைத்துக்கொள்வதாகத் தெரிகிறது. தமிழும் ஆங்கிலமும் இந்த அதிகாரிக்கு அறவே வெறுத்து விட்டன.

சமீபத்தில் உணவு விவசாய மந்திரி திரு பிலிப் குணவர்த்தன களுத்துறை ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தபோது அவருக்கு அங்கு வரவேற்பு உபசாரம் ஒன்று நடத்தப்பட்டது. அவ்வமயம் பிரஸ்தாப சுகாதார அதிகாரி எழுந்து மந்திரியாரை வாயாரப் புகழ்ந்து தள்ளினுர். அங்கும் [illegible] யன்றித் தமிழோ ஆங்கிலமோ தலைகாட்டவேயில்லை.

### பதவி கோரி தமிழ்ப் பிரதிநிதி கஜகரணம்!

பாராளுமன்றத் தமிழ்ப் பிரதிநிதியொருவர் தமக்கு ஒரு உதவி மந்திரிப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்காக பல வழிகளில் கஜகரணம் போட்டு வருவதாகத் தெரிகிறது.

ஆனல் எம். ஈ. பி. அரசாங்கத்திற்கு அவரிடம் பரிபூரண நம்பிக்கை ஏற்படவில்லையென்று தெரிகிறது. பிரஸ்தாப பிரதிநிதி எப்பொழுதும் கொள்கையற்றவராக நடந்துகொண்டிருக்கிருர் என்றும், எக் கட்சி ஆட்சிக்கு வருகிறதோ அக் கட்சியுடன் சேர்ந்து தாளம் போட்டு வந்திருக்கிருர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டதாம். அது மட்டுமின்றி அவர் சமீபத்தில் லஞ்சம் வாங்கிக்கொண்டு பல அரசாங்க காரியங்களைப் பலருக்கு முடித்துக்கொடுத்திருக்கிருர் என்றும், ஆசிரியர்களின் மாற்றம், உப—போஸ்ட்மாஸ்டர் நியமனம் ஆகியவற்றிற்கு கொழுத்த தொகை வாங்கியிருக்கிருர் என்றும் செய்தி, திரு. பண்டாரநாயகாவிற்கு எட்டியிருக்கிறது.

எனவே, திரு பண்டாரநாயகா மேற்படி பிரதிநிதியின் கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை. "நமக்கு செல்வாக்குள்ள தமிழ்த் தலைவர்கள்தான் வேண்டும். அவர்கள் அரசாங்கத்தில் சேர்வதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தை முறியடிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்துவிட்டதாக சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றை ஆட்சியில் மொழிச் சமத்துவம்

## சட்ட ஏட்டில் இடம் பெற்றாலும் நாட்டில் நிலவுமென்ற நம்பிக்கையில்லை

### சமஷ்டியிலேயே உண்மையான சமத்துவம் ஏற்பட முடியும்

(ச. அந்தோனிப்பிள்ளை)

தமிழுக்கு நியாயமான அந்தஸ்து, தமிழுக்குரிய அந்தஸ்து, தமிழுக்குச் சரியான அந்தஸ்து, தமிழுக்குச் சமஅந்தஸ்து-இவற்றுள் எது வேண்டும் தமிழ் மக்களுக்கு? இவற்றுள் நியாயமான அந்தஸ்தைக் கொடுக்க அரசாங்கம் பின் வாங்கவில்லை. தமிழ் பேசும் மக்களோ சம அந்தஸ்துக் கோருகிறார்கள். இடையில் உள்[illegible]ரகர்கள் சிலர் சமரசம் பேசி, உரிய அந்தஸ்து அல்லது சரியான அந்தஸ்து பெற்றுக்கொடுக்கப் பிரயத்தனம் செய்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தைப் பார்த்துக் ''கொடுக்கலாம் கொடுங்கள்'' என்றும் சொல்லித்திரிகிறார்கள்.

### அரசியல் அமைப்பு அவசியம் மாறவேண்டும்

தற்போதைய ஒற்றையாட்சி அரசாங்க அமைப்பு அடிப்படையில் மாற்றப்படாதவரையில், தமிழ்ப் பேசும் மக்களுக்கு இவைகளெல்லாம் வெறும் சொற்களே. இச்சொற்கள் செயல்களாக மாறமாட்டா. அப்படி ஒருகால் மாறினாலும் பயன் தரா. தமிழுக்கு நியாயமான அந்தஸ்து வழங்க ஆரம்பத்தில் வாக்குறுதி அளித்தவர்கள் அதற்கு இப்போது விளக்கங் கேட்கிறார்கள்வேறொருசாராரிடம். சட்டங்களை ஆக்குவதும் அரசாங்கம். அதை அமுல் நடத்துவதும் அரசாங்கம். மந்திரிகளின் மனப் போக்குக்குமாறானசட்டங்களை மாற்றியமைக்கவும் அரசாங்கத்துக்கு முடியும். தமிழ்ப் பேசும் மக்களின் உதவியின்றியே தனது பெரும்பான்மைப் பலத்தால் இவற்றைச் சாதித்து விடும் அரசாங்கம். ''ஆறு போவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பு'' அரசாங்கக் கட்சி கூறுவதே கடைசி வாக்கு. இந்த நிலையில் சட்டத்தில் நியாயமான அந்தஸ்து, உரிய அந்தஸ்து என்றோ அல்லது சம அந்தஸ்து என்றோ எது இடம் பெற்றாலும்—தமிழ் பேசும் மக்களுக்கு எல்லாம் ஒன்றுதான். அரசாங்கம் அவர்களில் கொண்டிருக்கும் அனுதாபத்தைப் பொறுத்தே அவற்றை அமுல் நடத்தும் முறையும் தங்கியிருக்கும். ஆனகையால் சொற்களை மாற்றி அமைத்து விடுவதால் தமிழுக்கு நியாயமான இடமோ, உரிய இடமோ சமமான இடமோ கிடைத்து விடாது.

### பேச்சளவில் அந்தஸ்து உயரலாம்

ஒரு முறை ஒரு அரசன் ஒரு நேர் கோட்டைக் கீறி, அதைத் தொடாமலும், அழிக்காமலும், பெரிதாக்கும்படி கேட்டானாம். மதிநுட்பம் மிக்க ஒருவன் அந்தக் கோட்டின் கீழ் இன்னொரு சிறிய கோட்டைக் கீறினானாம். முந்திய கோடு இருந்த மாதிரியே இருக்கிறது. ஆனால் அதற்குப் பெரிய கோடு என்று பேராய் விட்டதல்லவா? அதே போன்று, தான் தற்போது தமிழுக்கு அரசாங்கம் அளித்துவரும் கடைசி இடம் கடைசிவரையும் இருக்கும். ஆனால் அழகான சொற்களின் மூலம் அதன் அந்தஸ்து பேச்சளவில் உயரலாம்.

### அழுவதா? சிரிப்பதா?

சிறுபான்மையினருக்கு அமைக்கப்பட்ட 29-வது காப்புவிதிக்கு ஏற்பட்ட தலைவிதி அனைவரும் அறிந்த தொன்றே. ஒற்றையாட்சித் திட்டத்தில், நமக்காக வகுக்கும் சட்டங்கள் எல்லாம் அரசாங்கத்தின் கைப்பம்பரங்களாய் ஆடுவதைக் கண்டுங் காணாதவராய் நாம் வாழ்வதுதான் விந்தையிலும் விந்தை. மொழிக்குச் சம அந்தஸ்து என்று சட்டத்தில் எழுதிவிட்டால் போதும், ஒற்றையாட்சியில் ஒன்றுபடுவோம் என்று கூறும் சட்ட நிபுணர்களைக் கண்டு அழுவதா அல்லது சிரிப்பதா? கற்றவர்கள் என்று கருதப்படும் இவர்களைக் காணும்போது, ''கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்'' என்று சொல்வதே சரியெனத் தெரிகிறது. கற்ற கல்வியால்கர்வமுற்று, பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் மாற்றி மருட்டி அரசியற் திருட்டு ஆடுகிறார்களே இவர்கள்! ஒரு சிலர் சூதுவாது அறியாத மக்களின் வாக்குரிமைகளைத் தமது வாக்கு வன்மையால் சூறையாடி உருட்டும் புரட்டும் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் வாக்குரிமைச் சூதாட்டமும் அரசியல் மாறாட்டமும் அவர்களுடன் நின்றுவிடுவதில்லை. நேர்மையுள்ளவர்களின் போராட்டப் பாதையிலே பாரிய கற்களைப் புரட்டி உருட்டி இடைஞ்சல் செய்கின்றனர்.

### சமஷ்டி ஆட்சியில் சமத்துவம்?

சமஷ்டி ஆட்சியில் ஏற்படும் சமத்துவம் செயலில் ஏற்படும் சமத்துவமாகவும், ஒற்றை ஆட்சியில் ஏற்படும் சமத்துவம் வெறும் சொற்களில் மாத்திரம் ஏற்படும் சமத்துவமாகவுமே யிருக்கும். ஒற்றையாட்சியில் வாக்குகள் காற்றில் பறக்கின்றனவேயன்றி சொற்கள் செயல்களாக மாறுவதில்லை. ஆரம்பத்தில ஒற்றை ஆட்சிக்கு அத்திவாரமிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் கதியென்ன? அதில் இருந்த ஐக்கியம் எங்கே? அது நாட்டிய தேசியம் எங்கே? ஐக்கியமும் அழிந்து தேசியமும் ஒழிந்து, கட்சியும் கந்தறுந்து விட்டது. சமஷ்டியாட்சி வேண்டாம் சம அந்தஸ்து போதும் என்று கூறுபவர்கள் அரசாங்கம் தற்போது செய்வதைத்தான் வேறுவிதமாகக் கேட்கிறார்கள். நீங்கள் எங்கள்மீது திணிக்கவேண்டாம். நாங்களாக அதை ஏற்றுக் கொள்கிறோம் என்று அவர்கள் சொல்லாமல் சொல்கிறார்கள்.

### சமஷ்டியா? சமத்துவமா?

அண்ணன் தம்பி இருவருக்கு ஒரு பழம் கிடைத்தது. அண்ணன் அதை இரு பாதிகளாக வெட்டி, பெரியதைத் தனக்கு வைத்துக் கொண்டு சிறியதைத் தம்பிக்குக் கொடுத்தானும். தம்பியாருக்கு சகிக்கமுடியவில்லை. அவன் தமையனைக் கோபித்து, நானாக இருந்தால் சிறிய பாதியை எனக்கு வைத்துக்கொண்டு, பெரியபாதியை உன்னிடம் தந்திருப்பேன் என்றானும். அதற்குத் தமையன் 'நான் இப்போது செய்ததைத் தானே நீயும் செய்யப் போவதாகச் சொல்கிறாய்; அப்படியானால் ஏன் இந்தக் கோபம்? என்று கேட்டான். தம்பியாருக்குத் தமையன் தன்னிடம் வலித்து சிறியதைச் செலுத்துவது பிடிக்கவில்லை. ஆனால் தானாகவே சிறியதை ஏற்றுக்கொள்ள விரும்புகிறான். சமஷ்டி வேண்டாம் சமத்துவம் தாருங்கள், தாங்கள் சிங்களம் கற்கிறோம் என்பவர்களும் இவ்வித மனப்பான்மையுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

### சமஷ்டியே ஏற்றது

சட்டப் புத்தகத்திலே சமத்துவம் என்று எழுதிவிட்டால் இந்தத் தமிழ் பேசும் மக்கள் சிங்களத்தை ஆர்வத்தோடு கற்க ஆரம்பித்து விடுவார்கள். நடைமுறையிலே 'சிங்

(11-ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 36.

# ரொக்கப் பரிசு ரூ 1,500

முதலாவது பரிசு ரூ. 1000-00 | இரண்டாவது பரிசு ரூ. 400-00

அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 27-3-57 பி. ப. 5 மணி | சரியான விடை 31-3-57ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விபரம் 7-4-57ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 16-4-57ல் செக் மூலம் அனுப்பப்படும்

## இடமிருந்து வலம்

1. எந்த ஒரு சுப காரியமும் முடிவடையும் போது இது பாடுவது தமிழர் வழக்கம்.

3. யுத்த காலத்தில் பஞ்சமும் பட்டினியும் ஏற்படும் போது இவன் பாடு கொண்டாட்டந்தான்.

6. மீன் முட்டை

8. ஒரு நரம்பு வாத்தியம்

10. பயங்கர ரூபிணியாகச் சித்திரிக்கப்படும் சிவசக்தி.

11. இருள் சூழ்ந்த இடத்தில்தான் சினிமா......சாத்தியப்படும்.

12. மூன்று அடிகொண்ட இந்த அளவையினால்தான் துணியின் நீளத்தை மட்டிடுவார்கள்.

17. நிறைவானது

20. முனிவர்

22. எட்டுத் திசைகளுக்குமுரிய காவல் தெய்வங்கள்

24. பூக்கூடை

25. இது நன்றாயில்லாவிட்டால் சினிமாவை நன்கு ரசிக்க முடியாது.

## மேலிருந்து கீழ்

1. முருகக் கடவுளின் வாகனம்

2. பெண்கள் கையிலணியும் ஆபரணம்

3. மலர்தல்

4. பழத்தைப் பிழிந்தெடுத்தால் இது கிடைக்கும்.

5. பெண் மானின் கண்களில் எப்போதும் இது காணப்படும்.

7. தானுண்ட நீரைத் தலையாலே தரும் விருட்சம்

8. இலையின் குருத்து

9. சிலம்பொலித்த காவிரிப்பூம்பட்டினம்

10. திருமாலை இந்த வண்ணன் என்றும் சொல்வதுண்டு.

13. மனப்பேதம்

14. ஈரேழுலகி லொன்று

15. இந்திய தேச பக்தர்கள் விரும்பி அணிந்த ஆடை

16. முகில்

18. மன்மதன் மனைவி

19. நீர்க்கலயம்உடைந்து கிடக்கிறது.

21. விஞ்ஞான யந்திரக் கலையில் இந்தப் பழங்கால முனிவர் கைதேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது.

23. ஐந்திணை நிலங்களில் கொடியது.

பெயர் ..........................................

விலாசம் ..........................................

..........................................

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை............

கட்டணத்தின் தொகை ரூ......ச......

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்............




பிரவேசக் கட்டணம் ஒரு கூப்பனுக்கு சதம் 50. மூன்று கூப்பன்களுக்கு ரூபா 1-00

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 36,

த. பெ. இ. 183, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# அன்னையின் துடிப்பு

—பசுத்தீவு இடையர்கோன்

வஞ்சமறியாப் பிஞ்சுக் குழந்தைகளின் கொஞ்சுமொழியில், தஞ்சமளித்து ஆதரித்துத்தவழும் குழந்தைக்கும் அவளைத் தாயாக்கித் தட்டத்தனியே விட்டுச் சென்ற கணவன் கருணைகளின் பிரிவால் ஏற்பட்ட துன்பச் சுமையைக் கூட ஓரளவு மறந்திருந்தாள் தையலம்மை. தாய்மைப்பேறும் ஆசிரியப் பணியும் அவளுக்கில்லையென்றால் தையலம்மை. எப்பொழுதோ— அதாவது கணவன் இறந்த போதே அவளும் இவ்வுலகிலிருந்து பிரிந்திருப்பாள்.

ஓ

ஓராண்டா? ஈராண்டா? பத்தொன்பது ஆண்டுகளாக பாடசாலையில் அவளது துயரைப் போக்கிவந்த அத் துள்ளிய முகங்கள் இப்போது அவள் வெறுப்புக்குப் பாத்திரமாகிவிட்டன. பதைபதைத்து வாடிய பைங்கொடியின் துயர் துடைக்க உதவிய அம்மன்றம் இன்று ஏனோ அவளுக்குச் சுடுகாடாகிவிட்டது.

இதுவரை களிப்பூட்டி வந்த முகங்கள் ஒவ்வொன்றும் அவள் செல்வத்தை —நெடுமாறனை, ஆம் அவள் இன்றுவரை உயிர் வாழ்ந்திருக்க ஏதுவாய் இருந்த அவனை அவள் கண்முன் நிறுத்திக் கலங்க வைத்தன. கலகப் போக்கிய குதலை மொழிகள்'' பெற்ற மைந்தனைக் கொன்ற பேய்'' என்று ஆர்ப்பரிப்பதுபோலிருந்தன.

அவளுக்குப் பள்ளிக்கூடத்திலிருக்கவே பிடிக்கவில்லை நடமாடும் பிணமாக உணர்ச்சியற்று வீடுபோய்ச் சேர்ந்தாள்.

வெறிச்சோடிக்கிடந்த நெடுமாறனின் படிப்பறையைக் கண்டதும் அவளுக்குப் பெற்ற வயிறு பற்றி எரிந்தது. கும்பல் கும்பலாகச் சிதறிய நூற்குவியல்கள் —அதற்குள்ளே குனிந்த தலை நிமிராமல் எண்ணக் குவியல்களை எழுத்து வடிவத்தில் தீட்டும் அந்த எழில் உருவம் அங்கு காணப்படவில்லை. சிந்தனைச் சுடர் வீசும் அந்தச் சுந்தர முகம் சிறைக் கம்பங்களுள் தீக் கொழுந்துள் தகித்துவாடுவதுபோல் ஒரு பிரேமை! வெறிபிடித்த சிங்களக் காலிகளால் மிதிக்கப் படுவதுபோல் ஒரு கனவு உலகம் அவள் கண்முன்னே உருண்டது.

மெத்தையிற் தொப்பென்று வீழ்ந்தாள். அழுது வடித்துக்கொண்டே நேரத்தைப் போக்கினள். ''பெற்ற மகனைக்கொன்ற பேய்'' என்று ஏதோ ஒன்று அவளை அச்சுறுத்தியது. கட்டிலே கண்ணீரால் நனைந்தது.

வெறி பிடித்த சிங்களக் காலிகள் அவள் உள்ளத்தில் நடமாடினார்கள். கற்களும், குண்டாந்தடிகளும் அவள் கண்களிற் காட்சியளித்தன. கண்களை இறுக்க மூடிக் கொண்டாள். ''காலிகள் காத்திருக்கிறார்களாம்'' என்று காலையில் அவள் கேட்டவார்த்தைகள் அவள் நினைவை விட்டு அகலவேயில்லை. அதே எண்ணம்! அதே சிந்தனை! சத்தியாக்கிரகிகள்—சிங்கள வெறியர்கள்—தமிழர் தலைவர்— அவரது செல்வன்-கொதித்தோடிய குருதியாறு எல்லாம் அவள் மனத்திரையில் மாறிமாறித் தோற்றமளித்தன. அவளுக்கு உலகமே இருண்டுவிட்டது. கட்டில் நெருஞ்சிமுள்ளாய் குத்தியது.வீடு தலைகீழாய்ச் சுழன்றது.

இந்த நிலையில் காரணமின்றி வீண் பயத்தால் விம்மிய அவளுக்குக் காரணங் கூற வந்தாற்போல் சாரளத்தினூடே தலை நீட்டிற்று ''சிலம்பு'பத்திரிகை' மூன்று நாட்களாய் தகவல் அறியா மகனைப்பற்றித் தகவல் கொண்டு வராதா அந்த இதழ்? அது அவன் எண்ணக் குவியல்களைத் தாங்கிவரும் கூட்டாட்சிக் கழக வெளியீடுதானே!

எது நடக்கும் என்று எண்ணி எண்ணிக் கவலைப் பட்டாளோ அது நடந்ததாய் தகவல் கொண்டுவந்தது 'சிலம்பு'.

முதற்பக்கத்தில் நெடுமாறனின் புகைப்படத்தோடு கொட்டை எழுத்துகளில் பொறிக்கப்பட்டிருந்த தலைப்போடு கூடிய செய்தி... ...!வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போலாயிற்று.

'ஓ' வென்று பெருங்குரல் கொடுத்து அழுதாள். அழுதாள்! அழுதாள்! எவ்வளவு நேரம் அழுதாளோ அவளுக்கே அது தெரியாது. மற்றை நாட் பொழுதும் புலர்ந்தது. ''வாழ்க கூட்டாட்சிக் கழகம்! வாழ்க ஈழத்துக் காந்தி!! வாழ்க நம் அறப்போர் வீரர்கள்!!'' வாழ்த் தொலிகள் வானைப் பிளந்தன. எண்ணற்ற இளைஞர்களை கூவியழைத்தன.

ஆனால் தையலம்மையின் செவிகளுக்கோ தன் மகனைக் கொன்ற கூற்றுவனின் களிப்புக் குரலாய் அவை ஒலித்தன. தன் மனதுள்ளே மனமார மெய்யார அவற்றைவைது கொண்டாள்.

''வாழ்க நெடுமாறன்! வாழ்க அவன் அன்னை'' இழவு வீட்டில் இசையரங்கமா? அவள் நெஞ்சு பற்றி எரிந்தது. ஆனால் அது நிலைக்கவில்லை. நீதியின் வழி நின்று ஈழத்துக் காந்தியின் இடரிலாப் பாதையில் நின்று அறப்போர் புரியும் அந்த வீர இளைஞர்களின் வாழ்த் தொலியில் இருந்த காந்த சக்தியில் தையலம்மை இழு பட்டாள். வாழ்த் தொலி அதைத் தொடர்ந்து பெரியம்மா! பெரியம்மா! என்ற அழைப்பொலி! வெளியேவந்தாள். அவள் கண்ட காட்சி.

கடல் போல பரந்து நின்றனர் அறப்போர் வீரர்கள். சிங்களச் சிறீ சட்ட மறுப்பு போராட்டத்தில் பங்கு பற்றச் செல்லும் இரண்டாவது இளைஞர் படை அது.

''பாற்றீவில் கூட்டாட்சிக்கழகம் நெடுமாறன் நாவிற்றூன்'' என்று தேர்தல் களத்தில் எதிரிகள் எக்காளிப்பதுண்டு. இன்று அவர்களே நாணும்படி முதற் படை இரண்டாம் படை என்று போர்க்களத்தை நாடிப் பாற்றீவு முழுவதுமே புறப்பட்டுவிட்டது. முதல்ப் படையின் தளபதியின் தாயிடம் விடைபெறத்தான் தையலம்மையிடம் வந்தார்கள் அவர்கள்.

இளைஞர் படையைக் கண் [illegible] ஓரளவு உரம்பெற்றது. முதற் படையை நடத்திச் சென்ற மைந்தன் நெடுமாறன் கை தாகிய அவள் துயர் மறைந்துவிட்டது. இல்லை, மறைத்து வைத்துக்கொண்டாள். வாழ்த்தி விடைகொடுத்தாள். படைமறைந்தது.

வீரர்கள்பிரிந்தனர். அவள் நெஞ்சம் விம்மியது. பாச உணர்வுக்கும் கடமை உணர்வுக்கும் பெரியதோர் போராட்டம் அவள் உள்ளத்திலே நிகழ்ந்தது.

''இத்தனை இளைஞர்களுக்கும் தாய்மார்கள் இல்லையா? அவர்கள் இவர்களைத் தடுக்கவில்லையே? பின்னையிற்கொண்ட பாசத்திலும் பிறந்த நாட்டிலும், பேசும்மொழியிலும் தமிழ் மகளிர்கொண்ணும் பாசம் மேலானது''

''சரிதான்! இவர்களுக்கும் என்னைப்போல் 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' இருந்தால் தெரியும் விஷயம். ஐந்து விரலில் ஒன்று போனால் நாலாவது மிஞ்சும் தானே!''

''ஏன் உனக்கு மட்டுந்தான் என்கிறாய். இன்று இரண்டாவது படைக்குத் தலைமைதாங்கிச் செல்லும் இளவழுதி எத்தனை பேருடன் பிறந்தான்? ஆடாத தீர்த்தமுமாடி அரிச்சந்திர நாடகமுமாடிப் பெற்ற ஒரே ஒரு அருமை மகனல்லவா அவன்! இலட்சுமி அவனை அறப்போருக்கு அனுப்பவில்லையா?''

மனப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. ஆனால் இதற்குமேல் பாச உணர்வு நிலைக்கவில்லை. அவள் மானவீரம் சுடர்விட்டது. கடமையுணர்வு கதிரொளி வீசியது. புறப்பட்டாள்.

★

அவள் நெஞ்சத்திரை விரிந்தது. வரிசை வரிசையாக அறைகள். கம்பிக் கதவுகள். கைத்துப்பாக்கிகளுடன் காவற்காரர்கள். உள்ளே கனைபொங்கும் கடமை வீரர்களின் முகங்கள். ஒருமுகம் அசையவில்லை—ஆடவில்லை. அங்கே நிலைத்துவிட்டது. அது பேசியது:

''அம்மா உன்னைப் பெற்ற நற்றமிழ்த் தாய் உலகறியா சிங்களத்திற்கு ஒடுங்கி வாழ்வதா? இதைத்தானா அம்மா நீ விரும்புகிறாய்? அம்மா நம் நாட்டு வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார். அவனியாண்ட தமிழின் அகர வரிசை அனைவருக்கும்சொல்லித்தரும் நீதானா அம்மா இப்படி வருந்துவது. ''மகனைத் தேடுகிறாயா? களத்திலே தேடு! அந்தப் புலியிருந்த குகை இதோ இருக்கிறது'' என்று பெற்ற வயிற்றைக் காட்டிப் பெருமிதமுற்றாள் ஒரு தாய்! பால் வடியும் பாலகனை வேல்கைக் கொடுத்து வெஞ்சமர்க்கனுப்பினாள் வேறோர் தாய்! ''ஈன்று புறந்தருதல் என் தலைக்கடன், களிறு எறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடன்'' என்று கட்டுரைக்கின்றான்'' மற்றொரு தாய்!

ஏன் அம்மா நமக்கு இந்த ஏடுகள்? வீட்டிலிருந்து கொண்டு வீண் பெருமை பேசவா? சிந்தித்துப் பார். உனக்கு மட்டும் நான் சொந்தமல்ல. இத்தமிழ் உலகத் தாய்மார்கள் அத்தனை பேருக்கும் நான் சொந்தம்!

இன்று சிங்களச் சிறீ நாளை சிங்களப் பெயர்ப் பலகைகள்! பின் நமக்கும் நம் நாட்டுக்கும் சிங்கள நாமங்கள்! யாழ்ப்பாணம்—'யாபாடுவ', நெடுமாறன்—'நிம்மி பண்டா'.

யாழ்ப்பாணம் என்று இங்கிதமாக இன்பத் தமிழில் அழைத்த உன் வாய் 'யாபாடுவ' என்றழைத்து இறும்பூதெய்துமா? நெடுமாறன் என்று நாமமிட்டு நெஞ்சம் திளைத்த உனக்கு 'நிம்மி பண்டா' என்றால் நிறைவாகுமா?''

தையலம்மைக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''மகனே! பெற்ற பாசத்தால் உன்னைப் போருக்கனுப்பாது பூட்டிவைக்க நான் எண்ணியதுண்டு. அந்த மடமையை இப்பொழுது உணர்கிறேன். என்வயிற்றில் பிறந்தது ஒரு கோழையல்ல—சுத்த வீரன் என்பதை அறிய உண்மையில் பெருமையடைகிறேன். விடுதலைப் போரில் பங்கு கொண்டான் தன் மகன்

(12-ம் பக்கம் பார்க்க)

# இஸ்லாமிய இலக்கிய...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

குக்கு நாங்கள் மிகத் துன்பம் இழைத்தவர்களாவோம்.

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

வட இந்திய முஸ்லிம்கள் வழி தவறிச் சென்றுகொண்டிருக்கையில் சேர் ஸையத் அஹமத் யாசகம் புரிந்து அலிகார் பல்கலைக் கழகத்தை நிறுவி விமோசனம் அளித்தார். இலங்கையில் தமிழினம் திக்குத் தடுமாறி அல்லற்பட்டுழலும் இவ்வேளையில் பல்கலைக் கழகம் நிறுவும் முயற்சியைப் பேராசிரியர் மயில்வாகனன் மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் வகுப்புவாத வேறுபாடின்றி தமிழ்ப் பேசும் மக்களுக்கும் தமிழ் கூறும் நல்லுலகுக்கும் அரும்பணி ஆற்றுமாக. முஸ்லிம்களின் ஆதரவு அதற்கு என்றும் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

## அரசியல் கலப்பு ஆகாது

இதில் அரசியற் பூசல்களையும், அரசியற் தலைவர்களின் தலையீடுகளையும் தவிர்த்துக் கொள்வது சாலவும் நன்று. அரசியல்வானில் அமைதியில்லாத இக்காலத்தின் அத்தலைவர்கள் கல்வி சம்பந்தமான இம்முயற்சிகளில் ஈடுபடுவது பொருத்தமற்றது. இதனால் எல்லோருடைய ஏகோபித்த ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியும்.

''என்று புனை செந்தமிழும்
இன்ப மிகும்
ஆங்கிலமும் இரண்டும்
வேண்டும்
நன்றிரண்டும் பயின்றுயர்ந்த
நாகரிகப்
பண்புகளை நயப்போம் வாரீர்
ஒன்றுபடும் காலத்தில்
வேற்றுமையை
உள்ளத்தில் ஊன்றலாமோ
இவ்வென்று பழம் புது நலத்தை
மனிதரெனத்
தலை நிமிர் வோம்
ஏறு கொண்டே!''

## ஒற்றை ஆட்சியில்..

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

களம் மட்டும்' படிப்படியாகத் தமிழ்ப் பிரதேசங்களிலும் பரவத் தொடங்கும். பத்து வருடங்களின் பின் அதற்குரிய எதிர்ப்புத் தளர்ந்துவிடும். ஒருசிலர் எதிர்த்தால் அவர்களைச் சிறையில் போட்டுச் சிரமத்தைக் குறைத்துக் கொள்ளும் அரசாங்கம், ஏற்ற தருணம் பார்த்து மாற்று மணங்களும் இடம்பெற்றுவிட்டால் காலகதியில் தமிழர் ஈழ நாட்டில் வாழ்ந்தார்கள் என்பது, இன்று இயக்கரும் நாகரும் இலங்கையில் இருந்தார்கள் என்ற சரித்திரக் குறிப்புகள்போல் ஏட்டிலே தான் இடம்பெற்றிருக்கும். சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் உள்ள பண்பாட்டுத்தொடர்பும், வழிபாட்டுத் தொடர்பும் இதைத் தீவிரப்படுத்திவிடும். ஒருவேளை முஸ்லிம்கள் மாத்திரம் ஓர் தனித்த இனமாக வாழக்கூடும். ஆனால் அவர்கள் அப்போது அலட்சியம் செய்யக்கூடிய அளவு அற்ப தொகையினராய் விடுவர். இது வெறும் கற்பனையல்ல. ஒற்றையாட்சியின் கீழ் உள்ள சில நாடுகளில் நடந்த சம்பவம். ஒற்றையாட்சிமுறை ஒழிக்கப்படாவிடில் இலங்கையிலும் என்றாவது நடக்கக் கூடிய விஷயம் இதுதான். ஒவ்வொரு இனத்தவரும் தமது தனித்தன்மை மொழி பிரதேசம் என்பவற்றைப் பேணுவதற்கும், சர்வ சமத்துவமாக வாழ்வதற்கும் சமஷ்டி ஆட்சியே ஏற்றது என்பதை உணர்ந்து, அதைப் பெறுவதற்கு [illegible] உழைப்பிலேயே [illegible] ஆக்கம் தங்கியுள்ளது.


# இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் டைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத்தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

சுதந்திரன் டைப் பவுண்டரி,

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்தியப் பத்திரிகைத் தலையங்கங்கள்:

# கலங்கி நிற்கும் இலங்கைத் தமிழன்

சென்னையிலிருந்து வெளிவரும் பிரபல வார இதழான "ஆனந்த விகடன்" மேற்படி தலைப்பில் ஒரு அருமையான தலையங்கத்தை 10-3-57 ல் வெளியிட்டுள்ளது. அதிலிருந்து வேண்டிய பகுதியை இங்கு தருகிறோம்.

நாட்டில் பிறந்த ஒருவரின் முதல் உரிமை பிரஜா உரிமைதான். அதைச் செயலில் காட்ட ஏற்பட்டதே வாக்குரிமை. பெற்ற தாய்க்கு அடுத்த படியாகப் பேசப்படுவது பிறந்தநாடு. ஓட்டுரிமை இல்லையென்றால் நாட்டுரிமை பறிக்கப்படுகிறது என்பதுதான் கருத்து.

ஒரு ஓட்டுக்கே ஒருவர் வருந்துகையில், இந்த உலகில் பல லட்சக் கணக்கான மக்கள் ஓட்டுரிமை, பிரஜா உரிமை, அடிப்படை உரிமை ஆகிய எந்தவிதமான உரிமைகளும் இல்லாமல் தவிக்கிறார்கள் என்று கூறினால் நாகரிக உலகம் நகைக்குமல்லவா? ஆனால் இந்தக் கொடுமை நடந்துகொண்டுதான் இருக்கிறது.

இலங்கையைப்பாருங்கள்!

### பாடுபட்டவனும் பறி கொடுத்தவனும் தமிழன்

இந்த உலகில் எங்கு சென்றாலும் காடு வெட்டியவன் தமிழன், கழனியாக்கியவன் தமிழன், பாடுபட்டவன் தமிழன், பறிகொடுத்தவனும் தமிழன் என்பதைத்தான் நாம் காண்கிறோம். தென்னாபிரிக்கா முதல் தென்னிலங்கைவரை இந்த அநியாயம் இருந்து வருகிறது.

இப்போது இலங்கையில் வாழும் தமிழர் பலருக்கு அவர்கள் எந்தத் தலைமுறையில் அங்கு சென்றார்கள் என்பதே தெரியாது. அவ்வாறு ஈழ நாட்டுடன் அவர்கள் ஒன்றிவிட்டார்கள் அப்படி இருந்தும் இன்று அவர்களுக்கு அடிப்படையான மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பிறப்புரிமை மட்டும் பறிக்கப்படுவது போதாதென்று அவர்கள் பேசும் தாய் மொழியும் பறிக்கப்படுகிறது.

### குற்றம்: தமிழனாகப் பிறந்ததுதான்

இவ்வாறு நடத்தப்படுவதற்கு அவர்கள் செய்திருக்கும் குற்றம்தான் என்ன? அந்த நாட்டை வளமாக்கியது குற்றமா? தென்னையும் தேயிலையும் பயிரிட்டது குற்றமா? செல்வத்தில் செழிக்க வைத்தது குற்றமா? காட்டை நாடாக்கியது குற்றமா? கல்லைக் கனி ஆக்கியது குற்றமா? அல்லது நற் பண்புகளை வளர்த்து நாகரிகத்தைப் பரப்பியது குற்றமா? இவைகள் எல்லாம் குற்றம் என்றோ, தமிழ் மக்கள் இந்த அற்புதங்களைச் செய்யவில்லை என்றோ பண்டார நாயககூடக் கூறவில்லை. ஆனால், இவர்கள்மேல் சாட்டப்படும் குற்றம் என்ன? "நீ ஏன் தமிழனாகப் பிறந்தாய்? ஏன் சிங்களவனாகப் பிறக்கவில்லை?" என்ற குற்றம்தான் அது.

"நீ ஏன் தமிழ்ப்பற்றுடன் இருக்கிறாய்? சிங்கள மொழியை ஏன் பேசவில்லை? நீ ஏன் தாயன்புடன் இருக்கிறாய்? தமிழன் என ஏன் பெயர் வைத்துக்கொள்கிறாய்?" என்று கேட்பது போலிருக்கிறது சிங்களவரின் செய்கைகள்.

### குடியேற்றத் தமிழர்

இன்று இலங்கையில் வாழும் தமிழர்களை இரண்டு வகுப்பாகப் பிரிக்கலாம். ஒருசாரார் சென்ற இருநூறு வருஷங்களுக்குள் இலங்கை சென்று குடியேறியவர்கள். பிரஜா உரிமைக்காகப் போராடும் இவர்கள் சுமார் பத்து லட்சம் தமிழர்கள். நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டு இலங்கையை வளமாக்கியவர்கள். ஆனால் இலங்கை சர்க்கார் அவர்களுக்குப் பல தொல்லைகள் கொடுத்து இவர்களை விரட்டி அடிக்கப் பார்க்கிறார்கள். கள்ளக் குடியேற்றம் என்ற காரணத்தைச் சொல்லித் துன்புறுத்துகிறார்கள். பிரஜா உரிமைக்காக இவர்கள் போட்ட மனுக்கள் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. எடுத்துக்கொள்ளப் பட்டாலும் அற்ப காரணங்கள் காட்டித் தள்ளப்படுகின்றன.

### தொன்றுதொட்டு வாழும் தமிழர்

இன்னொரு சாரார் யார்? சேர சோழ பாண்டியர்கள் கால முதல் இங்கே வசிப்பவர்கள். இலங்கையைத் தாயகமாகக்கொண்டு தொன்றுதொட்டே வாழ்ந்து வரும் தமிழ்ப் பெருங்குடி மக்கள். ஊரையும் பெயரையும் சரித்திரத்தையும் உண்டாக்கியவர்கள்.

யாழ்ப்பாணம், மாவிட்டபுரம், மாந்தை, மட்டக்களப்பு, நல்லூர் இவைகள் எல்லாம் தமிழ்ப் பெயர்கள்தான். சிங்களப் பெயர்கள் அல்ல.

இவர்களுக்கு ஓட்டுஉரிமை உண்டு. ஆனால் மொழி உரிமை மறுக்கப்படுகிறது.

இலங்கை, பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தபோது ஆங்கிலம்தான் அரசாங்க பாஷையாக இருந்துவந்தது. ஆயினும் சிங்களமும் தமிழும் இரு கண்கள்போல் தாய் மொழிகளாக இருந்து வந்தன.

### தனிச் சிங்கள சட்டம்

பிரிட்டிஷார் போனபிறகு சிங்களத்தை மட்டும்தான் அரசியல் மொழியாக்குவோம் என்றும், தமிழுக்கு அங்கு இடமில்லை என்றும் கூறி, அதை சட்டமாகவும் ஆக்கிவிட்டனர். அந்தச் சட்டம் நிறைவேறிய நாளில் தமிழர்கள் கிளர்ச்சி செய்தபோது, சிங்கள மொழி வெறியர்கள் பலர் தர்மத்தை மறந்து தமிழ் மக்களைத் துன்புறுத்தினர். பலவித ஈனச் செயல்களைப் புரிந்தனர். அன்றுமுதல் சிங்களவர்களில் பலர் தமிழரையும் தமிழ் மொழியையும் அழிப்பதிலும் பழிப்பதிலும் ஈடுபட்டிருக்கின்றனர். இன்று அவர்கள் மொழி வெறி தலைவிரித்தாடுகிறது.

### அற போர்

'உயிரை விட்டாலும் விடுவோம். உரிமையைவிட மாட்டோம். நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் சரி, தமிழை அவமதிக்கவிட மாட்டோம். சிங்களத்திற்கு செந்தமிழ் வணங்காது' என்ற அறப்போர் துவங்கிவிட்டார்கள். அகிம்சை முறையில் காந்தி காட்டிய பாதையில் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதன் முதல்படியாக மோட்டார் வாகனங்களின் நம்பர் பிளேட்டுகளில் சிங்கள மொழிதான் பொறிக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை எதிர்த்து, தமிழில் எழுதி, ஒரு சத்தியாக்கிரகம் ஜனவரி மாதம் 19ந் தேதி முதல் வெற்றிகரமாக நடைபெற்றுவருகிறது.

### முதல் வெற்றி

இவ்வாறு தமிழர்கள் விறுகொண்டு நிற்பதைக் கண்ட பிரதமர் பண்டாரநாயகா பதைத்து எழுந்திருக்கிறார். ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டப் போவதாகச் சொல்லி தமிழர்களின் பிரதிநிதிகளைக் கூப்பிட்டிருக்கிறார். இது அவர்களுடைய சத்தியாக்கிரக வெற்றிக்கு முதல் அறிகுறி.

### வட்டமேசை மகாநாடு: கருத்து வேற்றுமை

இந்த மகாநாட்டிற்குப் போவதா வேண்டாமா என்று அங்குள்ள தலைவர்கள் இப்போது யோசித்து வருகிறார்கள்.

"சிங்களத்திற்கும் தமிழுக்கும் சமஅந்தஸ்து என்ற அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் நடந்தால் தான் இந்த வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்ள முடியும்" என்று ஒரு சாரார் நினைக்கிறார்கள். "போய்த்தான் பார்ப்போமே, இதில் நஷ்டம் ஒன்றும் இல்லையே!" என்பது மற்றொரு சாராரின் வாதம். "மொழிப் பிரச்னையை மட்டும் விவாதித்தால் போதாது; குடியேறிய தமிழர்களின் வாக்குரிமைப் பிரச்னையையும் வலியுறுத்த வேண்டும்" என்று இன்னொரு சாரார் கூறுகிறார்கள்.

### ஒற்றுமை

இந்த மகாநாட்டில்கலந்து கொள்வதா, வேண்டாமா என்பதைப்பற்றி அவர்கள் எந்த விதமான முடிவுக்கு வரப்போகிறார்கள் என்பது பெரிதல்ல. அந்த முடிவு ஏகோபித்த முடிவாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம். தமிழர்கள் இப்போது அடைந்துள்ள ஒற்றுமையை எக்காரணத்தைக் கொண்டும் சிதைந்து போகும்படி விட்டுவிடக்கூடாது. இந்த ஒற்றுமைதான் எப்பேர்ப்பட்ட அரசாங்கத்தையும் பணியவைக்கும் என்பதை இலங்கைத் தமிழர்கள் மறந்துவிடக்கூடாது.

---

## அன்னையின்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி) என்பதால் ஒரு அன்னைக்கு எத்தகைய பெருமையும் பெருமிதமும் உண்டு என்பதை இப்பொழுது அனுபவசாத்தியமாக அறிகிறேன்.

சிறையில் நீ; வெளியில் நான். இது ஒன்றே என் தவறை எனக்கு எடுத்துக் காட்டப்போதுமானது. ஆசி கூறி மனமொத்து நான் உன்னைப் போருக்கு அனுப்பியிருந்தால் அந்த உற்சாகத்தில் வெற்றிக்கொடி நாட்டித் திரும்பியிருக்க மாட்டாயா?"

'அம்மா' என்று உணர்ச்சியோடு கத்தினான் நெடுமாறன்.

அதற்குப் பரிகாரம் தேடுகிறேன் நான். திக்கெட்டுமுள்ள தையலர் கூட்டத்தைத் திரட்டிச் சென்று சிங்களத்தின் கொட்டத்தை அடக்கி வெற்றியோடு திரும்பிவந்து உன்னைச் சிறை மீட்கிறேன்' என்று சொல்லிப் புறப்பட்டாள்.

அவளை இடைமறித்து, "வேண்டாம் அம்மா வேண்டாம். இரண்டாம் படை ஜெயித்துவிட்டது. சிங்கள ஆட்சி இனித் தமிழ்ப் பிரதேசத்தில் இல்லை. சமஷ்டி ஆட்சியில் தமிழும் தமிழ் நாடும் செழிக்க உதய சூரியன் கிளம்பிவிட்டான். அதோ வெற்றிக் களிப்புடன் வரும் வீரர் கூட்டம்" என்று தொலைவில் வந்து கொண்டிருந்த தொண்டர் கூட்டத்தைக் காட்டினான், வெற்றிச் செய்தி தெரிவிக்க ஓடோடி அங்கு வந்த ஒருவன்.

★

தையலம்மை கண்களைக் கசக்கிக் கொண்டாள். பட்டப்பகலில் இப்படிக் கனவா என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். ஆனால் இதே கனவு ஒருநாள் நனவாகாதென்பதில் என்ன சந்தேகம்? தன்னைத்தானே அவள் கேட்டுக்கொண்டாள்.

---

சங்கீத கதா காலக்ஷேபம்

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சென்ற 8-3-57-ல் "பார்வதி திருக்கல்யாணம்" என்னும் பொருள் பற்றி திருமதி பி. எல். சுப்புலட்சுமி சங்கீத கதா காலக்ஷேபம் நிகழ்த்தினார். கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு. கே. கனகரத்தினம் திருமதி சுப்புலட்சுமியாரின் கதா கால க்ஷேபத்தைப் பாராட்டிப் பேசினார். பக்தர்களின் சார்பாக திரு. ப. பெ. சி. கனகசபாபதி ஒர் பண முடிப்பு அளித்தார் என திரு. கே. பழனி வேலாயுதம் அறிவிக்கிறார்.

---

# தேர்தல் கால லஞ்சங்கள்

சென்னை மாகாணத்தில் பொதுத் தேர்தல் முடிந்து விட்டது. அங்கு நடந்த தேர்தலில் எத்தனை விதமான லஞ்சங்கள் இடம் பெற்றன என்பதைப் பற்றி சென்னையிலிருந்து வெளிவரும் 'கல்கி' வார இதழ் 10-3-57லில் தீட்டியுள்ள தலையங்கத்திலிருந்து ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.

தேர்தல் அமர்க்களம் அநேகமாக முடிந்து இப்போது அதை ஆராய்ச்சி செய்ய வேண்டிய கட்டம் ஆரம்பமாகிவிட்டது.

நிருவாக அதிகாரம் வகிக்கும் மந்திரிகள் தேர்தலுக்காகப் பெரிய பெரிய வர்த்தகர்களிடமும் ஆலை முதலாளிகளிடமும், பஸ் கம்பெனிக்காரர்களிடமும் ஏராளமாகப் பணம் வசூல் செய்ததாகப் பத்திரிகைகளில் புகார்கள் வெளியாயின.

இதை மந்திரிகள் இது வரையில் அறிக்கையிலாவது சொற்பொழிவுகளிலாவது மறுக்கவில்லை. மறுக்க இடமில்லை என்றே நம்புகிறோம்.

சர்க்கார் அதிகாரம் வகிக்கும் உத்தியோகஸ்தர் எவரும் எந்த நல்ல காரியத்துக்கும் இம்மாதிரி வசூல் செய்யக்கூடாது. வசூல் செய்தால் தண்டனைக்கு உள்ளாவார். 'அவராகக் கொடுத்தார்' 'இஷ்டப்பட்டுக் கொடுத்தார்' என்றெல்லாம் வாதாட முடியாது.

### இதன் பெயர் லஞ்சந்தான்

பதவி வகிக்கும் மந்திரிகளுக்கும் சாதாரண உத்தியோகஸ்தர்களுக்கும் என்ன வித்தியாசம்? சாதாரண உத்தியோகஸ்தர்களை விட மந்திரிகளுடைய செல்வாக்கும் அவர்களைக் கண்டு பணக்காரர்கள் பயப்படுவதும் அதிகமே. இந்த நடவடிக்கைகளின் பெயர் லஞ்சம் என்பதைத் தவிர வேறில்லை. பதவி வகிக்கும் கட்சி இப்படி நடந்துகொண்டால் அதைத் தனி நபர்களாயினும் சரி, வேறு கட்சிகளாயினும் சரி, மற்றவர்கள் எப்படி எதிர்க்க முடியும்?

இந்தத் தடவை நடந்த தேர்தலில் பணத்தின் பலமே அதிகமாக வேலை செய்தது என்று நிச்சயமாகச் சொல்லலாம். ஒரு ரூபாய் நோட்டுக்களாகவும், இரண்டு ரூபாய் நோட்டுக்களாகவும், ஐந்து ரூபாய் நோட்டுக்களாகவும் ரிஸர்வ் பாங்கியிலிருந்து சென்ற சில வாரங்களாக மாற்றி லட்சக்கணக்கில் எடுத்துச் செல்லப்பட்டதாக எல்லாரும் பேசிக்கொள்கிறார்கள்.

### சிரிப்பார்கள்

தேர்தல் காலத்தில் பதவி வகிக்கும் மந்திரிகள் தங்கள் உத்தியோகங்களிலிருந்து விலகிவிட்டுத் தேர்தல் நடத்துவதுதான் நியாயம். மேல் நாடுகளில் அவ்வாறு செய்வதில்லை என்று சமாதானம் சொல்லப்படுகிறது. அந்தச் சமாதானம் பொருந்தாது. நம்முடைய நடவடிக்கைகளுக்கும் அவர்களுடைய நடவடிக்கைகளுக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. அந்நாடுகளில் பல நாட்கள் ஆறப்போட்டிருந்த பிரச்னைகளை எடுத்துக் கொண்டு ஆளும் கட்சி தேர்தல் சமயத்தில் வோட்டுகள் பெறுவதற்காகச் சலுகைகள் காட்டினால், அந்த நாட்டு மக்கள் சிரிப்பார்கள். நம்முடைய நாட்டில் இது சர்வசாதாரணமாகி விட்டது. இந்த ஒரு மாதத்துக்குள் எத்தனை சலுகைகள் ஆளும் கட்சியினால் பத்திரிகைகளில் விளம்பரம் பெற்றிருக்கின்றன! இவை யாவும் லஞ்சமேயாகும்.

நியாயமான காரியங்களை முந்தியே செய்திருக்க வேண்டும். நியாயம் தெரியாமலோ அல்லது பணக் குறைவினாலோ முந்தியே செய்யாததைத் தேர்தல் சமயத்தில் மளமளவென்று செய்வதன் நோக்கம் என்ன? வோட்டு திரட்டுவது [illegible] என்ன நோக்கம் [illegible] யும்?

### செய்வது என்ன?

சரியான முறை என்ன வென்றால், தேர்தல் காலத்தில் பதவி வகிக்கும் கட்சிக்காரர்கள் தாங்கள் இது வரையில், இந்த ஐந்து ஆண்டுகளில் செய்துவிட்டதை எடுத்துக்காட்ட வேண்டுமே ஒழிய, தேர்தலுக்காக இதைச் செய்யப்போகிறோம், அதைச் செய்யப் போகிறோம் என்று ஒரு புதுக் கட்சியைப்போல் ஆசை காட்டுவது முறையல்ல.

பதவி வகித்தவர்கள், தாங்கள் பதவி வகித்த காலத்தில் என்ன செய்து முடித்தார்கள் என்பதுதான் நியாயமான கேள்வி.

பதவி வகிக்காத கட்சிகள் 'நாங்கள் இதைச் செய்வோம்' 'அதைச் செய்வோம்', 'இதைச் செய்யச் சொன்னோம், அதைப் பதவி வகித்த கட்சி செய்யவில்லை, நாங்கள் அதைச் செய்வோம்' 'இதைச் செய்வோம்' என்றெல்லாம் எதிர்கால வாக்குறுதிகளில் ஈடுபடலாம்.

ஆனால் பதவிவகித்த கட்சி இறந்த காலத்தில் தாங்கள் செய்து முடித்த பணிகளை மாத்திரமே எடுத்துக் காட்ட வேண்டும்.

### அநீதியிலும் அநீதி

இதுவே நீதி. அதை விட்டுவிட்டுத் தேர்தல் சமயத்தில் மக்களைத் திருப்தி செய்வதற்காக அவசரம் அவசரமாக எதுவும் செய்யக் கூடாது. பொதுப் பணத்தைச் செலவு செய்து தாங்கள் ஏதோ தருமம் செய்துவிட்டதாக மக்களின் வாக்குச் சீட்டுகளைப் பெறப் பார்ப்பது அநீதியிலும் அநீதியாகும். எதிர்க்கட்சிக [illegible] இல்லை. இதற்கும் லஞ்சம் என்கிற பெயர்தான் நிலைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் குரல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய இயலாவிட்டாலும் எம். ஈ. பியின் திட்டங்கட்குத் தடை போட்டு எதிர்த்துப் பேசுவதற்கு நெஞ்சிலே வீரமில்லாவிட்டாலும் வீரர்கட்கு மாருய் வீருப்பு பேசாமல் இருத்தலே மேலாகும்.

இனத்தை இனம் வெறுத்து ஒருபோதும் முன்னேற முடியாது. நச்சுப் பொய்கையை நல்ல நீரென நினைத்து நீந்திக் குதித்தாடுகின்றவரே! பொய்கையின் போக்கு: போகப் போகத்தான் தெரிய வரும்.

சிங்களம் மட்டும் மசோதா நிறைவேறி அரச கரும மொழியாய் அரச பீடம் ஏறியதும் நாளடைவிலே யாவும் திருத்தப்பட்டு பண்டுதொட்டு ''பட்டிருப்பு'' என பேசிவரும் தங்கள் தொகுதி ''பண்டார நாயகாபுர'' என மாற்றப் பட்டால் எதிர்மன்னசிங்கம் எட்வின் டீ. சில்வாவாக, கந்தையா களுவண்டாவாக, சுப்புலெட்சுமி சுதுமெனிக்காவாக மாற்றப்பட்டால் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா?

வீட்டிலே ''அப்பா'' என்று அன்னை மொழியிலே தனித் தமிழ் மொழியிலே அழைக்கின்ற குழந்தை நாளை ''தாத்தா'' என்ருல் உங்கள் மனம் என்ன பாடு படும். அலறி அழும் குழந்தையை அள்ளி மடிமீது வைத்து மார்போடணைத்து மழலைக்குத் தீந்தமிழ்ப் பாலை ஊட்டி ''அழாதே! அழாதே!! மகனே! அந்தா வாருர் அப்பா'' என்று தீந்தமிழால் மழலையை தாபரிக்கும் தாய்! தங்கள் மனையாள், ''அண்டாண்டே எப்பா புத்தா அறே எனவா தாத்தா'' என்று சொல்லிக்கொடுக்கும் காலம் வரப்போகிறது உங்கள் செயலால்.

கே. டி. ஏகாம்பரம்,
கல்முனை.
8-3-57

## இது உண்மையா?

சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்த தமிழ் அரசு கட்சிக் கூட்டத்தில் தமிழ் மொழி விடயத்தில் எந்தக் கட்சி போராடினலும், தமிழ் அரசுக் கட்சி அதற்குத் தடையாய் ஒருபோதும் நிற்க மாட்டாது என ஒரு பிரமுகர் பேசினர். அதை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் வரவேற்கிருர்கள். இவ்விடயத்தில் தமிழ் அரசு கட்சி தடையாய் ஒருபோதும் இருந்தது இல்லை. ஆனல் தற்பொழுது தமிழ் அரசுக் கட்சியில்அங்கத்தவர்களாய் இருக்கும் சிலர் வேறு கட்சி கொண்டுவந்தால் அதை எதிர்ப்பதற்கு எத்தனிப்பதைப்பற்றி தமிழ் அரசுக் கட்சியில் அதிருப்தியான எண்ணங்கள் ஏற்படுகின்றன. அதைத் திருத்தி நடத்துவதற்கு எங்கள் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள் ஊக்கம் எடுப்பார்கள் என்று எண்ணுகின்றேன்.

உதாரணமாக காங்கேசன் துறை நகரசபைக் கூட்டத்தில் ஒரு சுயேட்சையான ஒரு அங்கத்தவர் தமிழ் மொழியிலேயே ஏனைய அலுவல்களும் நடக்கவேண்டும் என்று ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தார். அதை சபையில் உள்ள தமிழ் அரசு அங்கத்தவர்கள் எதிர்த்ததாக அறிந்தேன். இதை சுதந்திரனின் ஆசிரியராகிய நீங்கள் நன்ருக ஆராய்ந்து உங்கள் பத்திரிகையின்மூலமாக தமிழ் பேசும் மக்களின் மனதில் இருக்கும் அபிப்பிராயங்களை தெளிவுபடுத்த விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் சில காங்சேன்துறை வாசிகளுடன் கதைத்தளவில் இந்த விடயத்தினுல் தமிழ் அரசு கட்சியில் உள்ள நம்பிக்கையையும் இழந்து விட்டார்கள் போல் தோன்றுகிறது. இதையிட்டு தமிழ் அரசுக் கட்சிக்கு வாதாடுகிறவனுகிய நான் என்னுல்கூடியளவு அவர்களுக்கு பதில் சொல்ல முடியவில்லை.

ச. செ. சுப்பிரமணியம்,
93, கோட்டடித் தெரு,
கொழும்பு.

## நான் யார்?

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐயோ! அவர்கள் என்னைப் படுத்தும்பாடு சொல்லித் திருமா? உடல் வேறு; கழுத்து வேருக ஆக்கி என்னைக் கொன்று விட்டு போதாக் குறைக்குக் குளிப்பாட்டி, கொள்ளி வைக்கப் போகிருர்களே! என்று எண்ணும் சமயத்தில் என்னைத் திரும்பவும் முழு உருவமாக ஆக்கிவிடுவார்கள். சில வேளைகளில் ஒருவனின் உடம்போடு இன்னெருவனின் கழுத்தைப் பூட்டி, பிரமாவாலும் முடியாத அபூர்வ சிருஷ்டியைச் செய்கிருன் மனிதன். எப்படித்தான் நாம் கஷ்டப்பட்டாலும் என் சந்ததி தழைத்தோங்க மனித ஜென்மம் நீடூழி வாழ்க!

இவ்வளவும்கூறிவிட்டேன் நான் யாரென்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

—வே. கமலாதேவி,
(வ. ம. இல. 634)
கொக்குவில், கிழக்கு.

## ஏமாற்றம்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி? சரி பதிலைச் சொல்கிறேன் பார்! மூதேவியே நீ இனி ஒருகணமேனும் என் முன்தோன்ருதேஎன்றுவரங் கேட்டான். அவளும் கொடுத்தருளி மறைந்தாள்! இது வேடிக்கையாக இல்லை?

—ச. தவராசா,
(வ. ம. இ. 508)
ஈச்சந்திவு.

## வயதானவர்களோடு ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போக்கு இளையவர்களுக்கு எப்போதும் சவால் விடுவது போலவே தோன்றும். எனினும் ஒருகால் அவற்றைப் புரிந்துகொண்டால் அவற்றிற்கேற்ப நடப்பது சாத்தியமும் சுலபமுமாகும். அப்படி நடப்பதனுல் குடும்ப சௌஜன்யத்தைப் பாதுகாத்து மனநிம்மதியோடு வாழலாம். அப்படிச் செய்யாமல் வேறென்னதான் செய்வது? இளையவர்கள் எல்லோருமே காலப்போக்கில் முதியோராக வேண்டியவர்கள்தானே!

கெயிட்டி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிவாஜி கணேசன், ஜி. வரலட்சுமி, ஸ்ரீராம், ராஜசுலோசன

நடிக்கும்

"வாழ்விலே ஒரு நாள்"

செல்லமஹால்

எம். ஜி ராமச்சந்திரன், பி. பானுமதி


திறம்பட நடிக்கும்

மதுரை வீரன்



மகிழ்ச்சியூட்டும் 5-வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு)
ஜோதி (திருகோணமலை)
ராணி (யாழ்ப்பாணம்)
போகம்பரை (கண்டி)
ஸ்டார் (பதுளை)
ப்ரீதி (ஹட்டன்)



தினசரி மாலை 6, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பகல் காட்சி பிற்பகல் 2 மணி, ஞாயிறு காலைக் காட்சி 10 மணி;

வீரத்தின் சிகரத்தையே அடைந்துவிட்ட ஆதர்ஸ புருஷனுக்குத் தன் காதலை அர்ப்பணித்து அவன் காலடியில் கிடக்கும் பாக்கியம் பெறப் பைங்கொடி துடிக்கிருள்......இதைப் பார்ப்போரின் உள்ளமே "படக்...படக்" என்று அடித்துப் பாத்திரங்களோடு இரண்டறக் கலந்து உறவாடும்.........

எம். ஜி. ராமச்சந்திரன், அஞ்சலிதேவி, வீரப்பா, வாலட்சுமி, கே. ஏ. தங்கவேலு, டி. பி. முத்துலட்சுமி, கிருஷ்ணன்-மதுரம், டி. பாலசுப்பிரமணியம் நடிக்கும்

சக்கரவர்த்தித்திருமகள்

சுத்தப்புரட்சி நடிகர் எம். ஜி. ஆரின் அபாரமான கத்திச்சண்டை குத்துச் சண்டை, வாட் போர், மற்போர், காதலியை மீட்கக் காட்டரசனேடு அவர் போரிடும் கட்டம் அற்புதம்!

நடனங்கள்:

ஈ. வி. சரோஜா ராகினி வி. [illegible]

முருகன (ஜிந்துப்பிட்டி)

தினசரி மாலை 6, இரவு 9-30, சனி பிற்பகல் 2 மணி, ஞாயிறு காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30 மணி.

ஜெமினி கணேசன், சாவித்திரி, சந்திரபாபு நடித்த

மாமன் மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதி சுதந்திரன் மாணவர் மன்றம்

## வளர்மதி புதிய மருமக்கள்

1289 த. சுப்பிரமணியம், சுளிபுரம்
1290 ம. பாலசிங்கம், புங்குடுதீவு கிழக்கு
1291 செல்வி அ. றெஜீனு கரம்பன் கிழக்கு.
1292 யூ. எல். எம். ஹனிபா, பாலமுனை.
1293 சி. சோமசுந்தரம், பளுகாமம்.
1294 செ. நடராசா, சங்கரத்தை.
1295 நா. சதானந்தம், புங்குடுதீவு.
1296 பொன். செல்வத்துரை, திருக்காட்டுப்பள்ளி.
1297 செல்வி எம். ஏ. தங்கராணி, கரவெட்டி.
1298 அ. ஞானமணி, வெள்ளவத்தை.
1299 செல்வி வி. செல்வராணி, பத்தமேனி.
1300 க. அ. செல்வநாயகம், தெமட்டகொடை.
1301 உவ். எஸ். அலாவுதீன், பசறை.
1302 சி. பாபநாசசிவம், சிக்கினைற்றுப.
1303 வ. இராசேந்திரம், திருகோணமலை.
1304 க. சிவராசசுந்தரம், யாழ்ப்பாணம்.
1305 செல்வி இ. கமலாதேவி, இறங்குவானை.
1306 அ. தாசுரமுகம்மது பத்தாவ.
1307 எம். எஸ். சினிஷமர் சத்தாப், வறக்கப்பொலை.
1308 மு. இராக்கு, பேலியகொடை.
1309 பி. கே. மகாதேவன், பேலியகொடை.
1310 எச். எம். ஐயூபு, கல்பொக்க.
1311 எம். ஐ. முகம்மது, கல்பொக்க.
1312 ஏ. எச். எம். ஜிப்ரி, வெலிகாமம்.
1313 எம். பீ. எம். சலீம், வெலிகாமம்.
1314 எம். பதஹுன்ஸ். கல்பொக்கை.
1315 இரா நவமணி, மருதானை.
1316 செல்வி இ. ஞானம்பிகை, பண்டத்தரிப்பு.
1317 இ. பாலேந்திரன், குளமன்கால்.
1318 ச. பாலசுப்பிரமணியம், புலோலி கிழக்கு,
1319 செ. தியாகராசா, பொகவந்தலாவை.
1320 க. இராமமூர்த்தி, உடப்பு.
1321 த. புவனசிங்கம், இரான்குளம்.
1322 வீ. நடராசா, உடப்பு.
1323 எம். ஏ. எம். உசன் ஓட்டமாவடி.
1324 து. உலகநாதன், சுண்டிக்குளி.
1325 எம். எம். எஸ். உனதல் மௌலானு, கல்பொக்கை.
1326 ஞா. தேவதாஸ், யாசையூர்.
1327 ஆர். மாணிக்கம், கலஹா.
1328 மு. பொன்னம்பலம், இரத்தினபுரி.
1329 சி. தங்கவேல், திமிலைதீவு.
1330 பொ. கதிர்காமநாதன், சுந்தாவள வீதி.
1331 யோக சுந்தரராசா, க. மல்வாகம்.
1332 எஸ். கே. சண்முகநாதன், யாழ்ப்பாணம்.
1333 கொ. கணேசநாதன், வெள்ளவத்தை.
1334 ஜே. அப்துல் முத்தலீபு, சாய்ந்தமருது.
1335 பீ. சந்திரவதி, பொத்துவில்.
1336 எஸ். சுகபதி, பொத்துவில்.
1337 கே. கே. இராசையா, நாஞட்டான்.
1338 க. மாணிக்கவாசகம், பட்டிருப்பு.
1339 ஏ. ஆர். ராஜா, மடுல்சீமை.
1340 த. சண்முகநாதன், இணுவில்.
1341 எஸ். அலோஷியஸ், மட்டக்களப்பு.

# இரண்டு புதிர்கள்

**அன்பான மருமக்களே!**

வளர்மதியின் வளர்ச்சிக்காக நீங்கள் காட்டி வரும் பேராதரவை என்னுல் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.... அதிலும் குறிப்பாகச் சில மருமக்கள் ஒவ்வொரு வாரமும் விஷயங்கள் எழுதியும், கடிதங்கள் எழுதியும் மாமாவைத் திணறடித்து வருகின்றார்கள்!

கந்தகெதரையில் சோ. இராசேந்திரம் என்ற மருமகன் இருக்கின்ருர்! அப்பப்பா...... எத்தனை அழகான விஷயங்களையெல்லாம் எழுதி அனுப்புகின்ருர் தெரியுமா?

சென்ற வாரம் மருமகன் இராசேந்திரம் இரண்டு புதிர்களை அனுப்பியிருந்தார். அப்புதிர்களைக் கீழே வெளியிட்டிருக்கின்றேன்......

புதிர்களின் விடைகளை 'போஸ்ட் கார்டு'களில் மட்டும் எழுதி, உங்கள் பெயர் விலாசமுடன், வளர்மதி, C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்று விலாசமிட்டு அனுப்புங்கள். போஸ்ட் கார்டில் விடைகளை மட்டுமேதான் எழுதவேண்டும். விடைகள் யாவும் 22—3—57க்கு முன்னர் மாமாவுக்குக் கிடைக்க வேண்டும்.

இரண்டு புதிர்களின் விடைகளையும் சரியாக எழுதியனுப்பும் மருமக்கள் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படும்......மகிழ்ச்சிதானே!

மிக்க அன்புள்ள,
சுதந்திரன் மாமா.

## 1. கற்பூரம் வாங்குதல்

ஒருவன் கொஞ்சம் பணத்துடன் ஒரு கோயிலுக்குப் போனுன். கற்பூரம் வாங்குவதற்கு அப்பணம் போதாது. கோயிற் படிக்கட்டில் காணிக்கை வைக்குமிடத்தில் அப்பணத்தை வைத்தான். சிறு நேரத்துள் அவன் வைத்ததைப்போல் ஒரு மடங்குப் பணம் அத்துடன் காணிக்கையாகச் சேர்ந்தது. அவற்றை எடுத்துக் கற்பூரம் வாங்கிக் கொளுத்திவிட்டு மீதிப் பணத்தோடு மற்ருெரு கோயிலுக்குப் போனுன். அங்கும் இவ்வாறே படிக்கட்டில் வைத்தான். அவன் வைத்ததைப்போல் ஒரு மடங்குப் பணம் சேர்ந்தது. அங்கும் கற்பூரம் வாங்கிக் கொளுத்திவிட்டு மீதிப் பணத்துடன் இன்னுெரு கோயிலுக்குப் போனுன். அங்கும் இவ்விதமே படிக்கட்டில் வைத்தான். அதைப்போல் ஒரு மடங்குப் பணம் சேர்ந்தது. அதை எடுத்துக் கற்பூரம் வாங்கினுன். பணம் சரியாய் இருந்தது. கொளுத்திவிட்டுச் சந்தோஷமாய் வீடு சென்ருன். அவன் கொண்டு சென்ற பணம் எவ்வளவு? கற்பூரம் என்ன விலை?

## 2. எலுமிச்சங்காய் விநோதம்

ஒருவன் ஒரு சோலையுட் புகுந்து எவரும் அறியாமற் கொஞ்சம் எலுமிச்சங் காய்களைப் பறித்து ஒரு பையுள் போட்டுக்கொண்டு வந்தான். வழியிலே மூன்று காவற்காரர்களைக் கடக்கவேண்டி இருந்தது. முதற் காவற்காரன் அக்காய்களில் அரைவாசியைத் தரும்படி கேட்டான். 'சரி, அப்படியே தருகிறேன். திரும்ப நீ எனக்கு அதில் ஒரு காயைத் தரவேண்டும்' என்ருன் காய் பறித்தவன். அவனும் சரியென்று ஒப்புக் கொண்டான். இவ்வண்ணமே மூன்று காவற்காரர்களுக்கும் சரி அரைவாசிக் காயைக் கொடுத்துக் கொடுத்து அவர்களிடமிருந்து ஒவ்வொரு காயினை வாங்கி வாங்கி அவர்களைக் கடந்துபோகும்போது அவன் பறித்த அளவு காய்களே கொண்டு சென்ருன். அவன் பறித்த காய்கள் எத்தனை?

## சுத்தக் காற்று

மனிதர்களாகிய எமக்கு உலகில் சுகஜீவிகளாக வாழ வேண்டுமானுல் உயிருடன் வாழ முதலாவது எமக்கு காற்று இன்றியமையாதது. காற்றின்றி நாம் ஒரு நிமிடமாவது ஜீவிக்க முடியாது. மரங்களிலுள்ள இலை தழைகள் அசையும்பொழுது நாம் காற்றடிக்கிறது என்று சொல்கிருேம்.

காற்று எங்கு இருந்து உற்பத்தியாகிறது என்பது எமக்குத் தெரியாது. நாம் சுவாசிக்கும் காற்று சுத்தக் காற்ருயிருத்தல் வேண்டும்.

மனிதன் உட்புறமும் வெளிப்புறமும் சுவாசிப்பதும், சுவாசத்தை வெளியனுப்புவதுமாக இருக்கிருன். பிராணவாயுவை உட்கொண்டு கரிபமலவாயுவை வெளிவிடுகிருன். நாம் அசுத்தக் காற்றை உட்கொள்வோமானுல் பல வியாதிகள் உண்டாகும். நாம் படுக்கும் அறைகள் விசாலம் உள்ளனவாயும், சுத்தக் காற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியனவாயிருத்தல் வேண்டும். நாம் விடும் அசுத்தக் காற்றை மரங்கள் சுவாசித்து (கரியமலவாயுவை) அவை பிராணவாயுவை வெளிப்படுத்துகின்றன. இப்படியே அவைகள் தங்கள் வேலைகளை ஓயாது செய்துகொண்டிருக்கின்றன.

காற்றுக்கு மரங்களையும் யாம் வளர்த்தல் வேண்டும். ஆனுல் வீட்டினுள் இலை செடிகளை வைத்துக் கொண்டு நித்திரை செய்யக்கூடாது. நம் உடம்பில் காற்றில்லாவிடில் நாம் அசையமுடியாதல்லவா? நம்மில் காற்று இல்லாவிடில் நாம் அசைந்து செயலாற்ற முடியாது.

—செல்வன்
ஜே. செபின்பநாயகம்
மண்டூர்.

## ஏமாற்றம்

நண்பா! நீர் சொல்கிறீரா பரீட்சையில் வந்த பத்துக் கேள்விக்கும் பதில் எழுதி விட்டேனென்று. சரி நானுேர் கேள்வி கேட்கிறேன், அதற்கு நீர் விடை கூறிவிடுகிறீரா? அம்பிகா! சொல்கிறேன் கேள்:—

''பத்து மாணவர்கள் கோயிலுக்குப் போய் ஒருவனைத் தவிர மற்ற ஒன்பது பேரும் சீதேவியை வணங்கினுர்கள். சீதேவி வந்தாள். அவர்கள் படிப்புத்தா! பணம் தா! என்று கேட்டார்கள். மற்றவனுன நடராசன் மட்டும் மூதேவியை வணங்கினுன். மூதேவி வந்தாள். அப்போது மூதேவியிடம் நடராசன் என்ன கேட்டிருப்பான்''?

ரஞ்சன் அம்பிகாபதியின் முகத்தை புன்சிரிப்புடன் பார்த்து வெட்கித் தலை குனிந்தான். எப்படி ரஞ்சா

(13-ம் பக்கம் பார்க்க)

## ப்பூ ...!இதுதானு......?

''டேய் ராமு கேட்டாயா சங்கதியை, நான் நேற்றுச் செவ்வாய் மண்டலத்துக்குப் போயிருந்தேன் என்ருன் குமார்.

செவ்வாய் மண்டலத்துக்கா......?பெரிய பெரிய விஞ்ஞானிகள்கூட செவ்வாய் மண்டலத்துக்குப் போக முடியாமல் திண்டாடுறுங்க, நீ என்னடான்னு ... ......என்றிழுத்தான் ராமு.

டேய்! விஷயத்தைக் கேளடா நானும் இரண்டு விஞ்ஞானிகளும், நேற்று ஒரு ரொக்கட் விமானத்தில் செவ்வாய் மண்டலத்தை நோக்கிப் பிரயாணமானுேம். எரிநட்சத்திரங்களாலும், நவக்கிரகங்களாலும் நாங்கள் பட்டபாடு, அப்பப்பா சொல்ல முடியாது. எப்படியோ இவைகளை எல்லாம் தாண்டிக்கொண்டு போகும்போது, திடீரென பறக்கும் தட்டு ஒன்று எங்கள் முன் தோன்றி எங்களின் ரொக்கட் விமானத்தை ஒரே மோதலில் சுக்கு நூருக்கி விட்டது. நாங்களும் ஆகாய வெளியில் தூக்கி வீசப்பட்டோம். எதிர்பாராமல் நடந்த இவ் விபத்தைக் கண்டதும், ''ஐயோ அம்மா'' என்றலறிக்கொண்டு கண்விழித்தேன். என் அப்போது அம்மா ஓடிவந்து ஏண்டா கண்ணு கனவா கண்டாய் என்று கேட்டபோது தான் நான் கண்டது கனவு என்று தெரிந்தது என்ருன் குமார்.

ப்பூ.........!இதுதானு......? என்ருன் ராமு.

—உதயகுமார்

# நான் யார்?

'சொல்லுங்கள்' என்றதும், 'என்னத்தை' யென்று கேட்கிறீர்கள்? நான் யார் என்றுதான்! ஆளைக் காணுமல் எப்படி சொல்வதென்று திகைக்காதீர்கள்! இதோ உங்கள் கையில் உட்கார்ந்திருக்கிறேனே! உங்களைப் போல்தான் எனக்கும் உடம்புண்டு. கழுத்துண்டு. ஆனுல் தலையில்லை; தொப்பி உண்டு, வாயில்லை; நாக்குண்டு. இப்படியும் நடக்குமாவென்று சிரிக்கிறீர்களா? என் உணவு பச்சை, சிவப்பு, நீலம், கறுப்பு முதலிய நிறத் தண்ணீர்தான். குடிகாரன் என்று சந்தேகிக்கிறீர்களா? கள்ளு சாட்சியாய் இல்லவே இல்லை! நான்தான் குடிக்காதே; கொல்லாதே என்று கூறுபவர்களுக்கு ஒத்தாசை புரிகிறேன். ஆனுல் சிலவேளைகளில் துஷ்டர்களின் கெட்ட செய்கைகளுக்கும் நான் உதவவேண்டி இருக்கிறது. என்னைப் படைத்த மானிட பரமாத்மாவே! நான் என்ன செய்வேன்? நீங்கள் எல்லோரும் நானின்றி வளர்மதிக்கு விஷயங்கள் அனுப்ப முடியுமா? சிலவேளைகளில் நீங்கள் எழுதும்போது நான் வாந்தி எடுத்தால் ''ஐயோ! வளர்மதி மாமா ஏசப் போகிருரே'' என்று நீங்கள் தவிக்கும் தவிப்புதான் என்னே! என்னைக் கொண்டே என்னைப் பற்றி எழுதுகிறீர்களே. மிகவும் சந்தோஷப் படுகிறேன். ஆனுல் சிலவேளைகளில் சிலகைகளிற் சிக்கிவிட்டால்

(13-ம் பக்கம் பார்க்க)

**வ**ளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 1

பெயர்......................................................

பாடசாலை......................................................

விலாசம்......................................................

......................................................

...................................... ......................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

# கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை தமிழினம் போரிடத் தயங்காது

## சிறையிலடைப்பேன் - சுடுவேன் என்று மிரட்டிப் பயனில்லை

## 25 இலட்சம் தமிழ்ப் பேசும் மக்களுக்கு சொந்தநாட்டில் இடமில்லையென்றால்...?

**"தமிழன் தன் மடமையினாலும், ஒற்றுமைச் சீர்குலைவினாலும் அழிந்துகொண்டிருக்கிறான். விஷப் பாம்புக்கு குடியிருக்கப் புற்றுண்டு. நண்டுக்கு வளையுண்டு. குள்ளநரிக்குப் புதர் உண்டு. கொடிய சிங்கத்திற்கு குகையுண்டு. நாய்க்குச் சங்கிலியுண்டு. ஆனால் இலங்கைவாழ் இருபத்தைந்து இலட்சம் தமிழ் பேசும் மக்களுக்கு இன்றுஇங்கே இருக்க இடமில்லை"**

இவ்வாறு தோப்பு பாரதி கலாமன்றத்தின் ஆதரவில் அண்மையில் நடைபெற்ற வட்டமேசை மகாநாடு பற்றி ஆராயக்கூடிய பொதுக்கூட்டத்தில் திரு வெ. நடனம் பேசுகையில் கூறினார்.

"தமிழரின் தளரா எதிர்ப்பைக் கண்டு பிரதமர் பண்டாரநாயகா வட்டமேசை மகாநாடு கூட்ட முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. நாம் வேண்டுவது சம உரிமை, சலுகையல்ல. சம உரிமை அளிக்க மனமிருந்தால் சிங்கள மசோதாவை மூட்டை கட்டி வைத்துவிட்டு, வட்டமேசை மகாநாட்டைக் கூட்டட்டும். அதை விடுத்து பிச்சைக்காரருக்குக் கொடுப்பதுபோல் சலுகையளிக்க மனமிருந்தால், அம்முயற்சியைக் கைவிட்டு இன்பமாய் வாழட்டும். தமிழருக்கு சம உரிமை பெற்றுக்கொள்ள வழி தெரியும். போதிக்க வேண்டியதில்லை"

என்றவாறு கூறும் வட்டமேசை மகாநாடுபற்றிய தீர்மானத்தை செயலாளர் ஆ.பே.ப. பிள்ளை பிரேரித்தார். திரு பிள்ளை தீர்மானத்தை யொட்டிப் பேசியதாவது:-

"வாழையடி வாழையென உரிமையோடு இங்கு வாழ்ந்து வரும் மறத் தமிழினத்தை, ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் வகுப்புவெறியர்களான எம். ஈ. பி. வாதிகள் பூண்டோடழிக்க திட்டம் திட்டி செயல் புரிவது அறிந்த விடயமே.

அநீதியின் கோரப் பிடியிலே—அனாசாரத்தின் விளிம்பிலே—அநாகரிகத்தின் நடுவே சிக்கி உழலும் அரசாட்சியாரின் மோசமான—விபரீதமான போக்குக்கு, மறத் தமிழினம் பணிந்து போகாது. உச்சி மீது வானிடிந்து வீழ்ந்தாலும், ஆட்சியாளர் சிறையிலடைப்போமென மிரட்டினாலும் சுடுவோம் என்று அச்சுறுத்தினாலும் அடிபணியமாட்டாது தமிழினம்.

அடிக்க அடிக்க அம்மியும் நகருமாப்போல் தமிழினம் எதிர்க்க எதிர்க்க பிரதமர் பண்டாரநாயகா, புத்த பிக்குகளின் கைப்பொம்மையாக—பம்பரமாக இருப்பினும், சுயநல உணர்ச்சியை சிறிது சிறிதாகக் கைவிடத் தலைப்பட்டிருக்கிறார். வட்டமேசை மகாநாட்டின் மதிப்புக்கு களங்கத்தை உண்டு பண்ணாது அவர் ஒழுகட்டும்!

கடைசித் துளி இரத்தமிருக்கும் வரையில் உரிமைக்காக போரிடத் தயங்காது தமிழினம்"

திரு ஜெ. வின்சென்ற் டிபோல் (பொருளாளர்) திரு மு. சுந்தரம், திரு கிறகோரி (துணைப் பொருளாளர்) ஆகியோரும் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்கள்.

---

### ஊவா மாகாண தமிழாசிரியர் சங்கம்

ஊவா மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் கமிட்டிக் கூட்டம் கடந்த 2-3-57 வதுளை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ஏ. சே. முருகேசு தலைமையில் கூடியது.

1957ம் ஆண்டு சங்க வேலைத் திட்டத்தில் பின்வருவன சேர்க்கப்பட்டன:-

(அ) உபவேதனங்களுள்ள பொதுக்கூட்டங்களை ஒழுங்கு செய்தல்.

(ஆ) பாடசாலை மாணவர்களுக்காக;

(1) வியாசப்போட்டி
(2) பேச்சுப் போட்டி.
(3) சங்கீதப் போட்டி வைத்தல்.

(4) ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்புகள் நடத்துதல.

பின்னர் சில தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

---

### சிவநெறிக் கழக அங்குரார்ப்பணம்

அளவெட்டி சிவநெறிக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அளவெட்டி சதானந்த வித்தியாலயத்தில் கடந்த 22-2-57ல் நடைபெற்றது. சதானந்த வித்தியாலய மாணவரின் சமய வளர்ச்சிக்கும் கழக வளர்ச்சிக்கும் பயன் தரக்கூடிய பல திட்டங்கள் வகுத்துச் செயலாற்ற மேற்படி கழகச் செயற் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

26-2-57 செவ்வாய்க்கிழமை பிற்பகல் முதலாவது பொதுக்கூட்டம் நடைபெற்றது. சைவப் புலவர் ச. சச்சிதானந்தம் ஆசிரியர் 'சிவராத்திரி விரத மகிமை' என்னும் விடயம்பற்றி சொற்பொழிவாற்றினர்.

---

### வள்ளுவர் நாடக மன்றம்

வள்ளுவர் நாடக மன்ற உறுப்பினர் கூட்டம் சென்ற 24-2-57ல் அவ்லக் ரோடு, 73ம் எண் இல்லத்தில் தோழர் மா. யோ. தேவதாசன் தலைமையில் கூடிற்று. கூட்டத்தினரை வரவேற்று செயலாளர் மு. அன்பரசன் பேசினார்.

தலைவர் தம் முன்னுரையில் மன்றத்தின் வளர்ச்சி உறுப்பினர்களின் ஒத்துழைப்பில் தங்கி இருக்கிறதென்றும் ஐக்கியத்தோடு பணியாற்றினால் இலங்கையில், வள்ளுவர் நாடக மன்றத்திற்கு நல்ல எதிர்காலமிருக்கிறதென்றும் கூறினார்.

நடப்பு வருடத்திற்குகீழ்க் கண்ட புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: பி. எம். சேகர், செயலாளர்: மா. யோ. தேவதாசன், துணைச்செயலாளர்: வி. செல்லையா, பொருளாளர்: வி. க. செல்லப்பா, விளம்பரச் செயலாளர்: என். இராசதுரை.

---

### ஏறாவூரில் இக்பால் விழா

ஏறாவூர் முஸ்லிம் வாலிபர் இயக்கத்தின் சார்பில் கவிஞர் அல்லாமா இக்பால் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடு முகமாக ஏறாவூர் ஜிப்ரித் தைக்காப்பள்ளி வாசலில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஜனாப் எஸ். எல். எம். காதர் தலைமைவகித்தார்.

இக்பாலின் கவிதைச்சிறப்பைப்பற்றி ஜனாப்களான: எம். எம். சாலி, எஸ். எம். முஸ்தபா, எம். ஏ. உதுமா லெவ்வை, எம். ஐ. எம். சரீப் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். ஜனாப் யூ. எல். தாவூத் நன்றிகூறினார்.

கூட்டத்தில் சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டது.

---

### வாலிப ஐக்கிய மன்றம்

கல்முனை வாலிப ஐக்கிய மன்ற முதலாவது ஆரம்பக் கூட்டம் அண்மையில் கண்ணகி அம்மன் கோயில் அருகாமையிலுள்ள "வள்ளுவன் மைதானத்தில்" திரு எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரளாக மக்கள் சமுகமளித்திருந்தனர்.

இதன் பின் உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது.

தலைவர்: திரு எஸ். சுப்பிரமணியம், உபதலைவர்: திரு. வி. பெரியதம்பி, செயலாளர்: திரு து. முத்துராஜா, இணைச் செயலாளர், திரு பி. சோமசுந்தரம், தனதிகாரி: திரு எஸ். சண்முகம், பரிசோதகர்கள்: திரு டி. கே. ரெத்தினம், திரு. பொ. துரைரத்தினம். அத்துடன் 9 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

---

### அ. இ. அ. சங்க மாத்தறைக் கிளை ஆரம்ப விழா

அகில இலங்கை அருந்ததியர் மாத்தறை கிளை சங்கத்தின் ஆரம்ப விழா 3-3-57ல் அரசினர் சிரேஷ்ட தமிழ் பாடசாலையில் திரு மா. பெ. பாரதி (அ. இ. அ. சங்கத் தலைவர்) தலைமையில் நடைபெற்றது. திரு பாரதி பேசுகையில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைக் குறித்தும், ஹோட்டல் நுழைவைக் குறித்தும் விரிவாக விளக்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

அகன்பின் மாத்தறை அர்பன் சபைத் தலைவர் திரு வில்பிறட் குணசேகரா, வழக்கறிஞர் ஜனாப் ஏ. எம். புகாரி, வழக்கறிஞர் ச. இரத்தினசிங்கம், திருவாளர்கள்: மூ. வேலாயுதம், அ. பி. சுந்தரராஜன், சோ. சித்திரன், அ. பொன்னையா, இராமொ. பெ. சுந்தரலிங்கம், க. சிவசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். இறுதியில் திரு மா. சண்முகம் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

---

### வாலிபர் முன்னேற்றக் கழகம்

கொழும்பு வாலிபர் முன்னேற்றக் கழக செயற் குழு கூட்டம் சமீபத்தில் புளுமண்டல் வீதியிலுள்ள கழகப் பணிமனையில் திரு. இரா. கோயில்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

(1) தமிழுக்காக உயிர் நீத்த திருமலைத் தியாகி நடராசனுக்கும், காலஞ்சென்ற தமிழ்த் தலைவர் செனட்டர் பெரிசுந்தரத்துக்கும் கழகம் தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

(2) இலங்கையில் இந்திய தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. குந்தாலியாவின் நியமனத்தை இக்கழகம் கண்டிக்கிறது. இலங்கையில் தமிழர்கள் அதிகமாக வசிப்பதால் அவர்கள் நன்மையைக் கருதி தமிழறிஞர் ஒருவரை இலங்கையின் தூதுவராக நியமிக்கும்படி இக்கழகம் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

---

### "செந்தமிழும் சிவ நெறியும்"

"சரித்திர ஆசிரியர்களின் சிந்தனைக்கு எட்டாத நமது செந்தமிழும் சிவநெறியும் இன்று க்ஷீணித்து வரக் காரணம் உள்ளிருந்து கொல்லும் வியாதியாக, குருத்துக் கொல்லியாக விளங்கும் சாதி வேறுபாடேயாகும். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கையே தமிழ் மக்களது கொள்கை. அதுவே சிவநெறியின் முடிவுமாகும். சைவ சித்தாந்தத்திலே சாதி என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்தச் சாதி வேறுபாடு சிவநெறியை மட்டுமல்லாமல் தமிழ் பேசும் இனத்தையேபாதிக்கிறது. எனவே தமிழ் பேசும் சிவநெறியாளர்கள் சாதி வேறுபாட்டை மறந்து ஏனைய தமிழர்களுடன் தமிழர்களாக ஒன்றுபடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

மேற்கண்டவாறு திரு. கோவை மகேசன் கோப்பாய் வீரபத்திரர் ஆலயத்தில் நடைபெற்ற 34-வது ஆண்டு சிவராத்திரி விழாவில் 'செந்தமிழும் சிவநெறியும்' என்ற பொருள்பற்றிப் பேசும்போது கூறினார்.

மேற்படி விழாவில் திரு. பே. தம்பையா, ச. தாமோதரம்பிள்ளை முதலியோரும் பேசினர்.

---

## மொழிச் சமத்துவம் இன்றேல் ஐக்கிய இலங்கை இல்லை

## மந்திரி தஹநாயகாவின் மட்டரக இனத்துவேஷ பிரசாரம்

### அட்டன் ஆசிரியர்கள் கண்டனம்

**"மக்கள் ஐக்கிய முன்னணியினர் அதிகாரத்துக்கு வந்தபின் தமிழ்ப் பேசும் மக்களுக்கும் சிங்களம் பேசும் மக்களுக்குமிடையே பெரும் பிளவேற்பட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு மனம் வருந்துகிறோம். தமிழ்ப் பேசும் மக்களுக்கு சிங்கள மக்களுடன் மொழிச் சமத்துவம் அளியாது ஒரு ஐக்கிய இலங்கையை உருவாக்க முயல்வது பகற் கனவாக முடியும் என்பதை அரசியல் வாதிகளுக்கு எடுத்துக் கூறவிரும்புகிறோம்."**

இவ்வாறு அட்டன் பகுதித் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு ஏ. எம். யோசப் தமது மூன்றாவது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி சங்கத்தின் மூன்றாவது வருடாந்தக் கூட்டம் அட்டன் அர்ச். யோன் பொஸ்கோ கல்லூரி மண்டபத்தில் சங்க உபதலைவர் திரு. வே. குலசேகரம் தலைமையில் 2-3-57 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கூடியது.

திரு குலசேகரம் பேசுகையில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களை விளக்கி எதிர்காலத்தில் தமிழ் மக்களும் தமிழாசிரியர்களும் தம் உரிமைகளைப் பாதுகாக்கக் கட்டுப்பாட்டுடன் ஒத்துழைக்க வேண்டுமெனக்கேட்டுக்கொண்டார்.

காரியதரிசியின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: "கல்வி மந்திரி திரு. தஹநாயகா தான் மந்திரி என்ற கோதாவில் இலங்கை மக்கள் அனைவருக்கும்தான் ஒரு பொதுவான மனிதன் என்பதை மறந்து சிங்கள மக்களிடையே தமிழ் மக்களுக்கெதிராகப் பிரசாரம் செய்து வருவதையும், இனத் துவேஷ நோக்கங்களுக்காகத், தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில்பகையுணர்ச்சியை வளர்த்து வருவதையும், தமிழாசிரியர்கள் மட்டில் அவர் கடைப்பிடித்துவரும் பாரபட்சமான கொள்கையையும் மிகவன்மையாகக் கண்டிக்கிறோம்."

நாவலப்பிட்டி சுற்று வட்டார வித்தியாதிகாரி திரு பி. சின்னத்துரை பேசுகையில் "மாணவன் பரீட்சையில் சித்தி எய்தவேண்டுமே, நாம் பெற்ற அறிவை அவனிடம் திணித்துவிட வேண்டுமே என்னும் நோக்கங்களுக்காகக் கல்வி புகட்டாது மாணவன் பெற்ற அறிவைக் கொண்டு நல்லவழியில் ஒழுகப் பயிற்ற வேண்டுமென்றும் அவ்விதம் கற்று, உணர்ந்து, ஒழுகுவதே கல்வியின் நோக்கம்." என்றும் அவர் கூறினார்.

நா. முத்தையாவும் கூட்டத்தில் பேசினார். பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டன.

புதுவருட நிருவாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-திரு வே. குலசேகரம், உபதலைவர்-திருமதி. ஏ. எல். நவரட்னம், காரியதரிசி-திரு ஏ. எம். யோசவ், உபகாரியதரிசி-திரு எஸ். கிதபொன்கலன், தனதிகாரி-திரு இ. செ. நடராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் அரிய திரை விருந்து!

# மகத்தான 3வது வாரம்!

## கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

## விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கெலியா) லக்ஷ்மி (ரத்னபுரி)

## ஆகிய திரைகளில்

ஜெமினி கணேசன்
ஏ. நாகேஸ்வரராவ்
எஸ். வி. ரங்கராவ்
கே. ஏ. தங்கவேலு
கே. சாரங்கபாணி
பிரண்ட் ராமசாமி
மற்றும்



அஞ்சலி தேவி
சாவித்திரி
பி. கண்ணும்பா
எம். என். ராஜம்
கே. ஆர் செல்லம்
எஸ் டி. சுப்புலெட்சுமி
முதலியோர் நடித்தது

## லலிதா பிலிம்ஸாரின்

# மாதர்குல மாணிக்கம்



நடனங்கள்
ராகினி
கமலா
லக்ஷ்மணன்
ரீடா
ஆகியோர்.



இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு சுதந்திரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 1957 மார்ச் மாதம் 17ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org